# சொல்லித் தெரிவதில்லை



வானதி பதிப்பகம்

பூவை. எஸ். ஆறுமுகம்

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✱✱✱

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✱✱✱

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# சொல்லித் தெரிவதில்லை

PSA 11

EASWARI LENDING LIBRARY
Old Newspapers and Books Are Purchased
93, LLOYDS ROAD, MADRAS-6.

எழுதியவர் :

பூவை எஸ். ஆறுமுகம்

வானதி பதிப்பகம்

தி. நகர் சென்னை - 17

முதற்பதிப்பு: ஜனவரி, 1962

முழு உரிமை வானதி பதிப்பகத்திற்கே

விலை ரூ. 2-50

ஜீவோதயம் அச்சகம், சென்னை—5.

# முன்னுரை

தன் நிகர் இல்லாத் தலைவனை உடையதாய் இருக்க வேண்டும் என்று தண்டியாசிரியர் பெருங் காப்பிய அமைப்புக்கு இலக்கணம் கூறுவதைப்போல் நாவல் என்னும் பெருங்கதை அமைப்புக்கு ஏதேனும் ஓர் தன்மையை இலக்கணமாகச் சொல்ல முடியுமா என்று நான் பலமுறை சிந்தித்தது உண்டு. அந்தச் சிந்தனையை நான் இன்னும் முடிக்கவில்லை என்பதும் உண்மை.

ஆனால் அதே சமயத்தில், 'அழகுடைய பொருளுக்கு ஒரே இலக்கணம் அது ஏதோ ஒருவகையில் அழகாக இருக்கிறது' — என்பதுதானே தவிர 'இப்படி இப்படித் தான் அழகாக இருக்கவேண்டும்' — என்பது அன்று என்ற சுதந்திரச் சிந்தனையும் குறுக்கிடுவது வழக்கம்.

இந்த உலகத்தில் கலைகள் — நுண் கலைகள் — நளின கலைகள் யாவும் 'இப்படித் தொடங்கி இப்படி வளர்ந்து இப்படித்தான் முடியவேண்டும்' — என்ற வரையறைச் சிறையில் அடங்காதவை. தலைமுறைக்குத் தலைமுறை மாறியும் தேறியும் வளர்ந்து கொண்டே வருகிற கலைகளை ஒரு குறிப்பிட்ட காலத்தில் தோன்றிய கட்டுப்பாடு என்ருவது அடக்கிவிட முடியுமா ?

சீவக சிந்தாமணியின் காப்பிய அமைப்பு விரிவானது. சிலப்பதிகாரத்தின் காப்பிய அமைப்பு வேறு ஒரு வகையானது. நமது நூற்றுண்டில் தோன்றிய மனேன்மணீயம், பாஞ்சாலி சபதம், பாண்டியன் பரிசு ஆகியவற்றின் காப்பிய அமைப்பு இன்னும் சுருக்கமான — தெளிந்த அமைப்புள்ளவை என்பதை எவரும் மறுக்க மாட்டார்கள். ஒப்புக்கொள்ளவும் செய்வார்கள்.

இன்றைய மறுமலர்ச்சி இலக்கியத்தின் பெருங் காப்பியம் நாவல்தான் என்று வைத்துக்கொண்டால் அப்படிக் கருதுவதையும் மறுக்க முடியாது. தமிழில் 'கமலாம்பாள் சரித்திரமும்' மலையாளத்தில் 'இந்துலேகாவும்' — தோன்றியபின் அவை 'ஆதி நாவல்கள்' என்ற பாரம்பரியப் பெருமையைத் தாங்கி நிற்க அவற்றினும் பெருமை மிகுந்த புதிய நாவல்கள் தோன்றி வளர்வதை நாம் நம்பத்தானே வேண்டும் ?

வேறு வழியில்லாத காரணத்தால் விமர்சகர்களாக மாறிவிட்ட மாஜி நாவலாசிரியர்கள் 'தமிழில் இப்போது

ஒன்றுமில்லை' என்கிறார்கள். இப்போது எழுதிக் கொண்டிருப்பவர்கள் 'மாஜி படைப்புக்களில் என்ன இருந்தது ?' — என்று கேட்கிறார்கள். இது தான் இன்றைய நிலைமை. இது அல்ல ஆனால் தயவுசெய்து வேறு என்ன என்பதை நீங்கள் தான் சொல்லவேண்டும்.

சொந்தத்தில் தன் தேவைகளான கோழி, ஆடு, போன்ற ஆசைகளைத் தான் பூசை செய்யும் தெய்வத்தின் தேவைகளாக மாற்றி ஆவேசம் வரவழைத்துக்கொண்டு பாமரர்களாகிய பக்தர்களைப் பலி கேட்கும் போலிப் பூசாரி போல் விமரிசன தேவதையின் மானத்தைத் தங்கள் சுய தேவை என்கிற ஆவேசத்தால் களங்கப்படுத்திக் கொண்டு வருகிறவர்களைத் தமிழ் விமர்சகர்கள் என்று எப்படி நம்பமுடியும்? வாசகர்களாகிய பக்தர்களை இந்த விமரிசனப் பூசாரிகள் கேட்கும் பலி தங்களைத் தவிர மற்றவர்கள் எழுதிய நல்ல நாவல்கள் அத்தனையையும் தான்! வாசகர்கள் புத்திசாலிகளாயிருந்து பிழைப்பார்களாக! இதை ஒப்புக்கொள்கிறீர்களா ? இல்லையா ? ஒப்புக் கொள்ளா விட்டால் விட்டுவிடுகிறேன், ஏனென்றால் நீங்கள் என்றாவது நம் கட்சியில் சேரவேண்டியவர் என்பதில் நம்பிக்கை வைத்துத்தான் உங்களை விடுகிறேன். உம்மை விட்டுவிட்டு இனி இந்த நாவலுக்கு வருகிறேன். முன்னுரை ஆயிற்றே இது! 'சொல்லித் தெரிவதில்லை' நாவலுக்கு நான் சொல்லித் தெரிய வேண்டிய முன்னுரை. நல்ல குணமோ, எதிர்மறைக் குணமோ, இரண்டுக்கும் நடுவோ, ஏதாவது ஒரு குணமோ தன்னிகர் இல்லாத் தலைவன் வேண்டாமா நாவலுக்கு?

வேண்டும்தானே ? ஆதி காவியமான இராமாயணத்திலிருந்து முந்தாநாள் நாவல் வரை உள்ள விவகாரம் அது.

சிறுகதையிலும் அது உண்டு. ஆனால் சிறு கதையில் உணர்ச்சி எல்லை—கதா பாத்திரங்களின் உணர்ச்சி எல்லையைத்தான் சொல்கிறேன்—குறைவு. நாவலுக்குக் களம், கற்பனை, உணர்ச்சி எல்லை, எல்லாமே அதிகம்தானே ? அதனால் 'தன்னிகரில்லாப் பாத்திரங்கள்' நாவலுக்கு அவசியம் என்பதை இப்போது நிச்சயம் ஒப்புக் கொள்வீர்கள்.

திரு. பூவை. ஆறுமுகம் ஆர்வம் நிறைந்தவர். அவருடைய இந்த நாவலின் தொடக்கத்தில், தொழிலதிபர் துளசிங்கம் செய்வதைப்போல் நாமும் அண்ணாமலை மன்றத்து மேடைக்குப்போய்த் தீவலம் நாடகத்தைப் பார்க்கிறோம்.

நமக்கும் குத்து விளக்குகள் பரிசளிக்க வேண்டுமென்கிற ஆசை வருகிறது. மஹேஸ்வரி நம்மைக் கவர்கிறாள்.

'தமிழ்ச் சித்தன்' இன்று தமிழ் நாட்டில் பதினெட்டிலிருந்து முப்பதுவரை வயதுள்ள சராசரி இளைஞர்களின் மனம் முதலில் வளரத் தொடங்குவதையும், பின்பு மாறுவதையும், ஒரளவு பிரதிநிதியாயிருந்து பிரதிபலிக்கிறான். இறுதியில் அவனுக்குக் கடவுள் நம்பிக்கை வருகிறபோது வாழும் நம்பிக்கை போய்விடுகிறது. மஹேஸ்வரி 'அநுபவப் பொருளாகாதவள்' என்ற இரகசியத்தைக் கடிதமூலம் வெளிப்படுத்துகிற இடத்தில் நாசூக்காக எழுதியிருப்பது பாராட்டத்தக்கது. காளத்தி பரிதாபத்துக்குரியவன்! பாவம். மஹேஸ்வரியும் அப்படித்தான். ஆசிரியரே சொல்கிற மாதிரி, 'அந்த அமைதி தனி, அந்தக் கம்பீரம் தனி, அந்த வீரம் தனி, அந்த அழகு தனி, அந்தக் கனிவே தனி, அந்தக் கனவே தனி, அந்தக் கதையே தனி' தான். (பக்கம் 143)

ஆம்! இந்தக் கதையே தனிதான்!

திரு. பூவையின் நடையில் உருவகங்கள் ஏராளம். சொல் அலங்காரமும் ஏராளம்! ஏராளம்!

இந்தக் கதையின் முடிவு இரண்டுவிதத்தில் சோகம். நிறைவேறியும் நிறைவேறாமல் அழிந்த ஆசை ஒன்று. நிறைவேற எண்ணுமுன்பே அழிந்த ஆசை ஒன்று; என்னவென்று கேட்கிறீர்களா? அப்படி வாருங்கள் வழிக்கு!

இதோ என்பதில் :—இவை என்ன என்பதை இந்த நாவலில் படியுங்கள். இவை என்ன என்று நானே இந்த முன்னுரையில் சொல்லிவிடுவது வீண் வம்பு. ஏனென்றால் சில வாசகர்களுக்கு ரொம்ப ரொம்ப (இரயிலேறுகிற அவசரத்தில் நாவல் படிப்பதுபோல்) அவசரத் தன்மை உண்டு. அவர்கள் முன்னுரையோடு நின்றுவிடக்கூடாதென்பதற்காக இப்படிக் கூடமாகவிட்டு விட்டு விட்டேன்.

தமிழ்ச் சித்தனை உங்கள் சித்தத்தில் நிற்கச் செய்ய முடியுமா என்று பாருங்கள்!

இதற்கு மேல்......?
நான் சொல்ல ஒன்றுமில்லை.
சொல்லித் தெரிவதில்லை!

பூவிருந்தவல்லி
சென்னை
29—11—61

அன்பன்,
**நா. பார்த்தசாரதி**

# என்னுரை

பண்பாட்டுப் பெருமை கொண்டவன் தமிழ்ப் பெருங்குடி மகன் இத்தகைய நேர்மையின் நியதி, தெய்வத் தமிழ் மண்ணுக்கே சொந்தம். இந்தச் சொந்தத்தின் பந்தத்தில் உறவு பூண்டொழுகும் நெறி முறைகளிலே காதல் எனும் அழகிய தத்துவமும் ஒன்று. அது, வாழ்க்கைக்குக் கூத்துக் களம் ஆவதைப்போல, அதே காதலென்கிற எழிற்கனவு, வாழ்வையே கூத்தாக்கிக் காட்டுவதும் இயல்பு !

இவ் வியல்புதான், வாழ்வின் உயிர் நிலையெனப்படும் மணி மண்டபம். இம் மணி மண்டபத்தின் நான்கு திசைகளிலே சில குரல்களைக் கேட்டேன். கேட்ட குரல்களை எண்ணிக் கணக்கெடுத்தேன். துலாம்பரமாய்க் கேட்ட குரல்கள் : மூன்று.

ஒன்று : மஹேஸ்வரி.

இரண்டு : காளத்தி நாதன்.

மூன்று : தமிழ்ச் சித்தன்.

டாக்டர் நண்பர் ஒருவர் ; கல்லூரித் தோழர். ஒரு முறை, பெண் ஒருத்தியின் பரிதாபத்துக்குரிய—ஆனால், பதட்டப் படுத்தக்கூடிய உடற் கூற்றுக் கோளாற்றினைப் பற்றிச் சொன்னார். முகம் அறியேன் ; அகம் அறிந்தேன். அவள் என் இலக்கிய மனத்தின் மணி மண்டபம் ஆனாள் !...

என் விதியையே அறிந்திட முடியாமல் தவிப்பவன் நான் !

இந்நிலையிலே அந்தப் பெண்ணுளின் விதியை என்னால் எப்படி நிர்ணயம் செய்யக் கூடும் ?

ஆரம்பத்தையும் முடிவையும் தெரிந்தவன் ' அவன் ஒருவனே யல்லவா ?

ஆனாலும், அவள் உருப்பெற்றாள் ; ஆரம்பமும் முடிவும் கொண்டாள் !

அவள் : மஹேஸ்வரி.

உள்ளத்துக் காதலுக்கு உரை படித்துப் பழகினான் ஒருவன்.

அவன் : காளத்திநாதன்.

தெய்வத் திருவள்ளுவம் சொல்கிறது, 'உணர்ச்சி தான் நட்பாங் கிழமைதரும்!' என்று. தமிழ்ச் சித்தன் எனக்கு அறிமுகமானான்.

மூன்று உள்ளங்களையும் கழற்சிக் காய்களாக்கி விளையாடினேன்!

ரதி—மன்மதன் விளையாட்டு சோகத்தில் முடிந்தது!

உயிர்ச் சக்தி நிலைத்த புதுமைச் சம்பவங்கள், புதினத் துடன் தொடர்பு கொண்ட பாத்திரங்களின் குணச்சித்திர அமைப்பை வாழவைக்கும் வல்லமை பெற்றவை என்பது என் கருத்து. இந் நவீனகத்தின் நிகழ்ச்சிகள் சொற்பம். என்றாலும் அவை உயிர்த்துடிப்புக் கொண்டவை. அவை ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து, ஒன்றிற்கு மற்றொன்று ஆதாரமாகி, ஒன்றில் மற்றது அழுந்தி எழுந்து, இக்கதைக்கு ஓர் அழுத்தத்தைக் கொடுக்கின்றன. இந்த அழுத்தமே கதை உறுப்பினர்களின் உயிர்நாடி!

தமிழ் இலக்கியத்திலே 'சோதனை' செய்து காட்டுவ தாக, செப்பிடு வித்தைக்காரன் மாதிரி, சிலபேர் செப்பித் திரிகிறார்களல்லவா? அவர்களுக்குச் சோதனையாக, என்னுடைய 'வெண்ணிலவு நீ எனக்கு!' என்ற நவீனத்தைச் சென்ற ஆண்டில் அனுப்பினேன்.

இதோ, அடுத்த கட்டத்தில் கருவப்புன்னகை மிளிர நிற்கிறது, 'சொல்லித் தெரிவதில்லை!'

இலக்கிய ஆர்வலர்களாகிய நீங்கள் என்னுடைய 'சிருஷ்டிக்கர்வ'த்தின் உண்மைப் பொருளை நன்கு அறிவீர்கள்!—எனக்குத் தெரியாதா?...

உமா அலுவலகம்
சென்னை-1
29—11—61

பூவை. எஸ். ஆறுமுகம்

## காணிக்கை :

☆

என்னையும் என் குடும்பத்தினரையும் ஆறாத் துயரத்தில் ஆழ்த்திவிட்டுத் தெய்வமென ஆகிவிட்ட என் ஆருயிர்த் துணைவி அமிர்தத்தின் இனிய நல் நினைவுத் திருமுன் இந்நூலைக் காணிக்கை வைத்து ஆறுதல் பெற ஏங்கித் தவிக்கின்றேன்.

பூவை எஸ். ஆறுமுகம்

EASWARI LENDING LIBRARY
39, LLOYDS ROAD, MADRAS-6.
Old Newspapers and Books Are Purchased

# 1. ரதி மன்மதன் விளையாட்டு

மலர்க்கணை பறந்து சென்றது. காளத்தி நாதனுக்குப் பெருமை பிடிகொடுக்கவில்லை. குறி பலித்து விட்டதல்லவா? தாவிப்பிடிக்கும் தொலைவில் நின்று கொண்டிருந்த மஹேஸ்வரியை விழுங்கி விடுபவன் மாதிரி பார்த்தான் அவன். யார் செய்த பூஜாபலனோ, அவளை அவனால் விழுங்க முடியவில்லை. ஆகவே, அவள் கள்ளச் சிரிப்பை மெள்ள உதிர்க்கலானாள். அடுத்த கணத்தில், அவளுக்குப் புல்லரிப்பு ஏற்பட்டது. பாய்ந்து வந்த அம்பு பட்ட பட்டுமேனியைத் தடவிக் விட்டுக் கொண்டாள். முத்துப் பதித்த பதக்கத்தை மீண்டும் அவளது விரல்கள் வருடின. நாணத்தை உண்டது முறுவல். ஏறிட்டு விழித்தாள் மஹேஸ்வரி.

“போதும், நிறுத்துங்கள் உங்கள் மன்தன் விளையாட்டை!”

பம்பாய்ப் பீடாவைச் சுவைத்துப் பழக்கப்பட்ட அவனுடைய பற்களுக்கு இடையில் சிரிப்பு அழுந்தியது. மிதந்து வந்த கதம்பமலர்ச் சரத்தின் வாசனை நெஞ்சில்-மணம்பரப்பிக் கொண்டிருந்தது. பதுமையை

நோக்கும் பாப்பாவின் நிலையில் மாறினான் அவன். பார்த்த விழிகள் பார்க்கும் விழிகளை விழுங்கிக் கொண்டிருந்தன. 'டை'யை நெருடின விரல்கள்.

"உத்தரவு தேவி, உத்தரவு! இதோ, நிறுத்தி விட்டேன். நீயும் உன்னுடைய ரதிவேஷத்தைக் கலைத்துவிடு!"

படர்ந்து வந்த உத்தரவை அவள் கேட்டதுதான் தாமதம், உடனே தன்னை ஒருமுறை கூர்ந்து நோக்கிக் கொண்டாள் அவள். 'நான் ரதி வேஷம் போட்டிருக்கிறேனா?' என்னும் சந்தேகம் நெற்றிப் பொட்டில் விளையாட்டுக் காட்டிற்று. மறு விநாடி, அவளுக்கு யோசனை ஒன்று தோன்றியது. இடது கையில் பதுங்கியிருந்த மன்மத பாணத்தைத் தரையில் வீசி எறிந்தாள்.

"வேஷத்தைக் கலைத்து விட்டேன் நான்! ஊம், நீங்களும் உங்களுடைய மன்மதக் கோலத்தைக் களைந்து விடுங்கள்!"

"ஆகட்டும், மஹேஸ்வரி!" என்று சொல்லிக் கொண்டே கைப்பிடிப்பில் இருந்த வில்லை வீசினான் காளத்தி நாதன்; பிறகு, அருகில் கிடந்த பட்டு மெத்தை பதிந்த சோபாவில் அமர்ந்தான்.

ஒரே சீராக ஏழு தரம் ஒலித்தது சுவர்க் கடிகாரம்.

"மஹேஸ்வரி!"

"சொல்லுங்கள்!"

"நீயும் நானும் ஒரு சில நிமிஷங்கள்தான் ரதி—மன்மதன் வேஷம் போட்டுக் கொண்டோம். எல்லாம் பொய் வேஷங்கள். இதோ பார், ஓவியனின் தூரிகையில் வாழுகின்றார்கள் மாரன் தம்பதி. வாழும் காத

லுக்கு வடிவு கொடுத்து விளங்கும் இவர்களை உனக்குப் பிடிக்கவில்லையா ? சொல், மஹேஸ்வரி !"

குனிந்த தலையை உயர்த்தாமலேயே அவளிடமிருந்து பதில் வந்தது : "உங்களுக்கு ஏன் இந்தச் சந்தேகம் ? மேளதாளத்தோடு இவர்களை எனக்கும் பிடிக்குமே !"

போன உயிர் மீண்ட பாவனையில் அவனிடமிருந்து பெருமூச்சு வெளி வந்தது. பழச்சாற்றை உறிஞ்சினான். "ஓஹோ ! உண்மைக் காதலும் மேளதாளத்தோடு தானே மணமேடையில் குந்தும் என்று சொல்லாமல் சொல்கிறாயா ?"

"ஏதேது, நீங்கள் பொழுது போக்கு நடிகராக இருப்பதைவிட்டு விட்டு, நம் தமிழ்ச் சித்தனுக்குப் போட்டியாகக் கதை வசனங்கூட எழுதத் தொடங்கி விடுவீர்கள் போலிருக்கிறதே ?"

மஹேஸ்வரி வாய்ப்பேச்சை முடிக்கவில்லை. அதற்குள் அதிர்வேட்டுச் சிரிப்பொன்று அந்த மாடிநடையை இரண்டு படுத்தியது. "என்ன அப்படிச் சொல்லி விட்டீர்கள், மஹேஸ்வரி ? நம் காளத்திநாதன் சகல கலா வல்லவராயிற்றே ? அவர் நினைத்தால் சுவர்க்கத்தையே நம்முன்னே கொண்டு வந்து நிறுத்தி விடுவாரே ?" என்று விளக்கம் தந்தவன் தமிழ்ச் சித்தன்.

"சுவர்க்கமா ? உங்களுடைய உலகத்திலே சுவர்க்கத்தின் வாடை அடிக்கிறதா, என்ன ? வேடிக்கையாக இருக்கிறதே ?" என்று வினயம் சேர்த்து, வியப்பில் விரிந்த விழிகளை அமர்த்திக் கேட்டான் காளத்தி.

"என் சொர்க்கம் என் கனவில் மலரக் கூடியது. தூய கற்பனையின் துல்லியமான ஓர் அமைதிக்கே

சொர்க்கம் என்று பெயர் சூட்டுகிறேன். மில்ட்டனை நினைக்காதீர்கள்! காட்டில் இருந்து 'வீட்டுக்கு'க்கு அடித்தளம் பரப்பப் பாடுபட்ட சித்தர்களை எண்ணுதீர்கள்!" பேச்சில் ஓர் அழுத்தம் ஒட்டியிருந்தது.

"ஓஹோ! நாம் அரங்கேற்ற இருக்கின்ற 'தீவலம்!' என்கிற நாடகத்தின் கருப்பொருளைக் கொண்டே மிஸ்டர் காளத்தியை மடக்கப் பார்க்கிறீர்களே ?"

இடைவெட்டிய நீலக் கருவிழிகளின் இமை வரப்புக்களிலே மனத்தைப் பதித்திருந்தான் காளத்தி. நடந்த சம்பாஷணையிலே தன் பெயரும் கலக்கப்பட்டதை மட்டும் அவன் கவனிக்கத் தவறவில்லை. என்னவோ சொல்ல வாயெடுத்தான். அதற்குள் தமிழ்ச் சித்தன் குறுக்குக் குரல் கொடுக்கத் தொடங்கி விட்டான். "நம்தெய்வ யானைக்கு அடுத்த மாதம் திருமணம் நடைபெறப் போகின்றதாம்; கேள்விப் பட்டேன்!"

"நம் என்ற உரிமையை இனிமேல் கவனத்தோடு உபயோகப் படுத்துங்கள், சித்தரே!"

"ஆகட்டும். நம் நாடகம் அடுத்தவாரம் அண்ணுமலை மன்றத்தில் அரங்கேற்றமாகி முடிந்த கையோடு, பாசபந்தம் அனைத்தையும் கட்டறுத்து விடுவேன். என்னைப் பற்றித்தான் உங்களுக்குத் தெரியுமே, மஹேஸ்வரி...?"

"பாசபந்தத்தைக் கட்டறுக்கும்போது, கத்தியில் கண்ணை வையுங்கள். இல்லையென்ருல், ரத்தம் சொட்டி விடப் போகிறது!"

"நன்றி, காளத்தி. மெத்தவும் நன்றி."

"தெய்வயானைக்கு நம் அமுதத் தமிழ்க்கலை மன்றத்தின் சார்பிலே ஏதாவது பரிசளிக்க வேண்டா ?" என்று யோசனை கேட்டாள் மஹேஸ்வரி.

"செய்யத்தான் வேண்டும்!" என்று ஒப்புதல் தெரிவித்தான் காளத்திநாதன்.

"யானை ஒன்றைப் பரிசளித்து விடலாமே?"

"நீ நினைத்தால், இந்திரனிடம் இருப்பதாகப் பேசப் படுகிற ஐராவதத்தைக்கூட விலைக்குவாங்கி அன்பளிப் பாகக் கொடுத்து விடலாம்!"

"இந்திரனை இழுக்காதீர்கள். சித்தன் கோபப்படப் போகிறார்!"

"இந்திரனை வம்புக்கு இழுக்கும் நிலையில் நான் இல்லை. நீங்கள் இருவரும் உரையாடலைப் பரிமாறிக் கொண்டு ஒரு முடிவுக்கு வாருங்கள். அப்படியென்றால், மஹேஸ்வரி விருப்பம்போல யானை ஒன்றையே பரி சளித்து விடுவோம். நாடகம் முடிந்ததும் முதல் அலுவலாக மைசூர்க் காட்டுக்குப் போய் வரவேண்டும், காளத்தி! அல்லவா?"

"நீங்கள் என்ன சித்தன், எதற்கெடுத்தாலும் விளை யாடுகிறீர்கள்? நான் சொன்ன யானை இந்தச் சைனு பஜாரிலேயே கிடைக்கும். விலை இருபது, இருபத் தைந்து மேலே தாண்டமாட்டாது. நானே வாங்கி விடுகிறேன்!"

"நல்லவேளை, என் மூச்சுப் பிழைத்தது. தந்தம் இருக்கிற யானையாகப் பார்த்துப் பிடியுங்கள்! பழக்கு வதற்குத்தான் சித்தன் இருக்கிறாரே?"

வேறு எங்கோ கண்களை நிலைத்து வைத்திருந்த தமிழ்ச் சித்தன் உபசரணைக்குச் சிரித்து வைத்தான்.

"யானையைப் பிடித்துப் பழக்கிப் பரிசளிப்பதற்கு என்னுடைய மனமும் தைரியமும் துணை செய்யும்.

நீங்கள் தயவு செய்து சும்மா இருங்கள், மிஸ்டர் காளத்தி !" என்ருள் மஹேஸ்வரி.

இருந்திருந்தாற்போல இருக்கையைவிட்டு எழுந்தான் காளத்தி.

" நான் போய் வருகிறேன் !" என்ருன் அவன்.

நெருங்கி வந்தாள் மஹேஸ்வரி. ஒதுங்கி நின்ருன் காளத்தி.

" போய் வாருங்கள். ஆனல், ஒரு நிபந்தனை. போகும்போது, முகத்தைச் சிரிப்பாக்கிக் கொள்ள வேண்டும் ; நினைத்தபோது நினைத்த முகக் குறிப்பைக் காட்ட முடியுமா என்று சோதித்துக் கொண்டேன். 'சும்மா இருங்கள்' என்று நான் வேடிக்கைக்குச் சொன்னேன். வார்த்தைகளைக் குளிர் அறையில் பாடம் செய்து எண்ணிக் கணக்கிட்டு அளந்து பேசிவிட்டுச் செல்லுங்கள் !"

அப்போது, டெலிபோன் மணி ஒலிக்கவே, அவசரம் அவசரமாகப் பாய்ந்தோடினுள் பாவை ; அரைக் கணத்தில் திரும்பி வந்தாள். " உங்கள் அப்பா உங்களை அழைக்கிருர்கள், சித்தன் !" என்று சேதி சொன்னுள்.

போன சுவடு, வந்த சுவடு தெரியாமல் ஹாலில் வந்து நின்று கொண்டான் தமிழ்ச் சித்தன். " அப்பா என்னைச் சாப்பிட அழைக்கிருர். நான் இல்லாமல் அவர் சாப்பிடும் வழக்கம் இல்லை. நான் வருகிறேன் !" என்று தெரிவித்தான். மாடிப் படிகளில் தெளிக்கப்பட்டிருந்த ஒளிக் கோலங்களை மிதித்தவண்ணம் படிகளைக் கடக்கத் தொடங்கினுன். அதே தருணத்தில், சாப்பாட்டுப் பாத்திரங்கள். சகிதமாகப் படியேறிய வேலைக்

காரியைத் தொடர்ந்து வந்துகொண்டே யிருந்தாள் அங்கயற்கண் அம்மாள்.

" சித்தனுக்கும் சேர்த்தல்லவா சாப்பாடு கொண்டு வந்திருக்கேன் ? வாங்க, தம்பி !'' என்ருள் அவள். உலக அனுபவ முத்திரையை ஏற்றிருந்த நரை இழைகளை ஒதுக்கிஞள்.

" இன்ஞெரு முறை ஆகட்டும், அம்மா. நான் போய் வருகிறேன். அப்பா காத்திருப்பார்கள் !'' என்று கீழிருந்தபடியே பவ்யமாகச் சமாதானம் சொல்லியவஞய் அங்கிருந்து நகன்ருன் தமிழ்ச் சித்தன்.

" கொடுத்து வைத்த பிள்ளை. கொட்டக் கொட்டக் குவியும் பணம் !'' என்று சன்னக் குரலெடுத்து வார்த்தைகளை உதிர்த்து வந்தாள் அங்கயற்கண் அம்மை.

திசை திரும்பிப் பார்த்த காளத்தி நாதனுக்கு இவ் வார்த்தைகளை ஏற்கச் சக்தி இல்லை. அவன் முகம் கறுக்கத் தொடங்கிற்று.

இம்மாற்றத்தைத் தூண்டிலிட்டுப் பற்றிஞள் மஹேஸ்வரி. " காளத்தி, என்ன ஒருமாதிரியாக இருக்கிறீர்கள் ? முகத்தைச் சுத்தம் பண்ணிக்கொண்டு வாருங்கள், சாப்பிடலாம். மணி எட்டு ஆகப்போகிறது. சாப்பிட்டானதும், வழக்கம் போல உங்கள் நண்பரின் விடுதிக்குப் போங்கள். அப்புறம் திருப்பாதிரிப் புலியூருக்குப் புறப்படுவதைப் பற்றி நிச்சயம் செய்யலாம்'' என்று வரம்பு வகுத்த பின், புத்தக அலமாரியைத் துழாவத் தொடங்கிஞள் அவள்.

" நல்லது, மஹேஸ்வரி !''

சாப்பிட்டுக் கை கழுவினதும், ஈரக்கையைத் துடைக்கக்கூடக் கருத்தின்றி, சட்டைப் பையிலிருந்த கடிதத்தை மீளவும் ஒருமுறை வாசித்து முடித்தான் ;

மடித்துச் செருகிக் கொண்டான். அவன் மஹேஸ்வரி யிடம் பயணம் சொல்லிக் கொள்ளத் திரும்பின நேரத் தில், அவள் சேலைமுகப்பைக் கொய்து தன் விழிகளைத் துடைத்து கொண்டிருந்ததைக் கண்டபின், அண்டிச் சென்ருன்; அவனுடைய கருமணிகளும் புனல் தோய்ந்திருந்தன.

“அப்பாவைப் பார்த்தேன், பழைய ஞாபகங்கள் என்னை அலைக்கழித்தன. நான் அழுது விட்டேன், காளத்தி!”

தங்கசாலைத் தெருவின் சந்தடி மாடி ஏறி வர முடியுமா, என்ன?

“உங்களை மாலையும் கழுத்துமாகப் பார்த்திருந் தால் அவருக்கு நிம்மதியாக இருந்திருக்குமென்று உங்கள் தாயார் அடிக்கடி சொல்வார்கள். என்ருலும், நான் ஒன்று சொல்கிறேன். மறந்து விடாதீர்கள். பாசம் வைத்தவர்கள் அழிந்து விட்டாலும், அவர்களின் பாசம் அழியாது. உங்கள் கழுத்தில் மணமாலை விழும் போது, அக்காட்சியைக் கண்டு களிக்கக் கட்டாயம் உங்கள் தந்தையார் இந்தப் பங்களாவுக்கு வரத்தான் செய்வார்!”

சொற்கள் உணர்ச்சிச் சுழிப்பில் பிறந்தன. சில் கணங்கள் இடைவேளை கோரின. சிரித்த முகம் வழியனுப்பி வைக்க, காளத்தி நாதன் அங்கிருந்து நகரத் தொடங்கினுன்.

# உ. ‘ தீவலம் ’

ராஜா அண்ணாமலை மன்றத்தில் ‘ அமுதத் தமிழ்க் கலை மன்ற’த்தினரின் ‘ தீவலம் ’ என்ற நாடகம அரங் கேற்றப்பட்டது. நாடக விழாவுக்கு நிதி அமைச்சர் தலைமை தாங்கிக் கௌரவம் அளித்தார். கதாநாயகனாக நடித்த காளத்திக்கும், கதாநாயகியாகப் பாகம் புனைந்த மஹேஸ்வரிக்கும் பரிசுகள் வந்து குவிந்தன. சிறு பொழுது கழிந்ததும், தொழிலதிபதி துளசிங்கம் மேடை யில் தோன்றினார். அவரைப் பின்பற்றி வந்த அவரது குமாஸ்தாவின் கைகளில் வெள்ளிக் குத்துவிளக்குகள் இரண்டு காணப்பட்டன. அவை இரண்டையும் வாங்கிக் கொண்டார் துளசிங்கம்.

சபையில் ஏற்பட்ட பரபரப்பைக் கண்டதும், மஹேஸ்வரிக்கு அதிசயமாகப் போய் விட்டது. “ யார் இந்தப் பெரியவர் ?” என்று வினவினாள் அவள்.

அருகில் நின்ற காளத்தி, "இவர்தான் தமிழ்ச் சித்தனின் அப்பா!" என்றான்.

வெண்ணீறு துலங்க, சைவப் பழமெனக் காட்சியளித்த துளசிங்கம் தொண்டையைக் கனைத்துக் கொண்டு, "இந்த இரண்டு குத்து விளக்குகளையும் நாடகத்தின் நாயக—நாயகி ஜோடிக்கு அன்பளிப்பாகத் தருகிறேன். என் செல்வமகன் கதிரேசன்—அல்ல, தமிழ்ச் சித்தனையும் நான் மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன். அவனுடைய சிறுபிள்ளைப் புத்தி தெளிந்து விட்டதை அவன் எழுதிய நாடக வசனத்தில் கேட்டு அளவில்லாத ஆனந்தம் அடைந்தேன் நான். தோல்வியுற்ற காதலினால் மனம் உடைந்து போன காதலர்கள், கடைசியில் ஒன்று சேர்ந்து, காதலனின் கையினால் மூன்று முடிச்சுகள் பெற்ற காதலி அவன் கையைப் பிடித்துக்கொண்டு தீயை வலம் வந்து கணவனைப் பாதம் தொட்டு வணங்குகின்ற நேரத்தில், 'அலகிலா விளையாட்டுடைய ஆண்டவனை முன்னே நிறுத்தி உங்கள் அன்பு நிழலில் தஞ்சம் அடைகிறேன் நான். அந்த ஆண்டவன் நம் அன்பையும் நேசத்தையும் வாழ்த்துவான் என்ற முழு நம்பிக்கையும் எனக்குப் பரிபூரணமாக இருக்கிறது!' என்று வசனம் பேசிய அந்தக் கட்டத்தில் என் உடம்பு புல்லரித்தது. நாடகத்தின் வெற்றிக்குப் பாடுபட்ட எல்லோருக்கும் என்னுடைய ஆசிகள்!" என்று முழங்கினார்.

ரசிகப் பெருமக்கள் கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

ரோஜா வண்ணப் பட்டுப் படுதா தொங்கவிடப் பட்டது. மக்கள் கூட்டம் கலை ஆரம்பித்தது.

தமிழ்ச் சித்தனுக்குத் திக்குத் திசை மட்டுப்படவில்லை. கண்களைக் கட்டிக் காட்டில் விட்டாற் போன்

றிருந்தது. கண்களைப் பையத் திறந்தான். எங்கும் ஒளி வெள்ளம். நீளவாட்டத்தில் மடித்து வைத்திருந்த பத்திரிகையைப் பார்த்தான். "நகரத் தந்தையாக நம் கட்சியைச் சேர்ந்தவரே தேர்வு பெற்றிருக்கிறார்!" என்று கொட்டை எழுத்துக்களில் அச்சிடப்பட்டிருந்த தலைப்பு வரிகளில் கண்ணோட்டத்தைப் பதித்தான். எவ்வளவு குதூகலத்துடன் அதிகாலையில் ஓடிவந்து இந்த மகிழ்வுச் சேதியைக் காளத்தியிடம் தெரிவித்தான் அவன்? ஆனால், இப்போது அவன் மனம் ஒருநிலைப் பட ஒப்பவில்லை. யாரோ தன்னை வேண்டுமென்றே வஞ்சித்து விட்டதாகக் குழம்பினான்; யாரையோ பழிக்குப் பழிவாங்க வேண்டுமென்ற ஆத்திரம் அவன் நெஞ்சத்தடியில் குமிழ் பறித்துக் கொட்டியது. தலையை ஒருமுறை குலுக்கி விட்டுக் கொண்டான். பிறகு, மெதுவாக நடந்தான். மூடப்பட்டிருந்த கதவைத் தட்டினான். சரிந்து விழுந்த மேலாக்கைச் செம்மைப் படுத்தியவாறு மஹேஸ்வரி கதவைத் திறப்பதைக் கண்டவுடன், அவனுக்கு வேர்த்துக் கொட்டியது. ஒப்பனை அறையிலிருந்து கிளம்பிய மின்னற்கொடி அவன் இதயத்தில் துவண்டது. 'மன்னிக்கவும்' என்று சொல்லிப் பின்வாங்கினான். 'பெண்கள்மட்டுமே' என்று எச்சரித்த பலகை அவன் தலையில் இமயமலை யாக மாறி உட்கார்ந்தது.

அரிதாரம் முழுவதையும் கழுவி முடித்து சோப்பின் நுரைபோக டவலினால் துடைத்துக் கொண்டிருந்தான் காளத்திநாதன். "வாருங்கள், சித்தன்!"

தமிழ்ச் சித்தனுக்குச் சினம் பற்றிக் கொண்டுவரத் தலைப்பட்டது. "என்னை அவமானப் படுத்தவேண்டு மென்று எத்தனை நாளாக நீங்கள் கங்கணம் கட்டி

யிருந்தீர்கள் ?" என்று காளத்தியை நோக்கிக் கேள்விக் கணைகளைத் தொடுத்தான் அவன்.

காளத்தி முகத்தை நிமிர்த்தித் தன் நண்பனை ஏற இறங்கப் பார்வையிட்டான். "நீங்கள் என்ன சொல்கிறீர்கள் ?"

"நான் எழுதிக் கொடுத்த வசனங்களை உச்சக் கட்டத்தில் மாற்றும் அதிகாரத்தை யார் உங்களுக்குக் கொடுத்தார்கள் ?"

"ஏன், நீங்கள் எழுதித் தந்தவற்றைத் தானே நான் ஒப்புவித்தேன் ! தவறு நேர்ந்து விட்டதா ?" என்று பதறினான் காளத்தி.

"தவறுதல் உங்களுடைய வார்த்தைகளில் ஏற்படவில்லை ; உங்கள் சித்தத்தில்தான் உண்டாகியிருக்கிறது !" என்று கோபம் தொனிக்க இரைந்தான். மூக்குக் கண்ணாடியைத் துடைத்துப் போட்டுக் கொண்டான்.

"மிஸ்டர் சித்தன்...!" நயந்து கூப்பிட்டான் காளத்தி,

"ஏன் இப்போது நடிக்கிறீர்கள் ? நான் எழுதிய வசனத்தைத் திருத்தி எழுதிக் கொடுத்து, அதை மஹேஸ்வரியைக் கொண்டு பேசவும் வைத்துவிட்டு, இப்போது ஒன்றுமே தெரியாதவர்போல ஏன் பாவனை செய்கிறீர்கள் ? எனக்கென தனிப்பட்ட சில கொள்கைகள் உள்ளன. அவற்றை நீங்கள் அறிவீர்கள். அப்படிப்பட்ட அமைப்பிலே பழக்கப்பட்டுவிட்ட என்னை இப்போது கொள்கையற்ற கோழையாக அறிமுகம் செய்விக்க எத்தனை நாள் கனவு கண்டீர்கள் ? பாவம், என் தந்தை வேறு என்னைத் தவருக எடை போட்டு விட்டாரே ?..."

புறப்பட்டு வந்த கோபத்தின் கொந்தளிப்பில் இன்னும் என்னென்ன பேசவேண்டுமென்று தமிழ்ச் சித்தன் நினைத்தானோ ?

நல்ல காலம். அதற்குள்ளே மஹேஸ்வரி தோன்றினாள். "எல்லாம் நான் செய்ததுதான். என் கடமை அது. ஆகவே அந்தத் திருத்தத்துக்குத் துணிந்தேன். தவறு என்று உங்கள் பாஷையில் சொல்ல எனக்கு வாய் வரவில்லை, மிஸ்டர் சித்தன் !" என்று துடுக்காகப் பதில் மொழிந்த பெருமையும் அவளுக்கே சொந்தம்.

"நீங்களா என் உரையாடலை அவ்வாறு மாற்றினீர்கள் ?"

"ஆம் என்றுதான் சொல்லிக் கொண்டிருக்கிறேனே ? முன் ஒரு முறை ஒத்திகை நடத்தப்பட்ட போது, என் அபிப்பிராயத்தை நீங்கள் ஏற்க மறுத்தீர்கள். ஆனால், உங்கள் எண்ணங்களை—தெய்வத்தை இல்லை என்று அடுக்கு மொழியில் ஏசிப் பேசும் உங்கள் வசனத்தை நாடகம் காணவரும் பெண் குலத்தோர் ஏற்கமாட்டார்களே? ஆகவேதான், நான் மாற்றினேன். உங்கள் தந்தைக்கு ஏற்பட்ட பூரிப்பினால், உங்களுக்கு இரண்டு வெள்ளிக் குத்துவிளக்குகள் நஷ்டம். ஆனால், எதிர்பாராத லாபமாகக் கருதிக்கொண்டு வீட்டுக்குச் சென்றிருக்கும் உங்கள் தகப்பனாரின் நல்லெண்ணத்தில் மண்ணைப் போட்டு விடாதீர்கள் ! என்னை மதிப்பவர் நீங்கள். உங்களையும் மதிப்பவள் நான். அன்பும் பண்பும் நம்மிடை சாட்சியம் செல்லக் காத்திருக்கின்றன. என் செயல் தவறானதல்ல. அப்பால், உங்கள் இஷ்டம் எதுவோ அதைச் செய்யுங்கள் ; அதன்படி நடங்கள் !"

கைக்குட்டைத் துணி கொண்டு செந்நிறக் கன்னங்களைத் துடைத்தாள் மஹேஸ்வரி. நீண்ட மூச்சு இழை இழையாக வெளிவந்தது.

தமிழ்ச் சித்தன் சிந்தனை லயிப்பிலிருந்து விடுபட்டான். பட்டுச் சொக்காய் நுனியினுல் நெற்றியை ஒற்றினுன். " ஊம், நல்ல பாடம் படித்துக் கொண்டேன். வருகிறேன் !" என்ருன். வெஞ்சினம் அடிநாதம் இட்டது. சுற்றிச் சூழ்ந்திருந்த வாசனைத் திரயங்களின் நெடி லேசாக விடைபெறத் துடித்தது.

விரைந்து சென்ற தமிழ்ச் சித்தனின் போக்கைக் கண்டு காளத்தி வருந்தினுன். கோபத்துக்குத் தேறுதல் சொல்ல விரும்பினுன் அவன். "பொறுங்கள் !" என்று தடுத்தாள் மஹேஸ்வரி. இப்படிச் சொல்லி விட்டு, அவள் ஓசைப்படாமல் தமிழ்ச் சித்தனைத் தொடர்ந்தாள். மேடைப் படிவரை சென்ருள். அதற்குள் அவன் போய் விட்டான் ! அவள் பாதங்களில் பட்டுக் கிடந்தது ஓர் உறை. ஒட்டப்பட்டிருந்தது உறை. ஆனுல், முகப்பில் முகவரி ஏதும் காணப்படவில்லை. கிழித்தாள் அவள்.

" மஹேஸ்வரி, சீக்கிரம் வாருங்கள் !" என்று துரிதப்படுத்தினுன் காளத்திநாதன். மன்றத்தினர் குறித்திருந்த காலக்கெடு தாண்டி விட்டதென குறைப்படுவதாகத் தெரியப்படுத்தினுன் அவன்.

" இதோ, புறப்பட்டு விடுவோம் !"

இறைந்திருந்த பொருள்களை துரிதம் சேர்த்து ஒன்று கூட்டினுள் அவள். டிரைவர் வந்து உதவினுன். சாமான்களைச் சுமந்து சென்று காரில் திணித்தான். காளத்திநாதன் குனிந்த தலை நிமிராமல் மஹேஸ்வரிக்குக் கூடமாட ஒத்தாசை பண்ணினுன். அப்போது,

அவனுடைய சட்டைப் பையிலிருந்து துண்டுக் காகிதம் ஒன்று விழுந்தது. அவன் அதைக் கவனிக்க வில்லை. அவள் கவனிக்காமல் இருப்பாளா? எடுத்தாள்; படித்தாள் :

“பட்டணத்திலிருந்து உங்கள் வரவை ஆசை யோடு எதிர்பார்த்திருக்கிறேன். அப்பா உங்களிடம் ஏதோ பேச வேண்டுமாம். உடம்பு முன் மாதிரிதான் இருக்கிறது. உடன் வரவேண்டியது. ஆண்டாள்.”

கடிதத்தை மடித்துக் கொடுத்தாள். கொடுக்கும் போது, காற்றில் கடிதம் பிரிந்து கொண்டது. அவனை அவள் விழி பதித்துப் பார்த்தாள். விழிகளிலே இருதயம் தெரியுமாமே? “தமிழ்ச் சித்தனை நினைத்தால் மனத்திற்கு வேதனையாக இருக்கிறது!” என்று அனுதாபப்பட்டாள். பேச்சின் போக்கில், அவள் உடல் அவனைத் தீண்டியது. அவன் விலகிக் கொண்டான்.

மஹேஸ்வரியின் மையுண்ட நயனங்களில் நாணப்பூ விரிந்தது. ‘ஒட்டி உறவாடி, சற்றுமுன் நாங்கள் இருவரும் நடித்தது கனவல்லவே!’

இனிய உணர்வின் மடியில் தலைவைத்திருந்த காளத்தியின் நினைவில் இன்னல் சுருதி சேர்ந்தது. ‘நாணம் இல்லையென்றால், பெண்ணுக்கு மரியாதை— மதிப்பு கிடையாது போலும்!’

நாடகத்தின் ஒரு காட்சியை நினைவு கூர்ந்தாள். காதலனின் நெஞ்சில் தனக்கு இடம் இல்லை என்பதை அறிந்த சடுதியில் காதலி தன்னுடைய இதயப் புயலை அப்படியே முகத்திரையில் தேக்கி உணர்ச்சி வசப்பட்டு விழிசோர நிற்கவேண்டும். பயிற்சியாளரின் கருத்துப் பிரகாரம் மஹேஸ்வரி செய்து முடித்தாள். கைதட்டல் ஆரவாரம் அடங்கச் சில விநாடிகள் பிடித்தன. எண்ண

மிட்ட நிகழ்ச்சியின் அதிர்ச்சி சிறுகச் சிறுக மறையத் தொடங்கியது. தன் நிலையை உணர்ந்தாள். அவளுக்கு உயிர் வந்தது. காளத்தியை ஆசையாய்ப் பார்த்தாள். அப்போதுதான் முதன் முதலாகப் பார்ப்பவள் போன்றல்லவா அவள் பார்த்தாள் !

காலக் குழவி கசக்கி வீசி எறிந்த எட்டுப் பூக்களை வாரியெடுத்து வாசனை ஏற்றினாள் அவள். வாடாத பூக்கள் அவை ; மணத்தை வாரி யிறைக்கக் கேட்க வேண்டுமா ?

அன்றைக்குப் பள்ளிக்கூடத்துக்குப் போய்விட்டுத் திரும்பினாள் மஹேஸ்வரி. பச்சைத் தாவணி காப்புப் பாட, முல்லை முறுவல் பாயிரம் சொல்ல வந்து நின்றாள் அவள். அவள் வந்தபோது, ஒரு புது முகத்தைத் தரிசித்தாள். அந்த முகத்துக்குச் சொந்தக்காரன் காளத்தி என்பது பழைய விஷயம். என்றாலும், அவள் வரை அவன் நித்தம் நித்தம் புதுப் பொருளாகவேதான் காட்சியளித்துக் கொண்டிருந்தான். இத்தகைய 'பரி பக்குவநிலை'தான் பருவத்தை வாழவைக்க வல்லதோ ?

மூக்கணாங் கயிற்றின் பிடி அழுந்தியது. அவள் சிலிர்த்துக்கொண்டாள். "மஹேஸ்வரி ! பெரிய யோசனையில் மூழ்கி விட்டாய் போலிருக்கிறதே...?"

"ஒன்றுமில்லை!...ஆமாம், சித்தனின் சித்தம் தெளியாதா, காளத்தி ?"

"காலம்தான் அவனுக்கு ஆசானாக அமைய வேண்டும். ஒரு நல்ல திருப்பம் ஏற்பட அவன் சார்பில் நாம்தான் தெய்வத்தை வேண்டவேண்டும். இதுவே நம் கடமை !"

"வாஸ்தவந்தான். தெய்வம் உண்டென்று நம்பும் தந்தைக்கு இப்படி ஒரு எதிர்ச்சக்தி !"

“ சக்தியாவது புத்தியாவது?...பெரிய உலகத்தை மனோரதப் பிரயாணத்தினால் தினமும் சுற்றி வருவதாகப் பெருமை பேசுகிறார் தமிழ்ச் சித்தன்! ஆனால், நடைமுறையில் பார்த்தால், உலகத்தைப் படைத்தவனையே ஆட்டிப் படைக்கப் பார்க்கிறாரே ? உள்ளத்தால் உலகைச் சுற்ற முயலும் இவர், உலகத்தால் உள்ளத்தைப் பக்குவப்படுத்திக் கொள்ள முடியவில்லையே ?”

உணர்ந்து பேசினான் காளத்திநாதன் !

உணர்ந்து நகை பயின்றாள் மஹேஸ்வரி !

அண்ணாமலை மன்றத்தைவிட்டுக் கார் புறப்பட்டது. காலமும் தூரமும் கண்ணாம்பூச்சி ஆடின.

கண்டெடுத்துப் பத்திரப்படுத்தி வைத்திருந்த கடிதத்தைப் பிரித்தாள். அவளுடைய பூங்கரங்கள் எரிமலையின் வாயில் அகப்பட்டவைபோல் துடியாய்த் துடிக்கத் தொடங்கின. கடிதத்தைக் கசக்கி டம்பப் பையில் போட்டாள். அப்புறம், முன் ஆசனத்தில் அமர்ந்தபடியே தலையைமட்டும் திருப்பிப் பின்பக்கம் பார்த்தாள் அவள். காளத்திநாதன் சிந்தனைக் கோடுகளில் ஊஞ்சலாடினான். மூடிக் கிடக்கும் கோயிலிலே திறந்த வண்ணம் கிடக்கின்ற இறைமையின் ஒளிப் புனலைத் தரிசித்தவளைப் போல இதயபூர்வமாக முறுவல் பூத்தாள் மஹேஸ்வரி !

# 3. ‘நெஞ்சு களம்கொண்ட நோய்!’

டம்பப் பையின் முகத்தில்தான் எடுத்த எடுப்பில் கண் விழித்தாள் மஹேஸ்வரி. அப்பொழுது, காலைக் கதிரவனின் இளங்கதிர்கள் சூடேற்றிக் கொண்டிருந் தன. தியேட்டரின் வெளி வாசற் கதவைத் திறந்து விட்டதும், ரசிக மகா ஜனங்கள் முண்டி முறித்து உள்ளே பாய்ந்து செல்வார்கள் அல்லவா ? அந்த அளவில்தான், அரைகுறையாகத் திறந்து விடப் பட்டிருந்த படுக்கையறையின் ஜன்னல் கதவுகளின் ஊடாகக் கதிரொளி படர்ந்து பாய்ந்து வழிந்தது. விசை வளையம் பொருத்தப்பட்டிருந்த பட்டுமெத்தை யில் பதிந்த பட்டுமேனியைக் கிளப்பினாள் ; சோம்பல் முறித்தாள். நழுவி விழுந்த மார்பகத் துணியை வழுவில்லாமல் செம்மைப் படுத்தினாள்; தலைமாட்டில் தெரிந்த நிலைக்கண்ணாடியில் முகம் தெரிந்தது. மோதிர

விரல் அவளது சுருள் அலை படிந்த முடி இழைகளை ஒதுக்கி விட்டது. விளைந்த சிரிப்பில் ஜீவன் விளைந்தது. 'ம்!'—பெருமூச்சுக்குப் பேசத்தானா தெரியாது ?

பெற்றவள் ' பெட் காப்பி 'கொணர்ந்தாள். படுக்கை விட்டு எழுந்தவள், மறுபடி படுக்கையிலேயே அமர்ந்து கொண்டாள். காப்பியை ஒரே மடக்கில் குடித்து வைத்தாள். படுத்த படுக்கையிலேயே அமர்ந்து கொண்டு, வாயைக்கூட கொப்புளிக்காமல் குடிப்பதற்குத்தானே ' பெட் காபி ' என்று பெயர் ?

மஹேஸ்வரி அன்றைய ஆங்கிலத் தினசரியை ஒரு புரட்டு புரட்டினாள். விலாசம் இல்லாமல் அனுப்பப் பட்ட மர்மக் கடிதம் ஒன்றை வைத்துக்கொண்டு போலீஸில் குற்றப் பதிவு செய்திருக்கும் பட்டணத்துப் பைங்கொடியைப் பற்றிய ருசிகரமான தகவல்களை மூச்சுவிடாமல் படித்து முடித்தாள் ; பிறகு, மூச்சு விட்டாள்.

அதே சமயத்தில், உடலில் ஊறிய சிலிர்ப்பை உணர்ந்தாள். அவ்வுணர்வு, எதிரில் கிடந்த டம்பப் பையில் நிலைத்தது. துடித்த கைகளை நீட்டினாள் ; படித்த கடிதத்தைப் பார்வையிட்டாள் மஹேஸ்வரி.

" அன்புகெழுமிய மகேசுவரி !

என்னை அறிந்தவர்கள் நீங்கள். அது போல, நானும் உங்களை அறிந்தவன். தர்க்க ரீதியான முறையிலேனும் இதை நீங்கள் அங்கீகாரம் செய்வீர்கள் என்பதே என் எண்ணம். மனம் காணும் ஆசைக் கனவுக்கு ஆத்மதரிசனமாக அமையவல்லது வதுவை விழா என்பது என் கருத்து. ஆகவேதான்,

இக்குறிப்புத் துண்டை அவசரம் சேர்த்து எழுத வேண்டியவன் ஆனேன்.

ஒன்று சொல்லவேண்டும்.

நீங்கள் காளத்திநாதனை மறந்துவிட வேண்டும் !

இயலாதா ?

அப்படியென்றால், உங்களையே காளத்தியிடமிருந்து மறைத்துக் கொள்ளவேண்டும் !

'தீவலம்' என்னும் நம்முடைய நாடகத்தின் படுதா உங்கள் இருவரின் சந்திப்புக்கும் படுதா விரிக்கட்டும் !

மனம் பேதலிக்கிறதா ? பரவாயில்லை. ஆனால், பேதைமையை உங்களுக்குத் தோழியாக்கிக் கொண்டுவிடாதீர்கள் !

காலம் ஒரு மருத்துவன்.

காலக்கிரமத்தில் உங்களை நீங்களே உணர்வீர்கள். அதே அளவில், என்னையும் உங்களால் உணர முடியும். அந்நிலை அண்மையிலேயே வழி விடுமானால், அதுவே என் பாக்கியம் ஆகும் !

தங்கள் அன்புள்ள,

**தமிழ்ச்சித்தன்."**

எரிகின்ற தீபத்தில் எண்ணெய் குறைவாக இருக்கக்கண்டு, சிறுகச் சிறுக எண்ணெய் ஊற்றப்பட்டால் எரியும் திரியில் எண்ணெய்த் திவலைகள் பட்டுப் பட்டுச் சுடர்தெறிக்கும் பாருங்கள், அந்த அழகில் அவளின் இதயதீபத்தில் மேற்படி உறைக் கடிதத்தின்

ஒவ்வொருவரியும் தெறித்து விழுந்தது. உந்திக் கமலம் பொங்கியது ; இமைகள் கண்ணீர் முத்துக்களை சரம் தொடுத்தன. ஓய்வு ஒழிதல் இல்லாமல் நினைவுகள் பேசின. சம்பவங்கள் தான்தோன்றித்தனமாகத் தலையை நீட்டின. ஓர் அரைக்கணம் அவள் விழிகளை மூடினாள். இதயக் கதவுகள் திறந்து கொண்டன. மோகனம் நிரம்பிய முகம் ஒன்று தழைத்துத் தோன்றியது. சிரித்த முகம் ! அறிவுக்கும் உணர்வுக்கும் கட்டுப்பாடு அமைக்காமல், தவநிலையில் அமர்ந்திருந்த மஹேஸ்வரி தனக்குத்தானே கேட்டுக் கொண்டாள் : ' காளத்தி ! ஏன் என்னை இவ்வாறு சோதிக்கிறார் உங்கள் தோழர் ?...உங்களை என்னிடமிருந்து பிரிக்க முயல்கிறதே இக்கடிதம் ? ஏன் ?...'

ஒரு நாள் நடந்த கூத்து :

எத்திராஜ் மகளிர் கல்லூரித் தமிழ் விழா ஒன்றில் மஹேஸ்வரி பிரசங்கம் செய்தாள். அரசினர் கல்லூரிக் கலைக்கழகத்தின் காரியதரிசி என்ற உறவில் காளத்திக்கு விசேஷ அழைப்புச் சென்றிருந்தது. வந்தான். வந்தவன், தன்கூட தமிழ்ச் சித்தனையும் அழைத்து வந்திருந்தான். காரணம், தமிழ்ச் சித்தன் மனம் ஒப்பி மஹேஸ்வரியின் இலக்கியப் பேச்சைக் கேட்க ஆசைப் பட்டதுதான். சொற்பொழிவைக் கேட்க ஆர்வம் இருக்கின்றதென்றால், இயற்கையாகவே அவனுக்குத் தமிழின்பால் ஈடுபாடு உண்டு என்றுதானே அர்த்தம் ?

பேச்சு ஆரம்பமானது. ' அகத்தில் அகம் ' என்னும் பொருள் பற்றிப் பேசவேண்டும். இது மஹேஸ்வரியை அணைந்திருந்த கடமை. பேசினாள். ' கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்த குடி'யின் காதல் மரபு வாழ்க்கையை விளக்கினாள் ;

அகத்தில் பெண்மையின் அகம் காணப்படும் நிகழ்ச் களை விரல் விட்டுச் சொல்லிக் காட்டினுள் ; அவற்றிற் குத் தக்கபடி பாடல்களையும் பாடிக் காட்டினுள்.

" முத்தொள்ளாயிரப் பாடல் ஒன்றின் கருத்தை இப்பொழுது உங்கள் முன்னே வைக்க விழைகிறேன். உள்ளங்களிலே அகில உலகத்தையுமே படைத்துப் பார்க்கின்ற தனி வல்லமை பூண்டது காதல் என்று நான் தோற்றுவாய்ப் பகுதியில் மொழிந்தேன். இப்போது ஒரு கதை சொல்லப்போகிறேன். பாண்டியன் பால் காதல் மயக்கம் கொண்டு ஒழுகினளாம் பாவை ஒருத்தி. வீதி வலம் வரும் தருணம், அவ்வேந்தனைக் காணுவதற்கான முன்னேற்பாட்டைச் செய்திருந்தாள் தோழி. இருப்பினும், தலைமகளுக்கு மனத் தொல்லை கள் வளரலாயின. ' நாணமல் வலுவில் சென்று பாண் டியனிடம் பேசினுல் என் பெண்மையைப் பற்றிக் குறையுற எடை போட மாட்டாரு தீந்தார் வயமான் வழுதி ? சரி, அவனிடம் பேசாவிட்டால், என்னை நானே மெய்ம்மறந்த நிலையிலே, என் கைவளைகள் சோர்ந்து விழுமே ? என் செய்வேன் அபலை ?' என்று வருந்துகிருளாம் !

"இப் பாடலை யான் இவண் ஏன் சொல்லப் போந்தே னென்ருல், காதல் என்பது பொதுவுடைமைப் பாசம் உள்ளது. ரிஷி மூலம்—நதி மூலம் காண எத்தனம் செய்யலாகாது என்பார்கள் பெரியவர்கள். அதே பட்டி யலில் காதலையும் இணைப்பதே சாலப் பொருத்தமுடைய தாகும். நாடாண்ட பூவேந்தன் பால் அவனது ஆட் சிக்கு அடிபணியும் குலக்கொடி ஒருத்தி மையல் பூண்டாள் என்பதை எண்ணும்போது என்மனம் அடை யும் அதிசயத்தைக் காட்டிலும், பூவையின் மனக் காதலுக்கு மதிப்புச் சாற்றினனே பூவேந்தன் என்பதனை

நினைக்கும் சமயம்தான், மிகுந்த அதிசயத்தில் திளைக்கிறேன்; ஆனந்தத்தால் மூச்சுத் திணறுகிறேன். ஆகக் கூடி, ஒன்றினை மட்டும் உறுதியாகச் சொல்கிறேன். காதல்ச் சக்தி தெய்வாம்சம் பொருந்தியது. அதைப் பயபக்தியுடன் அணுகவேண்டும்; நெஞ்சை அர்ப்பணித்த பரிபக்குவப் பண்புடன் போற்ற வேண்டும் !..."

கைதட்டல் ஒலி சபையை அதிரச் செய்துவிட்டது.

தன்னை மறந்து கைகளைத் தட்டிக் கொண்டேயிருந்தான் தமிழ்ச் சித்தன். அவனது கரங்களைப் பற்றினான் காளத்தி. "கைகள் வலிக்கப் போகின்றன, சித்தன் !" என்றான். எச்சரிக்கையில் நையாண்டியின் நீரோட்டம் இருந்தது.

தமிழ்ச்சித்தனுக்கு அப்பொழுதுதான் இவ்வுலகத்தின் ஞாபகம் வந்தது போலும் ! கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டு தலையை நிமிர்த்தினான் அவன். கைகளால் தலையைக் கோதி விட்டான். வைரம் 'டால்' அடித்தது.

"எப்படி இருந்தது பேச்சு ?"

"அற்புதம், போங்கள் !"

இருவரும் தத்தம் ரசிப்பைப் பரிமாறிக் கொண்டனர். அது சமயம், ஒரு குரல் கேட்டது. "முன்னரே வந்து விட்டீர்களா ?"

மஹேஸ்வரி திரும்பியிருந்தாள். இமைகள் படபடத்தன.

காளத்தி திரும்பினான். மௌனச் சிரிப்பை ஏந்தினான்.

" ஓ...நீயா ?"

" ஆமாம் !"

ஒலிக் குறிப்புக்கள் ஒட்டின ; உறவாடின ; உறவு வேண்டின.

பேச்சு ஆரம்பமாவதற்கு அரைமணி முன்னதாகாவே ஹாலுக்கு வந்துவிட்டதாகச் சொன்னான் காளத்தி. கையோடு, இன்னொரு கைங்கரியத்தையும் செய்துவிட எண்ணினான் அவன் ; தமிழ்ச்சித்தனை அவளுக்கு அறிமுகப்படுத்தினான்.

" வணக்கம் !"

" வணக்கம் !"

" உங்களைத் தெரிந்து கொண்டதில், ரொம்பவும் மகிழ்கிறேன்."

" உங்களை அறிமுகப் படுத்திக் கொண்டதில் நானும் பெரிதும் மகிழ்கிறேன் !"

சூயஸ் கால்வாய் நாகரிகத்தின் ஒப்பந்த வரிகள் ஆயிற்றே இவை ? வாழ வேண்டாமா ?

பல் வரிசைகளில் விரல்களை விளையாட விட்டான் காளத்தி.

மகேஸ்வரி தலையை உயர்த்திக் கேட்டாள் : " சற்றுமுன் நான் பேசிய கரடுமுரடான தமிழினால் உங்கள் பற்கள் உடைந்து போயினவோ என்று சந்தேகப்படுகிறீர்களா ?"

காளத்தி சிரிப்பை வெளிக்காட்டியதோடு ' கம் ' மென்று இருந்துவிட்டான்.

ஆனால், தமிழ்ச்சித்தன் சும்மா விடுவதாகக் காணோம்! "நீங்கள் பேசப்போக, காளத்தியின் பற்கள் உடைவதாவது! எனக்கு ஒன்றும் புரியவில்லையே?"

"மன்னியுங்கள், மிஸ்டர் சித்தன். நானும் காளத்தியும் நிரம்ப அளவுக்கு ஒருவரை யொருவர் புரிந்து கொண்டிருக்கிறோம். அது போதும்!" என்று பாக்குத் தறித்தாற்போல முத்தாய்ப்பு வைத்தாள் அவள்.

மஹேஸ்வரி நல்ல தமிழில் பேசியதற்குப் பாராட்டுத் தெரிவித்தான் தமிழ்ச்சித்தன்.

அவள் நன்றி பாராட்டினாள்.

டெலிபோன் கருவி இரண்டரைக் கட்டையில் சுருதி சேர்த்தது. மஹேஸ்வரியின் நாடக நடிப்புக்கு வாழ்த்துக் கூறியது அது.

'ஈஸ்வரா!...'

ஆமாம்; இந்தப் பாழாய்ப்போன நினைவுகளுக்குக் காயகல்பத்தை யார் கொடுத்தார்களாம்?

காளத்திநாதன் அங்கு வந்து சேர்ந்தான். முகமும் உடுப்பும் துலாம்பரமாகக் காணப்பட்டன. அவனுடைய கண்கள் மாடி நெடுகிலும் அலைந்தன. அவை மஹேஸ்வரியைத் தேடின. அவளோ, 'காளத்தி' என்று விளித்தவாறு அவனைத் தேடி வந்து விட்டாள். கையில் காப்பி; கண்களில் மானின் மருட்சி; கனி இதழ்களில் கனவு; கனவின் கனிவு; கனிவின் கனவு! புதுப் புடவைகள் சத்தம் காட்டவில்லை. ஷிபான் ரகம்! இமை கொட்டாமல் அவனையே விழுங்கி விடுவது போல் பார்வையைச் செலுத்தினாள் அவள். 'முதல் நாள் இரவிலும் காலையிலும் என்னைக் கொடுமைப் படுத்தி வேடிக்கை காட்டி, வேடிக்கை பார்த்த துயரங்கள் அப்படியே பயந்தோடி விட்டனவே? ஊம்!...'

அவனுக்கும் அவளுக்கும் ஊடே காப்பி வந்தது ; வந்த காப்பி தன் முத்திரையை இருஜோடி உதடுகளில் பதித்துச் சென்றது. மாடிக் கைபிடிச் சுவரில் சாய்ந்த வண்ணம், அவன் நின்ருன் ; அவளும் அவனை ஒட்டி ஒட்டிச் சென்ருள். அந்திச் செவ்வானத்தின் அழகே அலாதி !

"ஊருக்கு இன்றிரவு புறப்படப் போகிறேன்" என்ருன் காளத்தி. சட்டைப் பையிலிருந்து கடிதத்தை எடுத்து நீட்டினன். சொல்லும் காரணத்திற்கு அத்தாட்சி காட்டும் ஸ்கூல் பையனை நினைவூட்டிக் கொண்டாளா அவள் ? லேசாகத் தெளிந்த இளஞ் சிரிப்புக்கு அணையிட்டாள் அவள் ; காளத்தி பவ்ய மாக நீட்டிய கடிதத்தைப் பாந்தவ்யத்தோடு பார்த்தாள் அவள். 'இதற்குமுன் இதைத் தற்செயலாகப் படித்த விவரத்தைச் சொல்லக் கூடாது ; இது நாகரிகமாகாது!

"அத்தை மகள் கடிதம் போட்டுக் கூப்பிடுகிருள் ; போகப் போகிறீர்கள். ஊம், இனி நான் தபாலாபீசே சரணம் என்று கிடக்க வேண்டியவள்தான். நான் ஏழு கடிதம் போடுகிறேன் ; நீங்கள் ஒன்றே ஒன்றுக்குப் பதில் போடுங்கள், போதும். நான் மனம் மகிழ்வேன். அதிக நாள் அங்கேயே தங்கிவிடாதீர்கள். இங்கே பட்டணத்தில் நாம் தொடங்க வேண்டிய புதிய தொழிலைப்பற்றித் திட்டவட்டமானதொரு தீர்மானத் துக்கு நாம் வந்தாக வேண்டும்" என்ருள் அவள்.

ஒவ்வொரு சொல்லுக்கும் அழகாகத் தலையை ஆட்டிய பெருமை காளத்தியையே சேர்ந்தது.

ஹாலைக் கடந்து, உள் அறைக்குள் நுழைந்து மீண்டாள் மஹேஸ்வரி. குறுக்கிட்ட அன்னையின் குறுக்குப் பேச்சுக்குக் குறுக்கு மறித்து நடந்தாள்.

காளத்தியின் வலது கையைப்பற்றினுள்; அதில் ஒரு பச்சைத் தாளை வைத்தாள். நூறு ரூபாய்த் தாளுக்குத் தான் நிறம் பச்சை !

நாகம் கண்டவனைப் போன்று காளத்தி திகைத்தான். "வேண்டாம், மஹேஸ்வரி. நீயே வைத்துக் கொள். வழிச் செலவுக்கு தமிழ்ச்சித்தன் கொடுத்து விட்டார் !" என்ருன் அவன்.

மஹேஸ்வரியின் தெளிந்திருந்த வதனம் சோர்ந்து கலங்கியது. "நான் சொல்வதைத் தயவு செய்து கேளுங்கள். தமிழ்ச் சித்தனிடம் முதலில் அவரது பணத்தைக் கொடுத்து விடுங்கள். நான் சொல்வதைத் தயவு பண்ணிச் செய்யுங்கள் !" என்று வேண்டினுள் அவள். வாலைக் குமரியை சிறுமியாக யார் மாற்றினுர்கள் ?

கண்வழியே புலன் அமைத்து, கருத்து வழியே சுரங்கம் வைத்து அவளைத் தேடினுன். தேடினவன் காளத்தி.

அவள் கண்ணீரில் நீந்திக் கொண்டிருந்தாள். தமிழ்ச்சித்தனின் கடிதத்தைப் பற்றிப் பிரஸ்தாபிக்க இது சமயமல்லவென்று முடிவு செய்தாள் அவள்.

"உன் மனம்போலவே செய்கிறேன், மஹேஸ்வரி!"

நேருத்திரமாக நின்ருன் காளத்தி. ஆனுல் அவளோ அவனை மனக் கண்ணில் தரிசிக்கலானுள். தண்மை படிந்த நெஞ்சம் களமாயிற்று. அந்தக் களம் அவளை நோய்ப் படுக்கையில் வீழத்தியது. மறுகணம் வாரிச்சுருட்டிக் கொண்டு எழுந்தாள். தன்னைத்தானே பார்த்துக் கொண்டாள். தசைத் திரட்சி வரைந்து பழகிய சித்திரம் அவளை என்னவோ செய்தது; சிரித்தாள்.

சிரிப்பில் உயிர் ஜனித்தது !

# 4. காதலை விட்டு விடு!

**பு**து டில்லியிலிருந்து அங்கயற்கண் அம்மாள் வீட்டுக்கு விருந்தினர்கள் வந்திருந்தார்கள். ஆடம்பர மாக உடுத்தியிருந்தார் ஒருவர். அவருக்கு ஐம்பது வருஷ உலகானுபவம் இருக்க வேண்டும். அங்கங்கே முதுமை கேலி பண்ணுமல் ஒய்ந்திருக்கவில்லை. அவர் அங்கயற்கண் அம்மாளுக்குத் தமையன் வேண்டும். ஒன்றுவிட்ட தமையன் ! வந்திருந்தவருக்குச் சம்சாரம் ஒருத்தி. அவளும் வந்திருந்தாள். கமலி—ராமதிலகம் தம்பதி. இருவருக்கும் ஒரே பெண். பெயர் திலோத் தமை. "புராண காலத்தை மறக்காதிருக்க நம்மைப் போன்றவர்கள்தான் ஆயத்தப்படவேண்டும் !" என்று முன்னுரை கூறினுர் ராமதிலகம். "அதற்கு வழிகாட்டு வதைப் போலத்தான் நான் என் பெண்ணுக்கு திலோத் தமை என்று பெயர் சூட்டியிருக்கிறேன் !" என்று முடித்தார்.

இப்படி அவர் வியாக்கியானம் சொல்லிக்கொண்டிருக்கையில், மாடி ஹாலுக்கு வந்து சேர்ந்த மஹேஸ்வரி வாயை வைத்துக்கொண்டு சும்மா இருந்திருக்கக் கூடாதா? "தலைநகரத்திலே நம் மாமா இந்திரன் சபை ஏதாவது நடத்துகிருரா அம்மா?" என்று ஐயம் ஒன்றை நாசூக்காக உதிர்த்தாள்.

"என்ன அப்படிக் கேட்டுப்பிட்டே? அண்ணனுக்கு டான்ஸ் அது இதெல்லாம் சின்ன வயசிலேயே ஊறிப் போன சங்கதியாச்சே?" என்ற பதிலை வேறு அங்கயற்கண் அம்மாள் திருவாய் மலர்ந்தருளினுள். வந்தது ஆபத்து! இந்த ஆபத்து, சிரிப்பின் உருவத்தில் அவதரித்தது. சிரித்தவள் மஹேஸ்வரிதான். மகள் சிரிப்பதைக் கேட்டு, தாய் சிரித்தாள். தங்கையின் நகை முகம் கண்டு தமையனும் சிரித்து வைத்தார். 'இந்தப் பெண் மஹேஸ்வரிக்கு என் பெயர் பிடிக்கவில்லையா? அவளுக்குப் பிடித்தால் என்ன, பிடிக்காது போனுல் என்ன? நியூ டெல்லியில் என் தோழிகளுக்கு இதுதான் ரொம்பப் பிடித்திருக்கிறது. என் அண்ணு காந்தி ராமனுக்குக்கூட இந்தப் பெயர் அழகாகத் தோன்றுகிறதே?..பார்த்துக்கொள்ளலாம்; மஹேஸ்வரி எனக்கு அண்ணியாக வந்தால், அப்போதுவேண்டுமானுல், அவளுக்காக வேண்டி, என் பெயருக்கு இன்னெரு மாற்றுப் பெயரைச் சிருஷ்டி செய்துகொள்ளலாம்!' என்று நினைவுப் பூக்களைக் கொய்தாள் திலோத்தமை. அவள் கண்களை நூல் பிடித்து நேர் முகமாகப் பார்த்த வேளையில், மஹேஸ்வரி மாடிப் படிகளைக் கடந்து கொண்டிருந்தாள்.

ரோஜாப்பூக்கள் வாய் அவிழ்ந்தன!

மஹேஸ்வரிக்கு ஒரே பதட்டம். அவள் தோழி தெய்வயானைக்குத் திருமணம் என்ருல், அவளுக்கும்

பதட்டத்துக்கும் ஒட்டுறவு இணைவது சகஜந்தானே? மயிலாப்பூருக்குச் சின்ன காரை எடுத்துக்கொண்டு அவள் சென்றாள். 'அமுதத் தமிழ்க் கலை மன்றம்' வகுத்திருக்கும் திருமணப் பரிசுத் திட்டத்தை தோழியின் அதிகாரபூர்வமான பார்வைக்கு வைத்தாள் அவள். எடுத்த எடுப்பில் காளத்தியின் பெயரும், அவனுக்கு உரிய வரிக்கு நேரே ஐம்பது ரூபாய் என்ற இலக்கக் குறிப்பும் இருந்தன. அதற்கு அடியில் மஹேஸ்வரியின் பெயர். அவள் பெயருக்கும் அதே அளவுதான் பணம் குறிக்கப்பட்டிருந்தது. அதையடுத்து, நாடகத்தில் தொடர்பு வைத்திருந்த ஆண்களும் பெண்களும் அவரவர்களின் ஸ்திதிக்குத் தக்கபடி மொய்ப்பணம் எழுதியிருந்தார்கள். இடைவெளி விட்டிருந்த ஒரு வரியைக் கவனித்தாள் தெய்வயானை. "ஆமா, நம்ம தமிழ்ச் சித்தன் அண்ணாத்தையை நீ போயிப் பார்க்கலையா, மஹி?" என்று பெயரைக் குறுக்கி, கேள்வியை நீட்டினாள்.

மஹேஸ்வரி மௌனமாகக் காணப்பட்டாள். சிந்தனைக் கோடுகள் முகத்திரையைக் கொண்டு கூடாரம் போட்டிருந்தன. 'ஊஹூம்!' என்றபடி அவள் தலையை உலுக்கினாள்.

"மஹி...!"

"தெய்வயானை, அது ஒரு கதை!"

"கதையா?"

"இல்லை, இல்லை! நாடகம்!"

"அப்படியென்றால், அதையே நமது அடுத்த டிராமாவுக்குப் போட்டு விட்டால் போகிறது!"

"ஊஸ்! இது அந்தரங்க நாடகம், தெய்வயானை!"

" எனக்கு மண்டையில் ஏறவில்லையே, மஹி ?"

" இது என் சொந்த நாடகம். என் வாழ்வையே தாயப் பலகையாகவும், என் கனவுகளையே தாயச் சோழிகளாகவும் ஆக்கிக்கொண்டு எனக்கு எதிர்க்கட்சி யில் அமர்ந்து விளையாட ஒரு புண்ணியவான் ஆசைப் படுகிறுர். ' பசு ' சேரும் பாண்டிகளை அள்ளிக் கொள் வதோடு அவருக்குத் திருப்தி வராதாம். தாயக் காய் களைப் பற்றியும் அக்கறை கிடையாதாம். ஆனல் தாயப் பலகைதான் அவருக்கு வேண்டுமாம்!..." என்று பேசி நிறுத்திஞள் மஹேஸ்வரி. உற்ற தோழிக்கு உருப்படியாக ஏதாகிலும் புரிந்ததா என்பதை அறிய விரும்பியவளாக அவளை ஆழமாகப் பார்த்தாள். தெய்வ யானையின் இமைகளைக் கடந்ததும், கருமணிகளை மட்டிலும்தான் அவளால் காண முடிந்தது ; கருத்து எதையும் கவரமுடியவில்லை.

"தெய்வானை, உன் மூளையை இப்பொழுதே செல வழித்து விடாதே. கழுத்தில் மூன்றுமுடிச்சு விழுந்த தற்கப்புறமே மூளைக்கு அதிகப்படியான அலுவல் இருக் கும். இப்போது நான் போட்ட விடுகதைக்கு நானே விடைசொல்லி விடுகிறேன். என் வாழ்க்கையில் திரு வாளர் தமிழ்ச்சித்தன் விளையாட கனவு கண்டு கொண் டிருக்கிறுர் !"

தெய்வயானை குறுக்கே பாய்ந்தாள் : " தமிழ்ச் சித்தன் உன்பேரில் உயிராக இருந்தாரே, மஹி ?"

" அதனுல்தான் என் உயிரோடு விளையாட ஆசை கொண்டு திரிகிறுர் !" மஹேஸ்வரியின் பதிலில் அழுத் தம் இருந்தது. சூடு வேறு.

தெய்வயானையிடம் விடை பெற்றுப் போக முனைந் தாள் மஹேஸ்வரி. அதற்குள், வேருெரு நினைவுச்

சிதறல் எழுந்தது. “அது சரி. உன் மணவாளர்கூட நாடக ரசிகராமே?” என்று வினு விடுத்தாள்.

“ஊம்!”

“அப்படியானுல், அவரையே உன்னுடைய ஜோடியாக்கிக் கொண்டு விடலாம் என்று சொல். நீங்கள் இரண்டு பேரும் நடிக்க வேண்டிய கட்டங்களுக்கு உங்கள் வீட்டிலேயே ஒத்திகை வைத்துக் கொள்ளுங்களேன்!”

“போ, மஹு!”

சிரிப்பின் சன்ன நெளிகள் பின்னிக் கலந்தன.

மஹேஸ்வரிக்குக் காப்பி கொடுத்து வழியனுப்பி வைக்க வந்தாள் தோழி. அவள் காரின் கதவைத் திறந்து கொண்டு ‘டிரைவர் ஆசன’த்தில் அமர்ந்த போது, அவள் பார்வையுடன் தமிழ்ச்சித்தனின் பார்வை மோதியது. இரு தரப்பிலும் ஓர் அதிசயம் நடந்தது. இதழ்களுக்குப் பதிலாகக் கைகள் பேசிக் கொண்டன. கார் புறப்பட்டுச் சென்றது.

தூங்கசாலையை அடைந்தாள் மஹேஸ்வரி. பங்களா அவளை அடைந்தது. வெயில் அரித்துக் கொண்டிருந்தது; வெறித்துக் கொண்டிருந்தது.

“வாம்மா, வா!” ஒரே அழைப்பில் இரண்டு, மூன்று சுருதிகள் பேசின.

கூடத்திற்கு வந்தாள் மஹேஸ்வரி. பந்தி வைக்கப் பட்டிருந்தது. அவளையும் உட்காரச் சொன்னுர்கள். உட்கார்ந்தாள். சாப்பிடச் சொன்னுர்கள். சாப்பிட்டாள். அங்கயற்கண் அம்மாள்தான் பரிமாறினுள். அவள் மனம் மகிழ்வினுல் உப்பியிருந்தது. ஐந்தொகையைத் தயாரிக்கும் கணக்கன் கூட்டிக் கழித்து மண்டையை

உடைத்துக் கொள்வதைப்போல அவளும் சதா எதையோ போட்டு உழப்பிக்கொண்டிருந்தாள். இந் நிலையை அவள் முகம் காட்டியது. இப்போது அவள் ஆனந்தத்தை மடி ஏந்தியிருந்தாள். 'ஆமா; நான் முன்னே நினைச்சது மாதிரி, தமிழ்ச்சித்தன் என் பெண்ணுக்கு மாப்பிள்ளையாய் வருகிறதைவிட, என் டில்லி அண்ணு பிள்ளையே என் மகளோடெ புருஷனுய் வாய்க்கிறதே சிலாக்கியம். ஒரே கல்லிலே இரண்டுகாய். சொந்தத்துக்குச் சொந்தம்; பணத்துக்குப் பணம்!' என்று அவளது மன அந்தரங்கம் ஆலோசனைசெய்தது. அதன் பலனுக, டில்லி அண்ணுவுக்கு நான்கு கரண்டி பாயஸம் கூடுதலாகக் கிடைத்தது!

மாடியில் காற்ருட அமர்ந்து பேசலாம் என்று கூப்பிட்டாள் வீட்டுத் தலைவி. வந்திருந்தவர்கள் ஒப்புக கொண்டுதான் மாடிப் படிக்கட்டில் காலை வைத்தார்கள். தொடர்ந்து படிகளை எண்ண முடியவில்லை. சாப்பாடு கூடுதல். இக்கட்டான இந்தக் கட்டத்தைத் தரிசனம் செய்த அங்கயற்கண் அம்மாள் ஹாலிலேயே ரத்தினக் கம்பளத்தை விரித்தாள். ஆணையிட்டாள்; காற்று வந்தது. எல்லோரும் அவரவர் சௌகரியப்படி உட்காரலானுர்கள். ஆனுல், மஹேஸ்வரியோ அவர்களுக்கு மத்தியில் அமராமல் ஓரமாக ஒதுங்கினுள். அபிநயம் பிடித்து, தோளைப் பிடித்து அவளை அமர்த்தினுள் திலோத்தமை. அவள் தொண்ணூற்றேழு பவுண்ட் எடை. நாளது தேதிவரை, இயந்திரத்திற்குப் பொய் பேச மட்டும் கற்றுக் கொடுக்கப்பட வில்லையாம்!

"உன்னுேடதான் மஹி பேசணும். அதுக்காகத் தானே இவ்வளவு தொலை பறந்து வந்திருக்கோம்?" என்று பேச்சுக்குப் பிள்ளையார் சுழி போட்டார், ஸ்ரீமான் ராமதிலகம்.

அவர் கேட்க விரும்பியவற்றுக்கு உள்ள விவரங்கள் அவ்வளவும் தன் டம்பப் பைக்குள்ளேதான் அடக்கம் என்று கருதியவள் போல, மஹேஸ்வரி அவசர அவசரமாக அதன் வாயை நீக்கினாள்.

" ஏம்மா, உனக்கு உன் அத்தானை நினைவிருக்கிறதில்லையா ?" என்று முதல் கேள்வியை வீசினார் அவர்.

' ஓ !' என்று தலையை முப்பது டிகிரி கோணத்தில் கீழ் புறமாக அசைத்துவிட்டவுடன்தான், தன் அத்தான் யார் என்ற பெரிய சந்தேகம் பூதாகாரமாகக் குதித்தது. ஆகவே, அவளது தற்காப்பு உணர்ச்சி வேலை செய்தது. " யாரைச் சொல்றீங்க மாமா ?" என்று எதிர்க் கேள்வியை எடுத்து வைத்தாள் அவள்.

" காந்தியை !"

" ஓ...! காந்தியையா தெரியாது ?" என்னும் பதில் அவளுக்குத் திருப்தி தரவில்லை. " அத்தான் என்கிறார். பேர் காந்தியாமே ?"

ராமதிலகம் இப்பொழுது மஹேஸ்வரியின் ஸ்தானத்தில் அமர்ந்து கொட்டக் கொட்ட விழித்தார். ஏற இறங்கப் பார்த்தார். கொட்டுவதை அள்ளுவதற்காகவா அப்படிப் பார்த்தார் மனிதர் ? யார், எதைக் கொட்டுகிறார்களோ ?

" என்ன மஹி, இப்பிடி முழிக்கிறியே ? அதாம்மா, ராமனைத் தெரியாதா ?" முதற் கேள்வியில் இது ' இ' பிரிவு.

' ராமனை அறிந்தவர் கம்பர். ஸ்ரீராமனை அறிந்தவள் மிதிலைச் செல்வி. பட்டாபிராமனை அறிந்தது அயோத்தி! மாமா எந்த ராமனை கேட்கிறார் ?'—குறும்பு மனம்.

ராமதிலகம் சட்டைப் பையிலிருந்த புகைப்படம் ஒன்றைச் சமர்ப்பித்தார்.

மஹேஸ்வரி முத்துக்கள் குலுங்கி விழச் சிரித்தாள். "அத்தான் காந்தி ராமனைத்தானு இவ்வளவு நாழி சொன்னீர்கள்? மேளதாளத்தோடு தெரியுமே?"

போன உயிர் எமன் கைவசம் இருந்த பாசக்கயிற்றி லிருந்து விடுபட்டு தம் உடலில் புகுந்து கொண்ட நிலையில் அவர் பெருமூச்சை வெளியேற்றினுர். "உன்னை யும் உன் அத்தானையும் வைத்து மேளதாளம் கொட்ட வேணும் என்கிறதுதான் என் ஆசையும் தங்கச்சி நினைப்பும்!" என்று நிறுத்தினுர்; கலகலப்பாக இருமினுர்.

அதுவரை ஒட்டியிருந்த உயிர் வெட்டப்பட்டுக் காத தூரம் வழிப்பயணம் சென்று விட்டமாதிரி மஹேஸ்வரி திகைப்படைந்தாள்; திக்கு முக்காடினுள்; சரம் தொடுத்தாற் போன்று தும்மினுள் அவள். "யாரோ நினைக்கிருங்க!" என்று சொன்னுள்.

"உன் அத்தான்தான் நினைத்துக்கொண்டிருக்கும்!" என்று இடைவெட்டினுள் அங்கயற்கண் அம்மாள்.

"மாமா!"

"மஹி!"

"ஊருக்குப் போய், அத்தானை இங்கே ஒரு வாட்டி வந்து போகும்படி சொல்லுங்கள். என் முடிவைச் சொல்கிறேன்; அத்தான் என் கண்களிலேயே நிற்கிருர்!"

"பஹுஉத் அச்சா!" என்று ஒருபோடு போட்ட துடன் திருப்தி பெருமல், பீரங்கிச் சிரிப்பைத்

தொடங்கி, அதை 'நிரவல்' செய்யவும் துணிந்து விட்டார் தில்லி மாமா!

அவர்களிடம் சொல்லிக்கொண்டு மாடியை அடைந்தாள் மஹேஸ்வரி.

அடைத்திருந்த அறை; திறந்திருந்த உள்ளகம். புறத்தே அமைதி; அகத்தே வளி. கண்கள் மிதித்த கண்ணீர்; சிந்தனை குதறிய எண்ணங்கள். பித்தம் மண்டை கொண்டுவிடும் போலிருந்தது அவளுக்கு. எழுதிய கடிதத் தாள்களை இணைத்தாள். எழுந்து நடந்தாள். சுவர் நெடுகிலும் படங்கள். காளத்தியும் தமிழ்ச்சித்தனும் மஹேஸ்வரியின் தந்தை வேதநாயகத்துடன் சேர்ந்தும் பிரிந்தும் படம் பிடித்துக் கொண்டிருந்தார்கள்.

வேதநாயகம் உயிரும் சதையுமாக உலவிய வேளை.

காளத்தியைத் தம்முடன் அழைத்திருந்தார் பெரியவர். மினர்வா தியேட்டரில் படம் பார்க்க வேண்டுமென்று திட்டம். காப்பி குடித்து முடித்து இருவரும் மாடிப்படிகளைக் கடந்து கொண்டிருந்தனர். சொல்லி வைத்தாற்போல், தமிழ்ச்சித்தனும் அப்பொழுது வந்து குதித்தான். நண்பனைக் கண்டதும், காளத்தி மகிழ்ச்சியினால் குதித்தான். இளவட்டங்கள் இரண்டு பேரும் சிறுவர்களாக மாறிய விந்தையை மனத்திற்குள்ளாக எண்ணிப் பூரித்தார் வேதநாயகம். போட்டிருந்த திட்டத்தில் சின்ன மாறுதல் உண்டாயிற்று. தமிழ்ச்சித்தனும் அவர்களுடன் படம் பார்த்தாக வேண்டுமென்று விரும்பினார்கள்.

கல்லூரித் தோழிகளுடன் கடற்கரைப் பக்கம் செல்லப் புறப்பட்டுக் கொண்டிருந்தாள் மஹேஸ்வரி. மூவரையும் ஒருசேரக் கண்டதும், அவளுக்கு ஆனந்தம்

வந்துவிட்டிருக்க வேண்டும். "மூன்று பேரும் அப் படியே நில்லுங்கள். ஒரு 'ஸ்னுப்' எடுத்து விடுகிறேன்'' என்று கூறி, காமிராவை இயக்கினுள் அவள்.

வேதநாயகத்துடன் காளத்தியும் தமிழ்ச்சித்தனும் சேர்ந்தும் பிரிந்தும் படம் எடுத்துக் கொண்டார்கள்.

"இந்தப் படங்களை காலம் என்றென்றும் நினைவூட்டிக் கொண்டே யிருக்கும்!'' என்று மனம் விட்டுச் சொன்னுர் வேதநாயகம்.

கழிந்த காலம் சாரைப் பாம்புக்குச் சமானம். சுற்றி ஞல், விடுமா? இல்லாததையும் பொல்லாததையும் நினைத்துப் பார்த்தாள். உருவம் இன்னது என்று அடையாளம் கண்டுகொள்ள இயலாத வகையில், ஒரு சில முகங்கள் தோன்றின. கண்களைத் தீட்டிக்கொண்டு நோக்கினுள் அவள்; வெளியே தேடித் தேடி அலுத்துப் போனுள். பின்னர், உள்ளே—தன்னுள்ளே தேடினுள். அவளுக்குச் சிரிப்புத் தாங்கவில்லை. 'காளத்தி, நான் உங்கள் மீது கொண்டிருக்கும் காதலை விட்டுவிட வேண்டுமாம்!...என்னைச் சுற்றிலும் இயங்கத் தொடங் கியிருக்கின்ற புதிய எதிர்ச் சக்திகள் இவ்வாறு எனக்கு ஆணையிடத் தொடங்கியிருக்கின்றன! என்னை மணப் பெண்ணுக்க என் அன்னை ஒற்றைக்காலால் நிற்கிருர் கள். மனத்தால் வாழப் பழகிய நமக்கு மணத்தாலும் வாழத்தானு தெரியாது?...நீங்கள் எதற்கும் கலங்கா தீர்கள்!...என்னைப் பரிபூரணமாக அறிந்தவர்களா யிற்றே நீங்கள்? என் இதயத்தின் இந்தக் கேள்விக்கு உங்கள் இதயத்தின் பதிலைத்தான் என்றைக்கோ நான் தெரிந்து வைத்திருக்கிறேனே? என்னுடைய கடிதம் ஒன்று உங்களைத் தேடி வரும். ஒன்று, 'பதில் வர வேண்டும்'; இல்லையேல், நீங்கள் வரவேண்டும்! ஆமாம், சொல்லிவிட்டேன்!'

சிந்தனையின் சுகாசனத்தில் தலைவைத்திருந்தாள் அவள். கதவுகள் தட்டப்பட்ட ஓசை கேட்டது. விரைவு பாய்ச்சி எழுந்து நடந்தாள். நாதாங்கியை விலக்கினுள் கைநொடிப் பொழுதுக்குத்தான் அவளிடையே பரவிய திகைப்பு மிஞ்சியது. பிறகு, "வாருங்கள் !" என்று சகஜமாக வரவேற்ருள். மிதிபட்டுப் புரண்ட கறுப்பு அங்கவஸ்திரத்தைக் கைகளால் ஒதுக்கிவிட்ட வண்ணம், வழிகாட்டி அழைத்துச் சென்ருள் மஹேஸ்வரி.:
"உட்காருங்கள், சித்தன் !"

## 5. கடிதத்துக்கு எதிர்க் கடிதம்!

தமிழ்ச் சித்தன் இருக்கைதனில் அமர்ந்தான். அவனுடைய பாதங்கள் காஷ்மீர் விரிப்பில் பதிய மறுத்தன. இடது கையில் அழகு கூட்டிக் கொண்டிருந்த மோதிரத்தை அடிக்கொரு முறை நெருடி விட்டான் அவன்; தோளில் இழைந்து, தரையில் தவழ்ந்த கறுப்பு அங்கவஸ்திரத்தை எடுத்துத் தாறுமாருகப் போட்டுக் கொண்டான். புயல் புறப்படுவதற்கு ஒரே ஒரு கணம் போதும்; ஆனால், புறப்பட்ட கொந்தளிப்பை அடக்கி மூட ஒரு கணப்பொழுது போதும் என்று வரம்பு கட்டி விடுவது இயலாது அல்லவா? கிழிக்கப் பட்ட காலக் கோட்டில் நிலைத்து கணங்கள் சில கழிந்தன. 'வாருங்கள்' என்னும் முகமன் மொழியின் உள்ளார்ந்த பக்குவமும், 'உட்காருங்கள் சித்தன்' என்ற உபசரிப்பின் அமைதியான உட்கருத்தும் அவ

னுக்குத் தெம்பு தந்தன. தலைசாய்ந்தவன் தலையை நிமிர்த்தினான்; அவனது விழிப் பரப்பிலே விளையாடு கின்றனவே சலன இழைகள், அவற்றிற்கு அர்த்தம் என்ன? முத்துத் தொடுத்துக் கொண்டிருந்தது நெற்றி.

மஹேஸ்வரி விழுங்கி விடுகிற மாதிரியாகத் தமிழ்ச் சித்தனைப் பார்த்தாள். ஆனால் அவள் அப்படிச் செய்ய வில்லை. ஆகவே, நெடுமூச்சை மட்டிலும் மட்டோடு விழுங்கிவிட்டு, கூடத்தின் கீழ்ப்பகுதிக்கு நடந்தாள். விசிறியை ஓடச் செய்யவேண்டி விசைப் பொத்தானை அழுத்தினாள். காற்றுச் சுழன்றது. பிறகு, சித்தனுடைய முகத்தையே உறுத்துப் பார்வை யிட்டவாறு, மற்றொரு நாற்காலியில் குந்தினாள்.

"சித்தன், அத்தி பூத்தாற்போல வந்திருக்கிறீர்களே?"

"உங்களைப் பார்க்க வேண்டுமென்றிருந்தது."

"வந்திருக்கிறீர்கள்!"

"ஆமாம்!"

"விசேஷம்...?"

"இல்லாமலா?"

"சொல்லவில்லையே?"

"சொல்லத்தான் போகிறேன்."

"சொல்லுங்கள், நீங்கள் சொல்லித்தான் நான் தெரிந்து கொள்ளவேண்டும்."

"மெய்யான தகவல்தான்."

மஹேஸ்வரி தன் விழிகளை நேர் வசமாகச் செலுத்தினாள்; நுணுக்கம் தூவி இதழ்களுக்குச் சிரிப்பைக் காட்டினாள். அந்தச் சிரிப்புக்கு நயனங்கள் துயர வடிவம் தந்தன. தமிழ்ச் சித்தனை உன்னிப்பாகப் பார்த்தாள் மஹேஸ்வரி. தங்களிடையே ஏடு விரிந்த அறிமுகத்தின் சம்பவக் கதையை எண்ணத்தில் அழுத்தி விட்டாள். கள்ளமிழந்த நோக்கல்; அன்பு பதிந்த பாவனை; பாசம் பொதிந்த இயல்பு; சிரிப்புச் சிந்தும் உரையாடல்கள்; சிந்தனை கதிர் பரப்பும் கருத்துக் குவியல்கள்; அனைத்திற்கும் மேம்பாடு காட்டிய சொந்தக் கொள்கைகள்!—இவை அனைத்தும் தனித்தனிப் புள்ளிகளாக இயங்கி வளர்ந்து, மறுகி, மடங்கி இணைந்த போது, தமிழ்ச்சித்தன் தோன்றிய விந்தையை எண்ணிப் பார்த்த நாட்கள் ஒன்றல்ல, இரண்டல்லவே?

‘இப்படிப்பட்ட சித்தனா இன்று களங்கத்தின் பிண்டமாகக் காட்சி தருகிறார்?...தன்னலம் அவரை ஆட்டிப்படைக்கிறதா? விதியை நைத்தியம் பண்ணும் இவர் எனக்கென்று தனிவிதி ஒன்றை உண்டாக்க எத்தனம் செய்கிறாரே, ஏன்? மனிதனின் தேர்ந்த திறனுக்கு அடையாளம்தான் கடவுள் என்ற இங்கர்சாலின் கருத்தை அரங்கமாக்கி நாடகம் ஆடும் இவர் இப்போது என்னையே ஆடுகாயாக்கிவிட முனைப்புச் செலுத்தியிருக்கிறாரே, ஏன்? எதிர்நோக்காத இத்தகைய சூழலுக்குச் சுழல் உண்டாக்கிக் கொடுத்திருக்கிறதே, அதற்குப் பெயர் விதியா? இல்லையென்றால், வேறு என்ன பெயர்? சித்தன் இந்நிலைக்கு என்ன பெயர் சூட்டுவார்? ஒருகால், இந்தப் புதிர்நிலைக்கு மறு பெயர் தான் சித்தனோ?...ஆம், அப்படித்தான் இருக்கும். அப்படியே இருக்கட்டுமே?...என் உள்ளத்திற்குப் பாடம் சொல்லிக் கொடுக்க இந்தத் தமிழ்ச்சித்த

னுக்குப் புலமை ஏது? துணிச்சல் ஏது? தகைமை ஏது?...என் இதயத்துடன் விளையாட நப்பாசை வைத்திருக்கிறார் சித்தன். பாவம், எனக்குத்தான் இதயத் தோழராக ஒருவர் முன்னமேயே வாய்த்திருக்கிறாரே? அறிவாரே இவர்? அம்மம்ம!...எல்லாமே கண்மயக்க ஆட்டத்திற்குச் சமானமாகவல்லவா தோன்றுகிறது?...'

திகில் சுமந்த தொனியை ஏவினான் தமிழ்ச்சித்தன் "மஹேஸ்வரி!" என்று கூப்பிட்டான்.

பற்களை 'நற நற' வென்று கடித்துக் கொள்வதை மஹேஸ்வரி அக்கணம்தான் நிறுத்தினாள். முகத்தைத் துடைத்தாள். மூக்குத்தியில் சிக்கிக் கொண்ட பட்டு நூலிழையைச் சீர்செய்து விடுவித்த பின், காதுக்குண்டலங்களைச் சரி செய்தாள். "என்ன சொன்னீர்கள், சித்தன்?" என்று வினாச் சொடுக்கினாள்.

"இன்னும் எதுவும் சொல்லவில்லை. இனிமேல்தான் சொல்லவேண்டும்" என்று எச்சரிக்கை கொடுத்தான் அவன். சட்டைப்பையிலிருந்து பத்து ரூபாய்த் தாள் கத்தையை எடுத்து, ஐந்து முறை நாக்கு எச்சிலைத் தொட்டுப் பிரித்து, அவற்றை அவளிடம் நீட்டினான்.

"எனக்கா இந்தப் பணம்?"

"அன்று. தெய்வயானைக்கு!"

"அப்படியென்றால், அவளிடமே கொடுத்துவிடுங்களேன்!"

"அமுதத் தமிழ்க்கலை மன்றத்தின் சார்பில் திருமணப் பரிசிலைக் கொடுக்க நீங்கள்தானே முனைந்திருக்கிறீர்கள்?"

"உங்கள் யூகம் தவறல்ல; ஆனால், சேர்ந்த பணத்தை—சேர்த்த பணத்தைக் கொண்டு தந்தத்தாலான யானை ஒன்றை வாங்கிவந்து விட்டேன். மணவினை நாள் பக்கத்தில் வந்து கொண்டிருக்கிறது பாருங்கள், அதனால் தான் சடுதியாக எல்லாவற்றையும் செய்துவிட்டேன்!"

"ஒரு கேள்வி கேட்கட்டுமா?"

"புறப்படும் கேள்வி மேஷ ரிஷபம் பார்ப்பது கிடையாது. ஆனால் புறப்படும் பதில்தான் இடம், பொருள், ஏவல் எல்லாவற்றையும் கணிக்கும்!"

"நானும் அமுதத் தமிழ்க்கலை மன்றத்தில் ஓர் அங்கம் வகிப்பவன் தானே...?"

"உண்மை."

"பின், என்னை மட்டும் ஏன் ஒதுக்கியிருக்கிறீர்கள்?"

"நீங்கள் அல்லவா ஒதுங்கி யிருந்தீர்கள்?"

"நீங்கள் புதிர் போடுகிறீர்களா?"

"அது என் தொழில் அல்லவே?"

"அப்படியென்றால், நான்தான் புதிர் போடுகிறேனா?"

"அதை நிர்ணயிப்பது என் பொழுதுபோக்கல்லவே!"

"உங்களை என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லையே, மஹேஸ்வரி?"

"அதைத்தான் நான் எப்போதோ புரிந்து வைத்திருக்கிறேனே?"

" உங்கள் பேச்சுச் சூடு பறக்கிறதே, என்ன காரணம் ?"

" உங்கள் நெஞ்சத்தில் தீ விளையாடுவதுதான் காரணம் !..."

" நீங்கள் என்னைத் தவருக எடை போட்டிருக்கிறீர்கள் !'

" அல்ல, நீங்கள்தான் என்னைத் தவருகக் கணித்து விட்டிருக்கிறீர்கள் !"

" காலம்தான் பதில் சொல்ல வேண்டும் !"

" வேண்டாம். நானே பதில் சொல்வேன் !"

" அப்படியா ?"

" ஆமாம் !"

பெருமை கும்மாளம் போட மஹேஸ்வரி பேசினுள்.

சுடு நீர் பள்ளம் பறிக்க, தமிழ்ச்சித்தன் நிமிர்ந்தான். வீசியடித்த காற்று ரூபாய்த் தாள்களைச் சிதறச் செய்தது. அவற்றைப் பொறுக்கக்கூட மனம் இல்லாமல், சிந்தனை வசப்பட்டிருந்தான் அவன். பின்னர், மனத்திட்பம் கைவரப் பெற்றவனைப் போன்று தலையை ஒரு முறை உலுக்கினுன். சட்டைப் பையை மீண்டும் துழாவினுன். உறை வந்தது.

" மஹேஸ்வரி, இந்தக் கடிதம் உங்களைச் சேர வேண்டியது. நான் எழுதியது."

கடிதத்தைக் கைநீட்டி வாங்கும் வேளையில், அவளது வலது கை மோதிரத்தை அவன் விரல்கள் தீண்டிவிட்டன. " மன்னியுங்கள் !" என்ருன் : வேண்டுதல் பண்பு இருந்தது. சற்றைக் கெல்லாம், " நான்கூட உங்களுக்கு ஒரு கடிதம் எழுதி வைத்திருக்

கிறேன். பெற்றுக் கொள்வீர்களா ?" என்று வினயம் கூட்டி, வார்த்தைகளைக் கூட்டினுள் மஹேஸ்வரி.

" தாராளமாகப் பெற்றுக் கொள்வேன், மஹேஸ்வரி."

மஹேஸ்வரியின் கடிதத்தோடு, அந்தப் பத்து ரூபாய் நோட்டுக்கள் ஐந்தும் உறவாடத் தலைப்பட்டன.

அந்தி வெயிலின் எழிற் செருக்கிற்கு ஒப்பு இல்லையென்கிருர்கள் பாடத் தெரிந்தவர்கள்.

கறுப்பு மேல் துண்டை உதறி வீசித் தோளில் போட்டுக் கொண்டு எழுந்தான் தமிழ்ச்சித்தன். பயணம் சொன்னுன்.

உபசாரத் தட்டில் வைக்கப்பட்டிருந்த காப்பி அப்படியே இருந்தது. இதை அறிந்துதானே, என்னவோ, ஈ ஒன்று ஒரே மூச்சில் பறந்து வந்து அதில் 'தொப்' பென்று விழுந்து வைத்தது !

# 6. நாளைக்குத் திருமண விழா

மஹேஸ்வரிக்கு ஓரிடத்தில் இருப்புக் கொள்ளவில்லை. வழியனுப்பி வைத்த காரின் வழியைப் பார்த்துக் கொண்டு முகப்பு மண்டபத்தில் வந்து நின்றாள் அவள். இரண்டு மூன்று நாட்களாக அவளுக்குக் கையும் ஓடவில்லை ; காலும் ஓடவில்லை. ஆனால் மனம் மாத்திரம் பந்தயக் குதிரைக்கு ஈடுகொடுத்து ஓடிக் கொண்டிருந்தது. பந்தயக் குதிரை கண்மண் தெரியாமல் ஓடவல்லது ; கடந்தோடி வந்த வழியைத் திரும்பிப் பார்ப்பதற்கு அதற்கு நேரம் இருப்பதில்லை ; கடக்க வேண்டிய தூரத்தைப்பற்றி மட்டுந்தான் அது எண்ணிப் பார்த்துக் கொண்டேயிருக்கும். கண்மயக்கத்தைக் கொடுக்கும் பந்தங்களுள் இந்த லட்சியமும் ஒன்றுதான். இப்படிப்பட்ட லட்சியம் என்ற சொல்லை வட்டமாக்கிக் கொண்டுதான் மஹேஸ்வரியும் இயங்கி

வந்தாள். அவ்வட்டத்திலே வளைய வளைய வந்து கொண்டிருந்த அவளது மனப் பாய்ச்சலுக்கும் குதிரையின் உடற்பாய்ச்சலுக்கும் வித்தியாசம் ஒன்று உண்டு. இயங்கும் சக்தியின் சாட்டையடி குதிரையை ஓடவைக்கிறது. ஆகவேதான், அதற்குப் போய்ச் சேரவேண்டிய எல்லை மட்டுந்தான் லட்சியமாக அமைகிறது. ஆனால் அவளைப் பொறுத்த வரையிலும், அவளுள் இயங்கிய உள்ளுணர்வின் நல்லதனமான தூண்டுதலின் விளைவாகவே அவள் தன் மனத்தை இயக்கி வந்தாள். ஆகவேதான், அவளால் நடந்த கதையைத் திருப்பிப் பார்க்க முடிந்தது; நடக்கவேண்டிய கதையை அவள் சிந்திக்க வேண்டியிருந்தது.

காலக் குழந்தை நடைவண்டி ஓட்டிப் பழகிக் கொண்டிருந்தது. நடைத் தடத்தில் நிமிஷங்களும் விநாடிகளும் மிதிபட்டன; மிதிக்கப்பட்டன.

புருவத்தில் பட்டால் கரிக்காது; கண்ணில் பட்டால்தான் கரிக்கும்.

வழி நடந்த சம்பவத் துணுக்குகள் சில வழிமீண்டு அவளுள் சிலிர்த்தன; புருவங்கள் துடித்தன; விழிகள் கலங்கின. நெஞ்சகத்தைத் தொட்டன. ஐந்து நாட்களுக்கு முன்னே அவள் எவ்வளவோ சந்தோஷமாகத்தான் இருந்தாள். 'என் கடிதத்திற்கு காளத்தி எப்படியும் பதில் போடுவார். அவரிடமிருந்து நல்ல வாக்குக் கிடைத்த சடுதியிலேயே, என்னைப்பற்றி ஒரு நிர்ணயம் செய்துவிட வேண்டும். அப்போதுதான், சித்தனைப்போன்ற அவசரக் குடுக்கையின் தொல்லையும் காந்திராமனை யொத்த ஆத்திரக்காரரின் நச்சரிப்பும் ஒழியும்' என்று ஆலோசித்தாள். இம்முடிவுக்கு ஆரம்பமாக அமைந்த கட்டங்கள் இரண்டு. அவற்றுள்

ஒன்று தமிழ்ச்சித்தனைச் சாரும். அடுத்த கட்டம் ; மஹேஸ்வரி எழுதி வைத்திருந்த கடிதம் காந்திராமனுக்கு உரியது. முறைமை கொண்டாடி, உரிமை கோரி நடைபெற்று ஒய்வு பெற்ற தூது விழாவை அவள் மறக்க முடியுமா ? ஆக, இவ்விரு முட்டுக் கட்டைகளுக்கும் முடிவு கட்டிவிடப் பிரயத்தனப் பட்டாள் அவள். அதன் காரணமாக, மூன்று தபால் களை அனுப்பி வைத்தாள். ' தமிழ்ச் சித்தன் என்னைப் பற்றிப் புரிந்து கொண்டிருப்பார் ; பாவம், சித்தன் ! காந்திராமனின் இதயப் பலகையில் அலங்கரித்த என் புகைப்படத்தை இந்நேரம் தலையைச்சுற்றி வீசி எறிந் திருப்பார் ; வாழ்க, காந்திராமன் !...என்னைப் படித்துக் கொள்ள முழுநேர வாய்ப்பை காளத்தி அவர்களுக்குக் கொடுத்திருக்கிறேன். தெய்வத்தின் கருணையே கருணை !...'

கடிதங்களை அனுப்பிவிட்டு, கடிதங்களுக்காக காத்துக் கிடக்கவேண்டியவள் ஆனாள் அவள். அன்று வரை யாதொரு லெட்டரும் அவளை அண்டி ஒண்ட வில்லை. ' காளத்தி எப்போதுமே மௌனம் சாதிக்க மாட்டாரே ? என்ன விசேஷம் ? ஒருவேளை, ' நேரில் தான் போகப் போகிறோமே ? அப்போது எல்லா வற்றையும் விளங்கப் பேசிக் கொண்டால் சரியாகப் போய்விடும் ' என்று அவர் எண்ணியிருந்தாலும் இருப் பார்' எனக் கருத வேண்டியவள் ஆனாள் அவள். அதனால்தான், கடந்த நாலைந்து தினங்களாக நித்த நித்தம் எழும்பூர் ஸ்டேஷனுக்கு அவள் காரை அனுப்பி வரலானாள். அவள் எதிர்பார்த்த காளத்தி வரவில்லை ; அவள் எதிர்பார்த்திராத ஏமாற்றம்தான் வந்தது.

' இன்றாகிலும் அவர் வரவேண்டும். ஈஸ்வரா !'

தீக்கங்கு பட்ட பூவை ஒத்த நிலையில் இருந்த வளுக்கு, மலர்மணம் சுமந்துவரும் இளந்தென்றல் பட்டாற்போன்று ஓர் இதமான உள்ளுணர்வு வெண் சாமரம் வீசிற்று. இந்நினைவோடு, இதழ்க் கரையில் குறுஞ்சிரிப்பை ஒதுக்கிவிட்டு, வாசற்புறத்தே திருஷ்டி செலுத்திய போழ்தில், வெறும் கார்மட்டிலுமே திரும்பிக் கொண்டிருந்ததைக் கண்டாள். வேதனை அவளுக்கு உடைமை பூண்ட உயிர்நிலையை அரிக்கத் தொடங்கியது.

தெய்வயானைக்குத் திருமணம் ஆயிற்றே ?

மஹேஸ்வரி ஓடியாடி அலுவல்கள் புரிந்தாள். வதுவை மடல் தயாரிப்பதிலிருந்து மணமேடை அமைப்பது வரை சகலமான வேலைகளையும் தன் தலையிலேயே போட்டுக் கொண்டாள் அவள். அதனுல் தான் போலும், நாழிக்கு ஒருமுறை அவளுடைய குழல் கற்றைகள் அவிழ்ந்து விழுந்தன ; அவற்றை அவள் அள்ளி முடிந்துகொள்ளவும் மறக்கவில்லை. மேடு அமைத்துப் பள்ளம் பறித்த மார்பகத்தில் தவழ்ந்த பட்டுப் புடவையைச் செம்மை செய்து தன் பெண்மையைக் கட்டிக் காத்துக்கொள்ளவும் அவளது பூங்கரங்கள் தப்பவில்லை. எண்ணங்கள் சமைத்த நெற்றிக் கோட்டையை விரக்தியும் விரகவேதனையும் முற்றுகையிடும் போதெல்லாம், அவள் தன்னுடைய அழியாத தன்னம்பிக்கையையும் ஆழ்ந்த நெஞ்சுப் பலத்தையும் ஏவி வெற்றிக் கொடி நாட்டிக் கொண்டே யிருந்தாள். அதனுலேதான், தன்னை மறந்து, நில்லாமல் நிலைக்காமல் திருமணத்திற்கான ஏற்பாடுகளை அவளால் செய்ய முடிந்தது. 'உன் காதல் தொடர் கதை மங்களம் பெருமல் அப்படியே அந்தரத் தில் நிற்கிறதே, மஹி ?' என்று நினைவூட்டியது

அவளுள் பிறந்த பெருமூச்சு. 'எல்லாம் எனக்குத் தெரியும், இது என் சொந்த விஷயம்!' என்று துண்டு முறுத்துப் பதிலிறுத்தது அவளுள் தவழ்ந்த மென் சிரிப்பு.

தெய்வயானையைத் தேடித் தேடி இழுத்து வந்து அவளுடன் மஹேஸ்வரி வம்பு பேசினுள்; வாயாடினுள்; வக்கணை படித்தாள். "தெயவானை, உன்னை ஒன்று கேட்கட்டுமா?" என்று ஆரம்பித்தாள்.

"என்னைக் கேள்வி கேட்பதற்கு உனக்கு இல்லாத உரிமையா, என்ன?" என்று அனுசரித்துப் பேசினுள் தெய்வயானை.

"அப்படியென்ருல், கேள்வி கேட்கிறதற்கு எனக்கு மட்டும்தான் உரிமையா?"

"ஆமாம்!"

"உன் கணவருக்கு...?"

"இன்னும் அவர் பதவியை ஒப்புக் கொள்ள வில்லையே?"

"ஆமாம்; ஒப்புக் கொண்டபின்...?"

"என்னை எதையும் கேட்கும் பாத்தியதைக்கு ஒப்புக் கொள்வேன்!"

"கெட்டிக்காரி நீ!"

"அதனுல்தான் மிஸ்டர் சுதர்ஸனம் என்னை 'லவ்' பண்ணத் தொடங்கினுர்!"

"லவ் என்ருல்...?"

"அதைப்பற்றித்தான் உனக்குப் பாராயணமா யிற்றே, மஹி?"

" எனக்குக் கதைக் காதலேப்பற்றித்தான் தெரியும். ஜூலியட்—ரோமியோ, கிளியோபட்ரா—ஆண்டனி, டெஸ்டமொனு—ஒதெல்லோ, அமராவதி—அம்பிகாபதி, மாதவி—கோவலன், மணிமேகலே — உதயகுமாரன், வர்சவதத்தை—உதயணன், சகுந்தலே—துஷ்யந்தன், லேலா—கயஸ்—இந்தப் பட்டியலேத்தான் எனக்குச் சேகரம் செய்யத் தெரியும். இந்தக் காதல் ஜோடிகளின் விவகாரங்கள் தான் எனக்கு அத்துபடி. ஆனால் உன் காதல் லீலேயைப்பற்றி மாத்திரம் ஏதும் அறியேன் பராபரமே!"

யார் சிரிக்க வேண்டுமென்று மஹேஸ்வரி ஆசைப் பட்டாளோ, அவள் சிரிக்கவில்லே. மாற்றுருவம் ஒன்று வேற்றுச் சிரிப்பைக் கக்கியது. எதிரொலித்த இடத் திற்குப் புலன் அறிவு தாவியது. புள்ளி சொடுக்கி நின்ற இடத்தில் சுதர்ஸனம் நின்று கொண்டிருந்தான். அவனைப் பார்த்ததும், மஹேஸ்வரிக்கு வெட்கமாகப் போய்விட்டது. 'என் கேள்விக்குரிய நாயகரே பிரசன்ன மாகி விட்டாரே?' என்பதே அவள் நாணப் பண்புக்கு அடிக்காரணம். ஆனால் தெய்வயானே வெட்கப்பட வில்லே. 'தேடிப்போன மூலிகை பாதத்தில் சிக்கி விட்டதே? இவரைக் கொண்டே மஹியின் சந்தே கத்தைத் தீர்த்துவிடலாம் போலிருக்கிறதே?...ஊஹூம், வேண்டாம். அது அவ்வளவு சிலாக்கியமாக இருக்க மாட்டாது. ஆகவே, நானே மஹியிடம் தனிமையில் என் காதல் நடப்புக்களேப் பற்றிச் சாங்கோபாங்கமாகத் தெரிவித்துவிட வேண்டும். அதுதான் நல்லது!' என்று முடிவை உண்டுபண்ணினுள் தெய்வயானே.

சந்தர்ப்பப் பிசகாக சுதர்ஸனம் வந்துவிட்ட காரணத்தினுல்தான் மஹேஸ்வரி வெட்கப்பட்டாளே தவிர, அவளுக்கு யதார்த்தமாகவே துணிச்சல் அதிகம்.

அவள் தோழிக்குக் கல்யாணம் ' செட்டில் ' ஆகி, மாப் பிள்ளை ஸ்திரப்படுத்தப்பட்டதும், விலாசத்தைக் கேட் டுக் கொண்டு சுதர்ஸனத்தின் வீட்டை அடைந்து, தெய்வயானைக்கு ஏற்ற முருகன்தான் அவன் என்பதை நிர்ணயம் செய்து திரும்பினாள். இம்மட்டோடுதான் அவள் தன் உரிமையைப் பிரயோகிக்க முயன்றாள். அவர்களது காதலைப்பற்றி அவள் அக்கறை கொள்ள வில்லை. இப்போது அந்தக் கவலை அவளை ஆட்கொண் டது.

எதிர்காலக் கணவருக்கு முகமன் மொழிந்து, ஸ்பெஷல் காப்பி கொடுத்து அனுப்பி வைத்தாள் தெய் வயானை. " என்னைப் பார்க்க வேண்டும் போலிருந்த தாம்; வந்திருக்கிறார். தாலிக் கூறையைக் காட்டினார்; காஞ்சீபுரத்தில் எடுத்ததாம். கையோடு உன் கேள்விக் கும் விடை சொல்லிவிடுகிறேன். நாம் நடித்த 'தீவலம்' நாடகத்தில் என் நடிப்பைக் காதலித்து, அதன் விட்ட குறையாக என்னையும் காதலித்து, அதன் தொட்டக் குறையைப் போல், என் இதயத்தையும் தொட்டுவிட்ட காவிய புருஷர் இவர். பாட்டுக் கட்டுவதற்குப் பழகி வருகிறார்; எனக்குத் துணையாக பௌடர் பூசிக்கொள் ளவும் தயாராம்."

" பேஷ், பேஷ்! வாழட்டும் உங்கள் காதல்!" என்று கைதட்டினாள் மஹேஸ்வரி. அப்போது, ' டிரங்கால் ' வந்திருப்பதாகத் தகவல் வந்தது; கார் ஓடியது.

நாளைக்குத் தெய்வயானைக்கு மணவிழா !

# 7. அவள் மஹேஸ்வரியேதானே...?

அதிசயங்கள் கண்ணாம்பூச்சி விளையாட்டுக் காட்டவில்லையானல், அப்புறம் வாழ்வு வெறும் பொட்டல்வெளி போலத்தான்! வாழ்க்கை பொட்டல்காடாக ஆகிவிட்டால், அப்பால் உலகமே ருத்திர பூமியாகி விடும். இதனை யூகித்துத்தானே என்னவோ, வாழ்க்கை என்கின்ற நெடுந்தொலைவுப் பாதை நெடுகிலும் விந்தைச் சம்பவங்கள் அங்கங்கே, அவ்வப்போது 'குறுக்கும் மறுக்குமாக' விளையாட்டுக் காட்டுகின்றன. நியதி என்னும் கோட்பாடு குறுஞ்சிரிப்பைச் சிந்த, இயற்கையின் உள்ளங்கையில் காத்திருக்கும் சந்தர்ப்பங்கள் என்கின்ற சூத்திரக் கயிற்றைப் பற்றுகிருன் மனிதன். வாழ்வின்மீது பற்று விழுகிறது. வாழ்வு அவனுக்குப் ப்ற்றுக்கோடாக இயங்குகிறது. அதிசயங்கள் போதை யூட்டச் சிரிக்கின்றன. மனிதனுக்குச்

சிரிக்கத் தெரிந்துவிடும் போதுதான், மேற்கண்ட ஆச்சரியங்களுக்குக் கண் மண் தெரிவதில்லை. ஆகவே, அப்பாவி மனிதனும் ‘ கண்கடை ’ தெரியாமல் சிரிக்கத் தலைப்படுகிறுன். மனிதன் தன்னை மறந்து நகை புரியத் தொடங்கி விட்டால், வேறு ‘ வினை ’ வேண்டுமா, என்ன ? அப்போதுதான், வாழ்க்கை கண்மயக்க ஆட்டமென உரு மாறுகிறது ; உருப் பெறுகிறது !

ஐயோ, பாவம்...!

அப்பாவி மனிதர்கள்...!

மஹேஸ்வரி காரிலிருந்து இறங்கினுள் ; காரின் கதவுகளை அடைத்துப் பூட்டினுள் ; கார்ச் சாவியுடன் வழி நடந்தாள். தன்னுடன் வழி நடந்து வந்த சிந்தனை லயத்தில் மனத்தை லயிக்கவிட்ட வண்ணம் இருந்த அவள், ‘ அப்பாவி மனிதர்கள் !’ என்று தன்னுள் மெல்ல முணமுணத்துக் கொண்டாள். உள்ளொலி உதட்டுக் கரையில் தங்கியது. மார்புச் சேலையைச் செம்மை செய்து கொண்டு தலையை நிமிர்த்திஞள். கல்யாணப் பந்தல் காட்சியளித்தது ; கபாலி கோயிலின் கோபுரக் கலசம் தரிசனம் தந்தது. உள்ளம் உள்ளடக்கி யிருந்த ஆற்ருமையில் மகிழ்வின் துளிகள் பாததூளி அமைத்தன. நிறைவின் வாசல் வழி திறந்தது. தெய் வத்தை அழைத்தாள் ; அண்டினுள். ‘ என்னைக் காத் தருள், கற்பகாம்பிகை !’

அவளுடைய பாதங்கள் பெயர்ந்தன ; சுவடுகள் தேங்கின. ஷிபான்பட்டு சலசலத்தது ; பொன் வண்டு கள் மொய்த்திருந்த வெல்வெட் சோளியில் லாவண்யம் கொழித்தது ; பருவத்தின்பூரிப்பு எம்பித் தணிந்தது. தன்னைத்தானே நோக்கினுள். ஆசைமுகம் ஒன்று நனவுப் புள்ளியென விழியசைத்தது. அவளுக்கு உரிய

இடது விழி துடித்தது. அந்தத் துடிப்பின் நினைவு முக மாகக் காளத்திநாதன் தோன்றினுன். ‘ காளத்தி !... உங்கள் பயங்கர மௌனம் என்னைப் பைத்தியமாக்கிக் கொண்டு வருகிறதே ? நீங்கள் ஏன் இதை உணர மாட்டேன் என்கிறீர்கள் ?...’

இயற்கை அன்னை இசைத்த பூபாள ராகம் முற்றுப் பெற்ற வேளை.

“ வாருங்கள், மஹேஸ்வரி !”

தலைவாழைக் குலைகளின்மீது உராய்ந்தவளாக, விலகி நடந்த போழ்தில், முகமன் ஒலி புறப்பட்டது. படர்ந்த குரல், தொடர்ந்த அவளது குரல்வளையைப் பிடிப்பதைப் போல உணரலானுள் அவள்.

அங்கே தமிழ்ச்சித்தன் அழகே உடைமையாக நின்ருன். சிவப்புத் தோலுக்கும் கறுப்புத் துணிக்கும் அமைந்த பொருத்தம் எடுப்பாகவே இருந்தது !

“ வாருங்கள், மஹேஸ்வரி !”

“ ஆமாம் !”

“ உதய சூரியன் புறப்படுவதற்கு முன்னமேயே நான் புறப்பட்டு வந்துவிட்டேன் !”

“ நான் இப்போதுதான் வந்திருக்கிறேன் !”

“ உங்கள் தோழியின் திருமண வைபவத்திற்கு நீங்கள் என்னை வரவேற்க யிருக்க, நான் உங்களை வர வேற்கிறேன் !”

“ சந்தோஷம் ! ”

“ உள்ளே வாருங்கள். முகூர்த்த நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறதாம் !”

" ஓஹோ ?"

" அப்பப்பா ! இந்தத் திருமண மந்திரங்கள் காதை அடைப்பதாக அல்லவா நான் உணருகிறேன் ?"

" நினைவு பிழை கொண்டிருக்கிறது போலும் !"

" ஊம்...நினைவு தடுமாறுகிறது !"

" அதுதான் உங்கள் பேச்சில் நன்ருகப் புரிகிறதே !"

" நீங்களும் நானும் திசைமாறி நடப்பவர்கள் என்பதைத்தான் நான் சொல்ல ஆசைப்பட்டேன். இதை நினைக்க மறந்ததால்தான் நினைவு தடுமாறுகிறது என்றேன் !"

" நல்லது !"

கல்யாணச் சந்தடிகளைக் காதுகளில் புகவிடாமல், இருவரும் பேசியவாறே நடந்தார்கள். மணப் பந்தல் வந்தது. சந்தனப் பேலாவை தமிழ்ச்சித்தன் வாங்கி அதை மஹேஸ்வரியிடம் நீட்டினுன். அவள் நகக்கண் படும்படி நுனிவிரலை நனைத்து, பிறகு நெற்றியில் இட்டுக் கொண்டாள். பன்னீர்த் துளிகள் மணம் ஈந்தன. அவன் அளித்த ஜீனி இனித்தது. அவள் அதிசயப்பட்ட நிலையுடனேயே, அவனை நேத்திரம் நிமிர்த்தி நோக்கினுள். தமிழ்ச்சித்தனின் முக விலாசத்தில், அவன் முன்னர் எழுதிய ஓர் உறைக்கடிதம் நிழலாடியது. மாடப்புருவை ஓட ஓட விரட்டும் வேடுவனை நினைப்பூட்டினுன் அவன். ' நீங்கள் காளத்தி நாதனை மறந்து விட வேண்டும் ' என்று எழுதிய வாசகத்தை அவன் விழிகள் ஞாபகப்படுத்தின. அவள் மனம் பேத

லித்தது. இரவு கண்ட கெட்ட சொப்பனம் ஊர்ந்தது. என்னைத் தட்டிப் பறித்துக் கொள்ள மனப்பால் குடிக்கும் யமன்!'

இந்திர விதானத்திற்குச் சமதையாக மணவறை விளங்கியது. தோடி ஆலாபனத்தை இதயத்துள் வாங்கி ரசித்தாள் மஹேஸ்வரி. அவள் பார்வையில் புதுமணக் காதலர்கள் நடனமாடினார்கள். 'ஆமாம்' இவர்கள் டான்ஸ் ஆடிக்கொண்டிருந்தால், திருப்பூட்டுவது எப்படியாம்?' என்ற ஒரு நகைச்சுவைத் துணுக்குப் பிசிறு தட்டியது. நல்லவேளையாக, மாப்பிள்ளை கையில் தாலியுடன் அமர்ந்திருந்தார். மஹேஸ்வரியைக் கண்டதும், கைதூக்கி வணங்கியவாறு, அருகிருந்த பதுமையிடம் புதுச்சேதியை ஒரு கிள்ளுக் கிள்ளித் தெரிவித்தார். பதுமை புதுமை சேர்த்து நாடக பாணியில் அஞ்சலி முத்திரை காட்டியது.

கெட்டிமேளம் கொட்டியது.

பறந்து வந்த அரிசி மணிகளின் ஊடே மஹேஸ்வரியும் தன் கையிலிருந்த 'அட்சதை'களை வீசிய தருணம், தன் கையுடன் உரசிய புதுக்கையை இனம் காண 'வெடுக்'கென்று திரும்பினாள். தெறித்த சினம் தறித்துக் கொண்டது. "சௌக்கியமாக இருக்கிறீர்களா, மிஸ்டர் காளத்தி?" என்று இன்பப் பெருமகிழ்வுடன் க்ஷேமலாபம் விசாரித்த மஹேஸ்வரிக்குக் கண்டம் கட்டிக் கொண்டது போலும்!

'ட்ரங்க்கால்' ஒன்று வந்திருப்பதாகத் தகவல் கிடைத்தவுடன், அவள் அவதியுடன் காரைச் செலுத்திச் சொல்லவில்லையா? அப்போது அவள் மனத்தில் ஓர் ஆசை குருத்து விட்டது. 'ட்ரங்கால் போட்டவர் காளத்தியாக இருக்க வேண்டுமே!' என்று தியானம்

செய்தது அவள் உள்ளம். எண்ணும் சுதந்திரத்திற்கு முதல் பாத்தியதை இந்த மனத்திற்குத்தானே உண்டு? ஆகவே தான், அது தன் பாட்டில் நினைவைச் சொடுக்கிற்று. ஆனால், தொலைபேசிக் கருவி சொடுக்கிய சாட்டை அவளை மருளச் செய்து விட்டதே?

புது தில்லியிலிருந்து காந்திராமன்தான் அப்படி அவசரம் அவசரமாக அழைத்திருந்தான். இருக்காதா பின்னே? அவன் அவசரம் அவனுக்குத் தெரியும். காதல் என்பதுகூட ஓர் அவசரத் தேவைதானே? ஒரு சிலர், காதலை ஒரு விபத்து என்றுகூட குற்றம் சாட்டுகிறார்களே? எந்தப் பட்டணம் கொள்ளை போனாலும் போகட்டும் என்றுதான், மஹேஸ்வரியுடன் பேச விழைந்தான் காந்திராமன். எண்ணத்தில் தோல்வியும், தோல்வியில் வேதனையும், வேதனையில் மனத்தளர்ச்சியும் நிலைநிற்க, நடந்தாள் அவள். "நான்தான் உன் காந்திராமன் பேசுறேன்!" என்று பாரதத் தலைநகரின் குரல் தமிழகத்தின் தலைநகரில் ஒலித்ததுமே,அவளுக்கு நாடி தளர்ந்து போயிற்று. 'என் காந்திராமனாமே? மண்ணாங்கட்டி!' என்று சலித்துக் கொண்டவளாக, மனச்சல்லடை சலித்துக் கொட்டிய சொற்களைக் கோர்ந்து போட்டு ஒட்டி ஒப்புவித்தாள் அவள்.

சொன்னாள் இப்படி:

"மிஸ்டர் காந்திராமன், நான் முன்பு ஒருமுறை உங்களுக்குப் போட்டிருந்த கடிதத்தில் சொல்லியிருந்ததைத்தான் இப்போதும் உங்களிடம் திருப்பிச் சொல்ல வேண்டியவளாகிறேன். கல்யாணச் சந்தையில் பெண் மாப்பிள்ளைதான் கிடைப்பார்களே தவிர, காதல் கிடைக்கமாட்டாது. எல்லோரும் பேசுவது மாதிரி,

காதல் தெய்வீகமானது அப்படி இப்படி என்று நான் பேச விரும்பாதவள். நீங்கள் என்னை விரும்புவதாகச் சொல்கிறீர்கள். ஆனல், நான் உங்களை விரும்பவில்லை. ஒருத்திக்கு ஒருவன் என்பதுதான் தமிழ் மரபு. அதைக் காப்பாற்ற வேண்டுமென்பது என்னுடைய அக்கறை யல்ல. ஆனல் என்னை நான் காத்துக் கொள்ள வேண் டாமா? நண்பர் காளத்தி எனக்கு அரண். ஆதலால், தயை செய்து என்னை மன்னியுங்கள். இன்னென்றை யும் உங்களுக்கு எச்சரிக்க வேண்டும். நீங்களும் உங் கள் குடும்பத்தவர்களும் கோட்டை கட்டுகிறமாதிரி, என்னை என் அம்மா இவ் விஷயத்தில் எவ்விதத்திலும் கட்டுப்படுத்த முடியாது. உங்கள் திருமண அழைப்புக் கிடைக்கும் பட்சத்தில், கட்டாயம் வருவேன். பந்தம் அறுந்தாலும், சொந்தம் அறுந்துவிடக் கூடாது என்பது என் தாழ்மையான அபிப்பிராயம். அப்புறம் உங்கள் மன விருப்பம்!...”

அங்கயற்கண் அம்மாள் தன் அருமைமிகு மகளின் ஆணித்தரமான பிரசங்கத்தை எட்டி நின்று ஒட்டுக் கேட்கத்தான் செய்தாள். கேட்ட சடுதியில், அவள் ஆணியால் அறையப்பட்டாற் போன்று நிலைத்துப் போனுள். மகளைக் கூப்பிட்டு நாலு அறை கொடுக்கத் தான் துடித்தாள். ஆனல், பாரறியச் சீராட்டிய கரங் கள் அவை. ‘பைத்தியக்காரப் பொண்ணு! சின்னஞ் சிறிசு!’ என்று வாய்விட்டு அனுதாபப்பட மாத்திரம் அவள் தப்பவில்லை. அழகுபோல அழைத்து, அன்பு போலச் சாதம் போட்டாள். “அத்தானை நான் கல்யா ணம் செய்து கொள்ள முடியாதிண்ணு தெரிவிச்சுப் பிட்டேன், அம்மா!” என்று நாக்குத் தடிக்க மொழிந் தாள் அவள். அப்புறம் அவள் நாலுபிடி கூடுதலாகச் சாப்பிட்டாள்!

நினைவுகளைத் தேனீக்களுக்கு உதாரணம் காட்டும் போது, அவை கொட்டாமல் இருந்துவிட்டால், பின்னர் இயல்பு கெட்டுவிடாதா? உதாரணத்திற்கு உத்தா ரணம் எங்ஙனம் கிட்டக்கூடும்?

மஹேஸ்வரிக்குத் தொண்டை வலித்தது; லேசாகக் கனைத்துக் கொண்டாள். புதிய சினிமாப்படம் ஒன்றுக் கான விளம்பரம் சித்து விளையாடிச் சென்றது. வழி யோரக் காட்சி அவள் விழியோரம் கண்சிமிட்டியது. காதலனை அண்டும் காதலி கண் காட்டிக் கருத்துக் காட்டும் பாவனையில் படங்கள் போட்டிருந்தார்கள். மஹேஸ்வரிக்குச் சிரிப்புத் தாளவில்லை. சிரிப்பைக் கக்கிய வண்ணம் மாடி நடையைக் கடந்து 'டெலி போன்' அறையை மிதித்தாள். எண்களைத் திருப்பு முன், எண்ணங்களைத் திருப்பினாள். காளத்திநாதனை அழைப்பதற்கு உண்டான உபாயங்களை ஆராய்ந்தாள். மாறாட்டம் செய்யாமல், உண்மையைப் பேசுவதே சிலாக்கியம் என நிச்சயம் செய்தாள். 'நான் அடியோடு விரும்பாத தமிழ்ச்சித்தனை அழைத்தே, நான் அந்தரங்க —சுத்தியாக விரும்பும் காளத்தியை அழைக்க வேண்டி யிருக்கிறது. கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டுக் கொண் டேன். இதோ, பொழுது படப்போகிறது. வரவில்லையே அவர்?...'

அன்றொரு தினம் மஹேஸ்வரி தபாலில் சேர்த்த கடிதங்கள் மூன்று. அவற்றுள் ஒன்று காளத்திக்கும் இருந்தது.

"அன்பரே! உடன் புறப்பட்டு நேரில் வாருங்கள். நீங்கள் உயிரையே வைத்திருக்கும் உங்கள் தோழர் தமிழ்ச்சித்தன் 'விதி'யின் உருக்கொண்டு விளங்கு கிறார். என்னை உங்களிடமிருந்து மறைத்துக்கொள்ள

வேண்டுமாம்!..நான் அவரை உணரும் காலம் வருமாம். அதுவே அவரது பாக்கியமாக அமையுமாம். சித்தன் சித்த பேதம் அடைந்து விட்டிருக்க வேண்டும். மறந்து விடாமல், வந்து சேருங்கள். உங்கள் உயிரை நீங்கள் எவ்வாறு மறப்பீர்கள் ?—மஹேஸ்வரி."

காளத்தியின் முகத்தை அழித்துவிட்டு, சித்தன் முகம் காட்டுவதாக ஓர் உணர்ச்சி ஊடுருவிற்று. அவளுக்கு எரிச்சல் கூடியது. பொறிந்து கொட்டிக் கடிதம் வரைந்து தமிழ்ச் சித்தனுக்கு அனுப்பியதை அவள் கடந்த சில நாட்களாக அல்லும் பகலும் நினைவு கூர்ந்தாள். மெய்.

"ஐயா, சித்தரே! உங்கள் தில்லுமல்லுச் சித்து விளையாட்டுக்கு ஏற்றவள் இந்த மஹேஸ்வரி அல்லள். நெஞ்சில் குறிபோட்டுக் கொள்ளுங்கள். வெளியே அமிர்தமும் உள்ளே விஷமும் வைத்துப் படம் காட்டும் 'நல்லது' நீங்கள். நல்லதை நினைக்க, நல்லதைச் செய்ய, நல்லதற்கு வழி காட்டக் கற்றுக் கொள்ளுங்கள். அப்போதுதான் உங்களை நீங்கள் கற்றுக்கொள்ள வாய்ப்பு உண்டாகும். காலம் ஒரு மருத்துவன் அல்லவா? அந்த மருத்துவனிடம் கொஞ்ச காலத்துக்கு 'ட்ரீட்மெண்ட்' எடுத்துக் கொள்ள வேண்டுகிறேன். அன்பர் காளத்தியை நான் மறக்க வேண்டுமா? இவ் வரியைப் படிக்கும்போது, உங்களுக்கே நகைக்கத் தோன்றவில்லையா? ஐயோ, பாவம்!—மஹேஸ்வரி."

அவள் மனம் வலித்தது. 'இந்தப் புண்ணியவான் நேற்றுதினம் ஒன்றுமே நடக்காதது மாதிரி எப்படி என்னிடம் அப்படிச் சுமுகமாகப் பேசினர்?...நல்ல... பாம்பு!...ஊம்!...நல்லபாம்பு!...'

நெற்றிமேட்டில் நரம்புகள் முட்டிப் புடைத்தன. மூண்ட சினத்தைத் தட்டி அணைத்தது அவளது நெஞ்சத் துணிச்சல்.

'டயல்' பண்ணப்பட்டது.

காளத்திநாதனின் குரல் கேட்டது. இன்னும் ஒரு மணி நேரத்திற்குள் அவளைக் காண்பதாகப் பதில் கிடைத்தது.

மஹேஸ்வரிக்குப் பாதங்கள் தரையில் பாவவில்லை. சற்றுமுன் சாதித்து முடித்த சாதனையை எண்ணினாள். பெருமை பிடி கொடுக்கவில்லை. ரவிக்கைக்குள்ளிருந்து பளபளப்புத் தாள் ஒன்றை நலியாமல் எடுத்தாள். அது திருமண மடல். நிறை பெருக்குக்கு நிகராகச் சிரிப்பைச் சிந்தினாள். ஊர் காக்கும் மஹேஸ்வரியா அவள்?

இதோ, அழைப்பு :

மணமகன் : **காளத்திநாதன்.**

மணமகள் : **மஹேஸ்வரி.**

# 8. வண்ணக் கலாப மயில்

“இன்பங்களை மனம் சுமந்து கொண்டிருக்கையில், கடிகாரத்தின் முட்கள் பொறுமையையும் தாமதத்தையும் சுமந்து கொண்டிருப்பதாகத் தோன்றுவது உண்டல்லவா? அப்படித்தான், மஹேஸ்வரிக்குத் தோன்றியது. ‘காளத்தியை இன்னமும் காணுமே?’ என்று சிந்திப்பதற்குப் பதிலாக, ‘ஏன் இப்படி கடிகாரம் மெதுவாக ஊர்கிறது?’ என்று சங்கடப்பட்டாள். இன்பத்தின் சுமைகூட ஓர் இன்ப வேதனைதானே?

அங்கயற்கண் அம்மாள் நடந்து வரும் அரவம் கேட்டது. அரவம் கண்டாற்போல, மஹேஸ்வரி திணறினாள். ஆர்வத்தை இமை வரம்புகளில் தேக்கித் துடிப்புக் காட்டிய கண்கள், இப்போது அச்சத்தைத் தேக்கியிருந்தன. ‘காளத்தி வரட்டும்; வந்ததும், அவரிடம் கலந்து ஆலோசனை செய்து கொண்டு,

அப்புறம் அம்மாவிடம் சகல விஷயங்களையும் தெரியப் படுத்திவிடலாம். அதுதான் சாலச் சிறந்தது !' நினைவுத் தடத்தில் தவழ்ந்து கொண்டிருந்த அவள், தன்னைத் 'தடயம்' கண்டு கொள்ளாமல் இருக்க வேண்டி, கையில் வைத்திருந்த அந்த அழைப்பைப் பழைய இடத்தில் ஒளித்தாள். ஒளிர்ந்த இன்பம் அவள் ஒருத்திக்குத்தானே புரியும் ?

நிலவு ராணிக்கு ஆரத்தி சுற்றக் காத்திருந்தாள் அந்தித் தோழி. சிந்தூரச் சிவப்பின் எழில் பஞ்சுப் பொதிக் கண்டங்களில் படர்ந்தது. அழகைப் பிரதி பலித்தது, அழகு.

" மஹறி...!"

" அம்மா !"

" இன்னிக்கு நல்ல நாள் அம்மா !"

" எனக்கும் தெரியுமே ?"

" அப்படியா ?"

" ஊம் !"

" நீ ட்ரங்காலிலே பேசினதை நான் கேட்டேன் !"

" அது எனக்கும் தெரியுமே !"

" அப்படியா ?"

" ஊம் !"

" இப்ப உங்கிட்ட உன் விஷயமாக் கொஞ்சம் பேசவேணும்...!"

" கொஞ்சம் என்ன, நிறையப் பேசம்மா !"

"உன் அப்பா நையாண்டி செய்கிறதை அப்பிடியே சொல்லிக் காட்டுறீயே, மஹறி ?"

" அப்பா உயிரோடு இருந்திருந்தா, உனக்குந்தான் எத்தனையோ தொல்லைகள் குறைஞ்சிருக்கும். இல்லையா, அம்மா ?"

" தொல்லைகளின்னு...?"

" அதாம்மா, என் சம்பந்தப்பட்ட தொல்லைகளைச் சொல்கிறேன் !"

" என் கடமையை நான் செய்ய வேணுமா? உன்னைப் பத்து மாசம் சுமக்கிறதுக்கு நான் சுத்தின கோயில் ஒண்ணு, ரெண்டா? ஆடின தீர்த்தம் கொஞ்சமா; நஞ்சமா ?...தவம் இருந்து பெத்த தங்கம் நீ, மஹி!"

" வாஸ்தவமாவே நான் புண்ணியம் செஞ்சுதான் இருக்க வேணும், அம்மா !"

" உன் கல்யாணம் வரைக்குமாச்சும் உன் அப்பா இருந்திருக்கலாம் !"

" கடவுள் சித்தம் நமக்கு அனுசரணைப்படலையே, அம்மா ?"

" மஹி, கண்ணைத் துடைச்சுக்க, அம்மா !"

" நீயும் துடைச்சுக்க, அம்மா !"

"மஹி !"

" என்னும்மா ?"

" உன் கல்யாணத்தைப் பத்தி ஒரு முடிவு செஞ்சாகணும், மஹி !"

" செய்யேன், அம்மா !"

" எம் பொண்ணு குறிப்பறிஞ்ச தங்கமாச்சுதே !"

" பின்னே...?"

" வந்து..."

" ம்...வந்து..."

" நீ என்னம்மா, விளையாடுறே?"

" கல்யாணத்தை விளையாட்டு ஆக்கமுடியுமா, அம்மா?"

" சரி!"

" சொல்லம்மா!"

" உன்னைக் கல்யாணம் பண்ணிக்க வேணும்னு..."

" வேணும்னு..."

" அந்தப் பிள்ளை சித்தன்..."

" சித்து விளையாடுறார்...!"

" சித்தும் இல்லே; ஒண்ணும் இல்லே. ஒத்தைக் காலிலே நிற்கிறார்!"

" என்னைக் கட்டிக்கிடுறத்துக்காக அவர் ஒற்றைக் காலிலே இல்லே, ரெட்டைக்காலிலேயாக்கும் நிற்கிறார்! ...ஆமாம்மா! நான் இப்ப சொன்னேன் பாரு, அது நூற்றுக்கு நூறு நிஜம்!"

" புரிஞ்சுக்கிட்டியே கண்ணு?"

" புரியாம இருக்குமா, அம்மா?"

" அப்படின்னு, தேதியை எப்ப வச்சுக்கிடச் சொல்லுவோம்?"

" இந்தமாதக் கடைசீலே ஒரு முகூர்த்தத் தேதியைப் பார்த்துக் குறிச்சுப்பிடச் சொல்லம்மா!"

" எல்லாம் அப்பன் அருள்!"

" மெய்தான்!"

" மஹி !"

" அம்மோவ் !"

" இன்ஞெரு சேதி...!"

" சொல்லேன் !"

" நீ வருத்தப்படப்பிடாது !"

" ஊஹூம் !"

" அந்தப் பிள்ளையாண்டன் இல்லே...!

" யாரு...உன் மாப்பிள்ளே தானே ?..."

" ஊஸ்!...' அது ' இல்லே !...அந்த...காளத்தி..."

" ஆமா ; அவருக்கு என்ன ?"

" அதுவோடே முன்னைமாதிரி இனியும் அதிகச் சன்னுட்டம் வச்சுக் கிடாதே !"

" சொல்லித் தெரிய வேண்டிய சங்கதியா அம்மா இது ?"

" எம்மகள் சொக்கத் தங்கமாச்சே? படிச்சது இல்ல, எல்லாம் சொல்லாமலேயே உனக்கு அர்த்தமா கிடாதா ?"

" ஊம் !...வந்து...அம்மா !...காளத்தி ரொம்ப நல்லவராக்கும். பாவம், அவரே வலிய வந்து, நான் சித்தனைக் கட்டிக்கும்படி என்னைக் கேட்டுக்கிட்டிருக் கார் அம்மா ! இப்பகூட, அது சம்பந்தமாப் பேசறதுக்கு இங்கே வந்தாலும் வருவார் !..."

" சரி ; வார்த்தைகள் தான் வாழ்க்கைக்கு சோதனை போடும். ரொம்பக் கவனமாய் நின்று நிதானச்சு, அளந்து பேசம்மா !"

" நான் மஹேஸ்வரி அம்மா, மஹேஸ்வரி !"

" தாயே மஹேஸ்வரி, எங்களைக் காப்பாற்று... தாயே !"

" நீங்கள் வராமல் ஏமாற்றி விடுவீர்களோ என்று துடித்துப்போய் விட்டேன் !"

வாய்மொழிதனை உதிர்த்த போது, மஹேஸ்வரியின் இதயத் தளம் அதிர்ந்தது. துடியாய்த் துடித்தது. அத் துடிப்பு, நீள் விழிகளில் தடம் பதித்தது. 'காத்திருந்து காத்திருந்து எத்தனை தடவை ஏமாந்தேன், தெரியுமா ?' என்ற உரிமைக் கோபத்தின் உள்ளுணர்வு ஒருபுறம் குரல் காட்ட, ' உங்களுக்காக எவ்வளவு ஆவலோடு, ஆசையோடு, அன்போடு காத்திருக்கிறேன் ! என்னை ஏமாற்ற உங்களுக்கு எவ்வாறு மனம் வந்தது ?' என்ற ஐயப்பாடு மறுபுறம் சினம் காட்ட, அவள் பேசினாள். அவளா பேசினாள் ? அவள் வர்ஷித்த கண்ணீர் அல்லவா பேசியது? அவளா பேசினாள்? அவள் நெட்டித் தள்ளிய நெடுமூச்சு அல்லவா பேசியது ? நெஞ்சைத் தொட்டுக் கொண்டாள். ' நெஞ்சகம் நிலைத்த காளத்தி தான் நேர்முகம் காட்டத் தோன்றி விட்டாரே ?' என்ற சூட்சுமப் பேச்சு உள்ளே கிளை பரப்பியது. பொருட் காட்சியில், தான் வேண்டிய விளையாட்டுப் பொம்மையை அட்டி சொல்லாமல் வாங்கிக் கொடுத்துவிட்ட அப்பாவைக் குழந்தை பார்க்குமே, அதுபோல அவள் அவனைப் பார்த்தாள். ' என் வேண்டுகோளை நிறைவேற்றிய அன்பர் ' என்ற இங்கிதப் பெருமிதம் அவளது இதயத்தில் சுடர் தெறித்தது. சுடரொளி கண் கமலங்களுக்கு வண்ணம் தந்தது. மாடிப்படி கடந்து ஓடிச்சென்று அவனை வரவேற்ற நிகழ்ச்சியே அவளுக்குப் பிரமை தட்டிக் காட்டியதோ ?

" வாருங்கள், காளத்தி !"

காளத்தி சிரிப்பைப் பயின்றான். பொரிந்திருந்த உதட்டுப் பாளங்களின் வெடிப்புக்களிலே சிரிப்பின் இழைகள் ஓடி ஒளிந்து கொண்டன போலும்! சொல் லுக்குச் சொல் சிரித்து-சிரிப்பூட்டி, மகிழ்ந்து-மகிழ்வு ஊட்டிய அந்த நாட்கள் எங்கே?

ஒரு நாள் :

அப்போதும் மஹேஸ்வரியின் தந்தை உயிர் கொண்டுதான் விளங்கினார். மஹேஸ்வரிக்கு கல்லூரிப் பேராசிரியை சொல்லித் தந்த குறிஞ்சித் திணைப் பாட்டு ஒன்று விளங்கவில்லை. 'உம்' மென்று உட்கார்ந்து விட்டாள். டென்னிஸ் ஆட தவியாய்த் தவித்த காளத்தி, உடனே அவளைச் சல்லடை போட்டு அரித் தான். அவளது மன அரிப்பை அவன் வசம் ஒப்படைத் தாள். பாட்டுப் புரியவில்லை. "சரி...சரி, வா, வா! முதலிலே விளையாடுவோம். அப்புறம் சாப்பிட்டு விட்டு, உன்னுடைய பேராசிரியை அம்மாவுக்கு 'போன்' செய்கிறேன். உன் ஐயம் பறக்க ஆவன செய்கிறேன். முடிந்த வரை, சிரித்துக் கொண்டே இருக்க வேண்டு மாம். எங்கள் காலேஜில் கலைவாணர் பேசிய பேச்சை என்னுடன் நீயும் அமர்ந்து கேட்கவில்லையா, மஹி? எங்கே, சிரியேன்!—"

அந்த நாட்கள் எங்கே?

அந்த உலகம் எங்கே?

மஹேஸ்வரியின் கண்களிலே கண்ணீர் முட்டிக் கொண்டு புரண்டது. 'காளத்தி ஏன் ஒருமாதிரியாக இருக்கிறார்?'

அன்னையின் காதுகளிலே வீசிய பொய்மொழிகளை எண்ணியபோது, அவளால் கள்ளநகைப்புக் காட்டாமல்

இருக்க முடியவில்லை. காளத்தியை ஆசனத்தில் உட்கார வைத்தாள் அவள். தனியாகத் தயாரித்து வைத்திருந்த ' டிக்ரி காப்பி'யைக் கோப்பையில் ஊற்றி நீட்டினாள்.

' நப்புக் கொட்டி'க் குடித்தான் அவன். புழுங்கிய கண்ணீரையும் குடித்திருக்கவேண்டும். " என்னமோ சொல்லவேண்டுமென்றாயே, மஹி?" என்று சன்னக் குரல் எடுத்து வார்த்தைகளைப் பின்னிவிட்டான்.

" வாருங்கள், பீச்சுக்குப் போவோம். அங்கே போய், நிறையப் பேசுவோம்!"

" ஏன், இங்கேயே பேசலாமே?"

" *காரணம்...?*"

" *சும்மாதான்!*"

" ஊஹும்; முடியாது. மஹேஸ்வரியை நீங்கள் அறியாதவர்களா? நான் வீம்பு பிடித்தவள் என்று நீங்கள் அடிக்கடி கேலி செய்வதில்லையா? அதை இப்போதும் மறந்துவிடாதீர்கள். தயவுசெய்து, என்னுடன் வாருங்கள். நானே காரைச் செலுத்தி உங்களை அழைத்துப் போகிறேன். இம்மாதிரியான நேரடி நடவடிக்கைதான் இனி நமக்குத் தீர்ப்பு வழங்க வேண்டும்!" என்று பொய்க் கோபம் காட்டி, உண்மைக்கு மாறாமல் சிரிப்பை வெளியிட்டாள்.

விண்மிசை ஊர்ந்த வண்ணம்சேர் மேகக் கண்டங்களைக் கண்டு, வண்ணக் கலாப மயில் மண்ணில் பறந்தாடுவது புறம்பல்லவே?

கார் பறந்தபோது, அவளும் பறந்த விந்தையை காளத்திதான உணர்ந்திருக்கமாட்டான்?

# 9. இப்படிக்கு...காளத்திநாதன்

ஒன்றன்மீது ஒன்ருக ஏறி விழுந்து, ஒன்றிலிருந்து ஒன்ருகப் பிரிந்து விலகி, ஒன்ருேடு ஒன்ருக ஒட்டி உறவாடி விளையாடிக் கொண்டிருந்தன கடல் அலைகள். செக்கச் சிவந்த பெதும்பை பூப்பெய்தியவுடன், கன்னங்கள் கன்றிச்சிவப்பது உண்டல்லவா, அந்த ஒப்பனைக்கு ஒப்பாக, அடிவானம் விளங்கிற்று. மருதாணி பூசிய பட்டிக் காட்டுப் பூவையின் அழகான விரல் நகத்தில் வரம்பு கட்டிய வளைவு போன்று, பிறைக்கீற்று அலைகடலுக்குள்ளிருந்து 'மெள்ள—மெல்ல' எழுந்து கொண்டிருந்தது. வெண்மை நிறக் குமிழ்களிலே செம்மை நிறப் புள்ளிகள் தத்தளித்தன; பளிச்சிட்டன; படபடத்தன.

அமைதி செழித்த மணல் வெளி.

மூச்சின் இழைகள் தொட்டுக் கொள்ளவல்ல அளவில், அவ்வளவு நெருக்கமாக அமர்ந்திருந்தார்கள் மஹேஸ்வரியும் காளத்திநாதனும். அவன் ‘ சம்மணம் ’ கோலியிருந்தான். அவளோ நாலு பெண்கள் மாதிரி யாக, இடது கைத் தாங்கலில் மேனியைச் சாய்த்த வளாக, கால்களை மடக்கிய வண்ணம் வீற்றிருந்தாள். வலதுகைக் கட்டைவிரல் நெற்றிவட்டத்திற்கும் கூரிய நாசிக்கும், விரிந்த இதழ்களுக்குமாக மாறி, மாறித் தாவியணைந்து கொண்டிருந்தது. அவள் தன்னைத் தானே நோக்கினுள். உட்புறம் செருகி வைக்கப் பட்டிருந்த அழைப்பின் நுனி கண்ணுக்குத் தென் பட்டது; அந்தத் தாளின் ஒட்டுறவு காரணமாக, அவளுள் இனியதோர் உணர்வு சதா ஊறியவாறு இருந்தது. சிரித்தாள். ஆனுல், அவன் சிரிக்க வில்லையே ?

“ காளத்தி, நானும் அப்போதிருந்தே உன்னிப் பாகக் கவனித்துக் கொண்டேயிருக்கிறேன். நீங்கள் எதையோ பறிகொடுத்தாற் போலவே காணப்படுகிறீர் களே, ஏன் ?”

காளத்தி கண்களைத் துடைத்துக் கொண்டு சொன்னுன்: “ ஆமாம், மஹி ! நான் எதை சேமநிதி யெனப் போற்றி வந்தேனே, அதைப்பறிகொடுத்தேன். நான் எதை விலைமதிப்பில்லாத பொருளாக மதித் தேனே, அதை இழக்கும் நிலையில் ஊசலாடிக் கொண் டிருக்கிறேன். சடலம் இருக்கிறது. உயிர் தவிக் கிறது. உள்ளம் இருக்கிறது. உணர்வு தத்தளிக் கிறது. என்ன செய்வது ? என் பாக்கியம் இவ்வளவு தான் !” அவளைத் தலைநிமிர்த்திப் பார்க்காமலேயே, அவன் பேசினுன்.

" புதிராகப்படுகிறதே உங்கள் பேச்சு, மிஸ்டர் காளத்தி?"

" நானே புதிராகத்தான் மாறி விட்டிருக்கிறேன், மஹேஸ்வரி!"

" இங்கிலையை உங்களால் உணரமுடிகிறதா?"

" என்றோ உணர்ந்திடமுடிந்ததே!"

" அப்படியிருந்துமா, என்னைமட்டிலும் உங்களால் புரிந்து கொள்ளக் கூடவில்லை?"

" என்னைக்காட்டிலும் உன்னை ஒருவன் அறிந்து கொண்டிருப்பானா, மஹறி?..."

" அப்புறம், ஏன் நீங்கள் என் கடிதங்களுக்குப் பதில் அனுப்பவில்லை?"

" சந்தர்ப்பங்கள் என் பேனாவின் வாயைக் கட்டிப் போட்டு விட்டன. இப்படிப்பட்ட விசித்திரமான சந்தர்ப் பங்களைப்பற்றி ஷேக்ஸ்பியரின் 'ஒதெல்லோ' நாடகத் தில்கூட சமீபத்தில் நீ படித்திருப்பாயே?"

" அந்தச் சந்தர்ப்பங்களுக்குப் பெயர் 'விபத்துக் கள்' ஆயிற்றே?"

" அப்படி வேண்டுமானாலும், வைத்துக் கொள்ள லாம். தவறு கிடையாது!"

" விளங்கும்படியாகப் பேசலாகாதா, காளத்தி?"

இரும்புப் பிடியாக இறுக்கிய பூக்கரத்திற்கு நலுங் காமல் விடுதலை ஈந்தான் அவன். அவளை அவன் உறுத் துப் பார்த்தான். கரம் தொட்டவளின் உள்ளத்தைத் தொட முனைந்தானா?...முயன்றானா?

" மஹறி, தயவு செய்து நீ இந்த ஏழைக் காளத்தியை மறந்துவிடு!"

“ஐயையோ! என் உயிரை நான் மறக்க வேண்டு மென்கிறீர்களே ?...உங்களுக்கு இதயமே இல்லையா ?”

“மறந்துவிடு, மஹி, மன்னித்துவிடு உன் தந்தையின் அன்பில் ஒதுங்கி, உன் பாசத்தின் நிழலில் ஒண்டி வளர்ந்த இந்த ஏழையிடம் இதயம் இருக்கிறது. அதனால்தான் உனக்குத் துரோகம் செய்யக் கூடாதென்று இப்போது இப்படி வெளிப்படையாகச் சொல்லத் துணிந்தேன். ‘மனித்தப் பிறவி’யை அடியார்கள் சிலர் வேண்டுகிறார்கள் ; சிலர் வெறுத்தார்கள். எனக்கென்னவோ, உங்கள் வீட்டின் அன்புக்கு நன்றிக் கடன் செலுத்துவதற்காகவே மறு பிறவி எடுக்க ஆசை துடிக்கிறது, மஹி! அந்த ஒரு விட்ட குறை—தொட்ட குறைக்காவது, நீ என்னைப் பெரிய மனசு பண்ணி மறந்து விடுவதுதான் உசிதம். அதுதான் உனக்கும் நல்லது ; எனக்கும் நல்லது !”

“அப்படியென்றால், என் எதிர்காலம் என்ன ஆவது காளத்தி...?”

“உன் எதிர்காலம் வனப்பு வாய்ந்ததாக மட்டுமின்றி, வளப்பம் வாய்ந்ததாகவும் விளங்கும். அதற்குத் தான், என்னுடைய இனிய நண்பர் தமிழ்ச்சித்தன் இருக்கவே இருக்கிறாரே ?”

‘தமிழ்ச்சித்தன்’ என்ற பெயரைக் கேட்டதும், நாராயணன் நாமத்தை பிரஹலாதன் உச்சரிக்கக் கேட்ட இரணியன் போலக் கொதித்தாள் மஹேஸ்வரி. தன் அன்னையிடம் தமிழ்ச்சித்தனை மணக்க ஒப்புவதாக ‘நடித்த’ கட்டத்தை நினைவு கூட்டினாள். தமிழ்ச் சித்தன் தன்னுடைய வாழ்வில் நந்தியாக நிற்க ‘ஆசைப்பட்ட’ நடப்புக்களை அடுக்கடுக்காக நினைத் தாள். அவனது மூளையில் உறைக்குமாறு ‘டோஸ்’

கொடுத்த கடிதங்களையும் நேரிடைப் பேசிய வசனங்களையும் மன ஒளிப்படக் கருவியைக் கொண்டு படம் போட்டுப் படம் பார்த்தாள். உட்கார்ந்திருந்தவள் எழுந்தாள் ; வீறு கொண்டு எழுந்தாள்.

மஹேஸ்வரியை முகம் நிமிர்த்தி நோக்கினான் காளத்தி. " மஹி, நீ இப்படி உணர்ச்சி வசப்படுவது கூடாது !"

அவள் மஹேஸ்வரியா ? அல்லது, ஊழி நர்த்தனம் புரிந்த தேவியா ?

காளத்தியின் சப்த நாடிகளும் ரத்த ஓட்டம் இழந்தன ; செயல் மறந்தன ; செய்வகை புலப்படாமல் ஸ்தம்பித்தன.

" மஹி...!"

" சொல்லுங்கள் !"

" உனக்கு அனுப்ப வேண்டுமென்று பல நாட்களுக்கு முன்னதாக எழுதி வைத்த கடிதம் இது !"

" எனக்கா ?"

" ஆமாம் !"

பாதரஸ விளக்கை நாடி நடந்தாள் அவள். தொடர்ந்தான் அவன்.

" கொடுங்கள் !"

அவள் அதை வாங்கினாள். வாய்விட்டுப் படித்தாள்:

" மஹேஸ்வரி !

நான் ஏழை. நீ பணக்காரர் வீட்டுச் செல்வி. உனக்கு ஏற்ற இணை தமிழ்ச்சித்தன். உன்னை அடையாவிட்டால், அவன் கிறுக்காகி விடுவான். தயை செய்து, என்னை மறந்து

விடு! என்னை மறக்க முடியாமல், சோறு தண்ணீர் இன்றி வாடும் என்னுடைய ஏழை முறைமைப் பெண் ஆண்டாளுக்கு நான் வாழ்வு தரவேண்டும். உங்கள் அன்பை உயிருள்ள மட்டும் மறவேன்.

இப்படிக்கு,
**காளத்திநாதன்.''**

கடிதத்தை எடுத்த அவசரத்தில், சட்டைப் பையில் மடித்து வைத்திருந்த ஒரு பத்திரிகையும் சேர்ந்து விழுந்தது. திருப்பாதிரிப்புலியூரில் காளத்தியின் சொந்த வீடு கடனுக்காக 'ஜப்தி' செய்யப்பட்டதாகவும், அப்போது காளத்தி அலறித் துடித்த காட்சியைக் காண ஊரே கூடிவிட்டதாகவும், கடைசியில் தமிழ்ச் சித்தன் காரில் பறந்து வந்து வீட்டை மீட்டுக் கொடுத்ததாகவும் சொல்லப்பட்டிருந்த சேதியை வாசித்தாள். பிறகு, அந்தப் பேப்பரை வீசி எறிந்தாள்.

"கெண்டையைப் போட்டு, கெளுத்தி மீனைப் பிடிக்க கங்கணம் கட்டியிருக்கிறான் தமிழ்ச்சிததன்!''

"மஹேஸ்வரி, தயவு செய்து தமிழ்ச்சித்தனை குறைவாக ஏதும் பேசாதே. அவன் நல்லவன். நாணய மானவன்!''

"ஆமாம், நல்லவன்தான்! ஆண்டவனே இல்லை யென்று வீறுப்புப் பேசுபவன் நல்லவனேதான்! பாவம், நீங்கள்! பண நோட்டைக் காட்டி, உங்கள் குண நலத்தை நோட்டம் புரிந்து வைத்திருக்கும் சாகஸக் காரன் அவன்!''

"மரியாதையாகப் பேசு, மஹி!''

"மரியாதைவிட்டு விலகிச்சென்றவனின் கதையை மறந்து நாட்கள் பல ஆகிவிட்டனவே! என்னையே

உங்கள் காலடியில் அர்ப்பணிக்கக் காத்திருக்கிறேன் நான். நீங்களோ, அந்தப் பாவிமுன் அப்பாவியாகி விட்டிருக்கிறீர்கள் ! ஈஸ்வரா !...”

“ நீ இன்னும் சிறுமியாகவே இருக்க ஆசைப்படு கிருயா ?”

“ நான் உலகம் அறிந்தவள் என்பதை என்னுடைய இப்போதைய துணிவே உங்களுக்குக் காட்ட வில்லையா ? . ”

“ காட்டத்தான் செய்கிறது...!”

“ காளத்தி, முதலில் இதைப் படியுங்கள் !” என்று கூறி, மறைத்து வைத்திருந்த அந்த மணவினை மடலை நீட்டிஞள். அழைப்பை எடுத்த அவசரத்தில் விடு பட்டுப்போன தலைப்புப் பொத்தான்கள் இரண்டையும் அழுத்திஞள். அவள் அவனையே வெறிக்க வெறிக்கப் பார்த்தாள். ஒருவகையான பதட்டமும், பயமும் ஆட்டிப் படைத்துக் கொண்டேயிருந்தன.

“ மஹி ! ”

“ பேச நேரமில்லை. என் பேச்சுக்கு மறுத்தீர்களா ஞல், என் முடிவை இந்தப் பொங்குங்கடல்தான் உங்களுக்குச் சொல்ல வேண்டிவரும் ! நடங்கள் என்னுடன்!” என்று ‘ஆணை’ பிறப்பித்தாள் மஹேஸ்வரி.

“ ஐயையோ !...மஹி ! இப்போது காரிலே நாம் எங்கே போய்க்கொண்டிருக்கிருேம்... இந்த இரவிலே ? சொல்லமாட்டாயா, மஹேஸ்வரி ?” என்று நச்சரித்த அவனது கேள்விகள், அப்போதைய நிலையில் அவளு டைய செவிகளில் விழுந்தால்தானே...?

# 10. நிழல் எனும் கடவுள் !

"காளத்தி!" என்ற அழைப்புக் குரல் புறப் பட்டபோது, 'கடலே கதி'யென ஓடிக்கொண்டிருந்த அந்தக்கார் நின்றது. சகலவிதமான உணர்வுகளையும் தன்னிடமிருந்து தட்டிப் பறித்துக்கொண்டவளாகவே மஹேஸ்வரி அவனுக்குத் தோற்றம் அளித்தாள். சோள முறுக்கை அபகரித்துக் கொண்டு பறந்த பருந்தை மீண்டும் குழந்தை காண நேர்ந்தால், அதற்கு எப்படி ஆத்திரம் வரும்? அப்படித்தான் அவனுக்குப் பெருஞ் சினம் மூண்டது. பருந்தை எதிர்க்க பாலகனால் முடியா தல்லவா? அது போலவே, காளத்திநாதனின் நிலையும் நினைவும் இருந்தன. வண்ணக் கலாபமயிலெனத் தோன்றினவள் அல்லவா அவள்? மேகங்களின் மோகச் சிரிப்பைக் கண்டு மனம் பூரித்து, உடல் மகிழ்ச்சி பூத்து, சிந்தனையே சிரிப்பாய்-சிரிப்பே சித்தமாய் ஓடி ஆடித் திரிந்த அழகுமயில் ஆயிற்றே அவள்? அவளை எப்படி

அவன் சாடமுடியும்? ஏச முடியும்? காரிலிருந்து இறங்கியவன், கைகளைக் கட்டிக்கொண்டு நின்றான். கண் மயக்கத்துக்கு அடிமைப்பட்ட பாவனையில்-நிலையிழந்த நிலையில் தவித்தான். கண்கட்டு மந்திரத்தால் மடக்கப் பட்டவன் போன்று மறுகினான். கண்ணாமூச்சி ஆட்டத்தில் நெடுநேரமாகக் கண்கட்டைச் சுமந்திருப்பவனாக அலுப்புச் சலிப்புச் பெற்றான். 'பலகாலம் தனிமை ஏற்று, தூய்மை போற்றி, நோன்பு இயற்றி, தவம் இருந்து பெற்ற சக்தி முழுமையும் செல்லாமற் போகக் கடவது' என்று சாபம் வாங்கிக்கொண்ட முனிவரைக் காட்டிலும், அகம் மிக வருந்தினான் அவன். ஏதோ ஒன்றை இழந்து, நின்று கொண்டிருந்தான் அவன். சிதைந்த கூடாக மாறி நின்றான். வதைபட்ட சதைத்துணுக்குகள் போல எண்ணங்கள் துடித்தன. உள்ளுணர்வு அவனது சித்தக்கலக்கத்தைத் தெளிவடையத் தூண்டியது. சுற்று முற்றும் நோக்கினான். நிலவு தந்த சீதனமாகச் சீதளக் கதிர்க்கற்றைகள் படர்ந்து, பரவி, நெளிந்து வளைந்து கிடந்தன. 'மஹி!' என்ற குரல் பின்னமடைந்து, சன்னக் குரலில் எழுந்தது. அவளைக் காணோம்!

வியப்பு அவனை நிலைகுப்புறத் தள்ளுவதற்குள்ளாக, நல்லவேளையாக, மஹேஸ்வரி வந்து சேர்ந்தாள். கையில் சோடாப்புட்டி இருந்தது. நுரை கொப்பளித்தது. "உங்களுக்குத்தான்!" என்று சொல்லி, அவனிடம் அதை நீட்டினாள்.

பேசப்பயிலாத கைக்குழந்தையின் ஸ்தானத்தில் அவன் நின்றான். தன் கண்களை ஏவி, அவளது விழிகளின் இதயத்தை அறியக் கோரினான். வெற்றி கொண்ட பெருமிதம் விழிக்கரையில் ஒதுங்கியிருப்பதை மட்டுமே அவனால் உணர முடிந்தது. 'என்னை நம்பிய

சித்தனுக்கு-எனக்கு நம்பிக்கையூட்டிய தோழனுக்கு, என் வாழ்வைக் காத்த சோதரனுக்கு நான் துரோகம் செய்யவேண்டிய சூழல் உருவாகி வருகிறதே? இதை என்னல் எப்படித் தடுத்து நிறுத்த முடியும்?...முன்பின் பார்த்திராத ஓரிடத்திலே என்னைக் கொண்டுவந்து நிறுத்தி வேடிக்கை பார்க்கிறளே, மஹி! என்ன சோதனை இது? ஆண்டவன் என்வரை செய்து தீர்த்த சோதனைகள் போதாதா?...'

மிச்சம் சொச்சம் வைக்காமல் குடிக்க வேண்டு மென்று அவனுக்கு எண்ணம். அவ்வளவு தாகம். ஆனல், பாதி அளவுதான் அவனல் பருக முடிந்தது. நீட்டிய பூங்கரத்தில் நீட்டினன். அடுத்த இமைப் பொழுதில், அவன் ஓர் அதிசயத்தை உருவமாக்கி-உள்ள மாக்கி-கனவாக்கி-நனவாக்கி தரிசித்தான்!

மஹேஸ்வரி கண்களை இறுக மூடியவாறு அந்த எச்சில் நீரைக் குடித்து முடித்தாள். பிறகு, கருவம் மிளரச் சிரிப்பைக் கக்கினள். 'நாயெடு உடன் பிறந் தவள் நான்' என்ற அடிக்குறிப்பு, செக்கச் சிவந்த கன்னங்களில் எழுதி ஒட்டப்பட்டிருந்தது. எம்பித் தணிந்த மார்பகத்தின் தங்கச் சரட்டைச் சரிசெய்தாள்; சேலையைக் கொய்து, வேர்வையைக் கொய்தெடுத்தாள். முகதலைவை மடித்து, புருவவெளியை நாசூக்காகத் துடைத்தாள். 'எந்த இடத்துக்கு வந்திருக்கிறேம்' என்ற கேள்விக்குப் பதில் கூற, அவன் சுற்றிச் சூழ நோக்கினன். காந்திநகர் என்ற உட்குறிப்பை அனு மானம்செய்து கொள்ள அவனல் இயன்றது.

“புறப்படலாம், வாருங்கள்!”

சாவிக் கொத்தை ஆட்டிக் கொண்டே சொன்னள் அவள்.

" எங்கே போகவேண்டும் ?"

" போலீஸ் ஸ்டேஷனுக்கு !..."

" என்ன, போலீஸ் ஸ்டேஷனுக்கா ?"

" ஆமாம் !"

" போய்...?"

" மற்றவை வெள்ளித்திரையில்...!"

புயல் உருவெடுத்தது கார்.

புயல் உருவெடுத்தது ஆண் மனம்.

இளந்தென்றல் இதமுற அணைந்தது.

அது ஒரு பெரிய பங்களா. நகர்ப்பகுதிக்கு அமைக்கப்பட்ட ஓர் எல்லைக் கல்லைப் போல இருந்தது. நீல விதானச் சித்திரப்படுதாவிற்கு அமைக்கப்பட்ட நெற்றிக் கண்ணைப்போல விளங்கிய நிலவுக் கண் அந்தப் பெரு மனைக்குக் காவல் இருந்தது. ' நாய்கள் உஷார் !' என்ற அபாய அறிவிப்புப் பலகைக்குக் காவலாக அமைந்தது அந்த ' இராஜபாளையம்.' ' ஜம் 'மென்று கண் வளர்ந்து கொண்டிருந்தது அது.

காரிலிருந்து இறங்கிய மஹேஸ்வரி, ' ஸார் !' என்று குரல் கொடுத்தாள். ' ஸார்' வரவில்லை. பச்சைப் பசுங் கிளி நடந்து வந்தது. " வா மஹி!" என்று வரவேற்புப் பத்திரத்தை பத்திரமாகப் படித்து, அந்த அளவில், அளவாக நிம்மதி பெற்று, உற்ற தோழியின் தோளைப் பற்றிப் பிடித்தவாறு உள்ளே நடந்தாள். படிகள் எண்ணிக்கையை வரிசைக் கிரமமாகச் சொல்லிக் கொண்டன.

" வணக்கம் ஐயா !" என்றாள் மஹேஸ்வரி.

போலீஸ் உடுப்புக்கள் திகழ, ஆசுவாசப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்த பெரிய மனிதருக்கு அருகில் பவ்யமாக நின்றாள் அவள்.

" நம்ம மஹி அப்பா!" என்றாள் மஹேஸ்வரியின் சிநேகிதி. அவளுக்குப் பெயர் ஒன்று இருந்ததே? சாந்தி !

" ஓஹோ !" என்று சொல்லிக் கொண்டே, ஸ்டூலில் இருந்த மூக்குக்கண்ணாடியை அணிந்து கொண்டு, எதிர்ப்புறம் பார்த்தார். அப்புறம், " அடடே !...நம்ம பிள்ளைவாள் பொண்ணு, மஹி !..." என்று நயம்பட உரைத்து, உதட்டுக் கல்லில் சிரிப்பை உரைத்தார். " உட்காரம்மா," என்றார். அன்பு, அறிவு, ஆய்ந்த சொல்வன்மை மிக்கவர்.

மஹேஸ்வரி தன் புடவையின் கரைப்பகுதியை ஒதுக்கிவிட்டவண்ணம் உட்கார்ந்தாள். நின்றிருந்த சிந்தனைச் சிலையை கைகாட்டி, கண்குறிப்பில் கருத்துக் காட்டி அமருமாறு வேண்டினாள்.

காளத்திநாதன் உட்கார்ந்தான்.

சுவர்க் கடிகாரம் கட்டுப்பாட்டில் கடமையைக் கண்ணியமாகச் செருகிச் செயற்பட்டது.

தோழி சாந்தி காப்பிக் கோப்பைகளைச் சுமந்து வந்தாள்.

முதல் நபர் : காளத்தி, இரண்டாவது : மஹேஸ்வரி.

அடுத்தது : தனபால்-போலீஸ் அதிகாரி.

போலீஸ் அதிகாரி கருர்ப்பேர்வழி. கச்சிதமாகக் காப்பியை அருந்தினார். வந்திருந்த விருந்தினர்களை கண்ணாடி வளையங்களிலே சுழலவிட்டுப் பார்த்தபோது, வாஸ்தவமாகவே அவர்தான் சுழலவேண்டியவர் ஆனார்.

காரணம் இதுவே:

கோப்பையை ஏந்தியவாறு, பரிதாபத்துடன் காளத்தியை நோக்கிக்கொண்டிருந்தாள் மஹேஸ்வரி. 'என்னென்னவோ சாதனைகளையெல்லாம் அமெரிக்காவும், ருஷ்யாவும் செய்துகாட்டுகின்றனவே?...இந்தக் காளத்திக்கு மனித இதயத்தை அருளச் செய்ய இவ்விரு நாடுகளினுல்கூட முடியாது போலிருக்கிறதே? பில்லி சூன்யம் ஏதாவது வைத்து, சூதுசெய்து இவர் மனசை இப்படிக்கெட்டியாகத் தன்வசப்படுத்திக் கொண்டுவிட்டாரா தமிழ்ச்சித்தன்? பில்லியாவது சூன்யமாவது என்பாரே அவர்? ஆகவே, வேறு எப்படியோ நாடகம் ஆடிவருகிருர் இவர்!...வரட்டும், வரட்டும்!...சூதும் வாதும் என்ருகிலும் ஒருநாள் சட்டை உரித்துக் கொள்ளாமல் தப்ப முடியாதென்பதுதானே வாழ்க்கை சொல்லிக் கொடுத்திருக்கும் தத்துவம்? தத்துவமா? பூ!...அவர் வீட்டுப் பணம் என் காளத்தியின் உள்ளத்தை அடிமைச் சாசனம் எழுதிக்கொண்டு விட்டது போலும்! தமிழ்ச்சித்தனின் திரை மறைவுக் கூத்துக்கு நாளை இந்நேரம் ஒரு விடிவு கிடைக்கச் செய்துவிடுகிறேன்!...கொம்புத் தேன்மீது முடவன் ஆசைகொள்வதைத் தடுக்க முடியாது தான். சரி; ஆனல், முடவன் சார்பாகப் பரிந்து வந்து பேசி, தன்னை அழித்துக் கொள்ளத் துணிந்திருக்கும் இந்தக் காளத்தியை என்னவென்பேன்?...என் இதயத்தின் இதயமாக-என் உயிரின் உயிராக-என் மூச்சின் மூச்சாக நிலவி வரும் இந்த அன்பர் என்னுடைய இதயத்தின் பாடத்தை-உயிரின் தத்துவத்தை,-மூச்சின் உட்பொருளென்றைக்குத்தான் உணரப்போகிருரோ? இந்த மண்ணில் பிறப்பெடுத்திருக்கும் தமிழ்ச்சித்தன், தன்னை நம்ப ஒப்புகிருர்; ஆனல் தன்னைக் காத்துக் கொண்டிருக்கும் நிழலெனும்

கடவுளை-கடவுள் என்கிற நிழலை-நிழலும் கடவுளும் ஆன ஓர் இயற்கை மெய்ம்மையை ஒப்ப மறுக்கிறார்! கோழை!...தூ!...'

"ஸார், உங்களிடம் சிறு பொழுது தனிமையில் பேசவேணும்," என்றாள் மஹேஸ்வரி.

"ஆஹா!" போட்டார் அதிகாரி; ஆணித்தரமான இணக்கமொழி.

தோழியிடம் காது பொருத்திச் சொன்னாள் மஹேஸ்வரி: "மிஸ்டர் காளத்தியை நீ பத்திரமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். ஆமாம், சொல்லிவிட்டேன்!"

சாந்திக்குப் புது உத்தியோகம் கிடைத்தது.

உடைமாற்றி வந்தார் தனபால். அவர் நடந்த தடத்தில் மஹேஸ்வரி தடம் பதித்தாள். மாடிஅறைக் கதவுகள் திறந்து மூடின.

போலீஸ் அதிகாரி அமைதி காத்த முகத்தோடு குறிச்சியில் சார்ந்திருந்தார். அவர் திருஷ்டி நூல் பிடித்த அளவில் எதிர்முகமாகச் சென்றபோது, அமைதி பறிபோன வதனத்தைத்தான் அவரால் இனம் பிரித்து உணர முடிந்தது. கைகளை மடித்து முதுகுப் புறம் மடக்கிக்கொண்டு அவர் நெட்டி முறித்தார். பட்டு மெத்தையிடப்பட்டிருந்த சோபாவின் கைப்பிடியில் விரல்களை வைத்து, மூன்றாம் வகுப்புச் சின்னப் பையனைப்போல, தாளம் போட்டார். பிறகு, பொத்தானை அழுத்தினார்; செயற்கைக் காற்று அழுந்தியது.

காலம் ஒரு காற்றாடி, மனம் விசைப் பொத்தான். காற்றாடியின் விசிறிகளே எண்ணங்கள். மனம் இயக்கப் படும்போது, எண்ணங்களின் ஓட்டுதலிலும் மோத

விலும் பசுமை மிகுந்த சம்பவங்கள் மென்காற்ருக உருவம் கொள்ளும். இது இயற்கை.

வேதநாயகம் யமதர்ம ராஜனின் நாட்டை அடையப் பெறுவதற்கு முந்தி, டி. எஸ். எம். தனபாலுக்கு உற்ற தோழராக ஆகும் பெருவாய்ப்பு உண்டானது. சட்டப் புத்தகத்தை கைகாவலுக்கு எடுத்துச் சென்ற அவர், அன்பின் சரித்திரத்தைக் கொண்டுவந்த கதை ஆயிற்றே அது?

தஞ்சாவூரில் மானம்புச் சாவடியில் அப்பொழுது வேதநாயகம் தொழில் நடத்தி வந்தார். 'ஷராப்' கடை. கள்ளக் கடத்தல் சம்பந்தப்பட்ட தங்கக் கட்டிகள் சிலவற்றை மூன்ரும் பேருக்குத் தெரியாமல் வாங்கி வைத்திருப்பதாக அரசாங்கத்துக்குத் 'துப்பு' கிடைத்தது. ஆங்கிலேயர்கள் சட்டப் புத்தகத்தைத் தலேக்கு வைத்துப் படுத்து உறங்குபவர்கள் அல்லவா? கிடைத்த தகவலுக்கு கண் மூக்கு உண்டா என்பதைப் படித்தறிய தனபால் வந்தார். "உங்கள் பேரில் நான் சந்தேகப் படுகிறேன்," என்று எடுத்த எடுப்பிலேயே தூக்கியெறிந்து பேசினுர் அதிகாரி.

வேதநாயகம், தெய்வத் திருச்சபையை தம் சிந்தை தனில் கொணர்ந்து சிரித்தார். அந்தக் கள்ளமில்லாச் சிரிப்பின் எதிரொலிகேட்டு, அவருடைய ரகசிய அறைகள் அத்தனையும் கதவுகளைத் திறந்து விட்டன. திருமறைக் காட்டில் 'கதவந் திருக்காப்புக் கொள்ள' திருஞான சம்பந்த மூர்த்தி நாயனரும், 'கதவினைத் திறந்தருள் செய்யுமாறு' திருநாவுக்கரசு நாயனரும் பாட வில்லையா?

போலீஸ் அதிகாரி உள்ளே சென்று சோதனை போட்டார். சத்திய சோதனையாகவே அந்நிகழ்ச்சி

நடந்தது. புடமிட்ட சொக்கத் தங்கக் கட்டி யாகவே வேதநாயகம் தோன்றினர். தவறுபட்ட வழிகளிலே தங்கத் துண்டுகள் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டது அவதூறு என்பது புலனாகியது.

"ஐயா, எனக்கென சேமித்துவைத்துச் சென்ற என் தகப்பனர் அவர்களின் சொத்து, இன்னும் ஒரு தலை முறைக்குக் காணும். எனக்கு இருப்பது ஒரே செல்வம். அதுவும் பெண் மகவு. அவள் நல்லபடியாக வாழ வேண்டுமென்பதே என் லட்சியம். நல்ல முறையில் திரிகரணசுத்தியாகச் சம்பாதிக்கப்படுகிற பணம்தான் வம்சத்துக்கும் நல்லவிதமாகப் பயன்பட முடியும். பட்டினத்து அடிகளாரைப் பற்றி உங்களுக்குத் தெரிந் திருக்க நியாயம் இல்லை. ஒரு பாட்டு வருகிறது. நாம் மண்ணில் பிறக்கும்போது நம்மோடு எதையும் கொண்டு வந்ததில்லை. அதேபோல, இறக்கிற சமயத் திலும் நாம் நம்முடன் எதையும் கொண்டு செல்லப் போவது கிடையாது. இடை நடுவிலே குறிக்கப்படும் இந்தச் சேமநிதியை சிவன் தந்தது என்று கருதி, நல்ல வழிகளுக்கு இயன்ற அளவில் செலவிடுவதே தர்ம மாகும். இதுதான் அடிகளின் பாட்டு. இப்பாடலை நீங்கள் நம்புவதானல், இந்த ஏழையையும் நம்புங்கள்!" என்று உரை மொழிந்து, முற்றுப்புள்ளி வைத்தார் வேதநாயகம்.

அசைவற்று நின்றார், சட்டத்தின் பிரதிநிதி. தூய உள்ளத்துக்குக் கண்ணீர் உண்டென்பதை அவர் கண்டு கொண்டார். அவருடைய நேத்திரங்களும் கலங்கத் தொடங்கின.

மஹேஸ்வரி சிறுமி. பாவாடை உடுத்து யிருந் தாள். "என்னுங்க ஸார், எங்க அப்பாவை இப்பவானும்

புரிஞ்சுக்கிட்டீங்களா?" என்று நிர்மலமான கண்களை நீட்டிக் கேட்டாள். அதிகாரிக்கு என்ன பதில் சொல்லத் தெரியும்? குழந்தையை அப்படியே வாரி அணைத்து உச்சிமோந்தார்.

"ஸார்!" என்று அலட்டினுள் மஹேஸ்வரி.

தனபால் ஏறிட்டுப் பார்வையிட்டார். அந்தப் பாவாடைச் சிறுமி எங்கே?

"மஹி...!"

"பெரிதாகச் சிந்தனை வசப்பட்டிருக்கிறீர்களே?"

"உன் தகப்பனுரைப்பற்றி நினைத்துப் பார்த்தேன்!"

"நினைவில் நிற்கிறுர்களா என் தந்தையார்?"

"நினைவில் மட்டுமென்ன, அம்மா, என் நெஞ்சிலே நீக்கமற நிறைந்து நிற்பவராயிற்றே உன் அப்பா?"

அவளுடைய உள்ளகம் பொங்கியது. எனவே நயனச் செம்புகள் பொங்கின. அழகுக்கு அரும் பதவுரை சொல்லவல்ல உதடுகள் துடித்தன. கைபிடித் துணியை முகத்தருகில் கொண்டுபோனுள். துணிக்கு ஈரம் உண்டா?

"நடந்தவை நடந்தவையாகவே இருக்கட்டும், மஹி. இனி நடக்க வேண்டியவைகளைப்பற்றிப் பேசுவோம். நீ எனக்கு 'போன்' பண்ணினுயாம். குழந்தை சாந்தி தெரிவித்தாள். பாரீஸ் வரையில் போய்த் திரும்பவேணுமென்றிருந்தேன். ஒரு கொலைக் கேஸ்...! உன்னைப் பார்த்த பிறகு, போய்க் கொள்ளலாமென்று சும்மா இருந்து விட்டேன்!"

"பாரீஸ் வரையிலா?..."

"ஊம்! அடடே, நீ என்னம்மா, பேரை வைத்துக்

கொண்டு ஊரைக் குட்டை குழப்புகிருயே? அதுதான் அம்மா, நம் ஊர் பாரீஸ்...பாரீஸ் கார்னர்!"

"ஒஹோ, சைனு பஜாருக்கா?"

"நீ என்ன மஹி, திரும்பவும் அட்லாஸைச் சுழற்றி விடுகிருயே?...நான்தான் பாரீஸ் என்கிறேன். நீயும் சைனுபஜாருக்கு என்னை அலையவிடப் பார்க்கிருயே? பூக்கடை போலீஸ் ஸ்டேஷன் வரை எனக்கு சோலி இருக்கிறது. அவ்வளவுதான் வியவகாரம். சரி, உன் விஷயத்தைச் சொல்!"

மஹேஸ்வரி சொற்களைத் தேடிக் கொண்டிருந்தாளோ, என்னவோ? கைநொடிப் பொழுது, வாளா இருந்தாள். பிறகு நிதானம் அடைந்தவளாக, "அது தான்...என்னுடைய நண்பர் மிஸ்டர் காளத்தியைப் பற்றி உங்களோடு கலந்து பேசி ஒரு நல்ல முடிவு கட்ட வேண்டுமென்றுதான் அவரையும் கையோடு அழைத்து வந்தேன்," என்ருள்.

"ஏன், அவரையும் கூப்பிடேன், மஹி!"

"இப்போது வேண்டாம். முதலில் என் பேச்சை நீங்கள் சரிவரக் கேட்டுக் கொள்வது நல்லது."

"சொல்லேன்!"

"என் அப்பாவைப் போல நினைத்துக் கொண்டு உங்களிடம் மனம் விட்டுப் பேசுகிறேன். என்னைப் படித்து வைத்திருந்தவர் என் தகப்பனர். அவர் போய் விட்டார். என் தாயோ, சினிமாவில் காட்டுகிருற்போல, 'பணம், பணம்' என்று பஜனை செய்துகொண்டு, என்னைப்பற்றித் தப்புக் கணக்குப் போட்டிருக் கிருள்...!"

"அப்புறம்...?"

" ஸார். கதைச் சுருக்கம் இதுதான். நான் நண்பர் காளத்தியை காதலிக்கிறேன். காதலிக்கிறேன் என்றால், இதயபூர்வமாகக் காதலிக்கிறேன். என்னுடைய வெள்ளை மனத்தில் ஊறிப் பண்பட்டுள்ள பவித்திரமான அன்பு அவரை நேசிக்கிறது; பூசிக்கிறது; அவரது அன்பை யாசிக்கிறது!...ஆனால் அவரோ, தன்னுடைய நண்பர் தமிழ்ச் சித்தனுடைய பேய் மனத்துக்கு வசப் பட்டுக் கிடக்கிறார்...!"

" முடிவு...?"

" முடிவுக்காகத்தான் உங்களைச் சரண் அடைந் திருக்கிறேன், ஸார்!"

" காளத்தி தன் நண்பனுக்குக் கட்டுப்பட்டிருக் கட்டும். அதற்கும், உன்னை அவர் மணப்பதற்கும் என்ன சம்பந்தம்?"

" அதில்தான் சூது இருக்கிறது. தமிழ்ச்சித்தனுக்கு என்பேரில் பித்து. அதற்காகத்தான், காளத்தியிடம் பணத்தகைக் காட்டி, அவர் மனத்தை அடக்கி, என்னைத் தூண்டில்போட்டுப் பிடிக்கக் கனவு கண்டு வருகிறார்!"

" சரி; காளத்திக்கு உன்மீது இஷ்டம் உண் டல்லவா?"

" என்ன ஸார், இப்படிக் கேட்கிறீர்கள்? மனித மனம், மனத்தில் அரும்பும் காதல் எனும் புனிதமயமான மாயசக்தி, அதை ஆட்டிப்படைக்கும் சூழ்நிலை, அந்தச் சூழ்நிலையில் கணைதொடுக்கும் மன்மதபாணம் போன்ற இத்தகைய வாழ்க்கை விசித்திரங்கள், 'சொல்லித் தெரி வதில்லை' என்கிற பட்டியலில் இடம்பெற்றிருக்க வில்லையா? 'சொல்லித் தெரிவதில்லை' என்ற சாஸ்திரம் ஒருபுறம் இருக்கட்டும். நான் இப்போது சொல்லிவிடுகி

றேன். நானும் காளத்தியும் பலநாட்கள் பழகி வந்திருக்கிறோம். என் தகப்பனாரின் நண்பரது பிள்ளை காளத்தி. சந்தர்ப்பக் கேட்டினால், கை நொடித்ததால், என் அப்பாவின் நிழலில் ஒதுங்க வேண்டியவர் ஆனார். நான் அவர் நிழலில் பூண்டிக் கோட்டை கட்டினேன். கடைசியில், கோட்டையைத் தவிடு பொடியாக்கி விட்டார். என்னை தமிழ்ச்சித்தனிடம் ஒப்படைக்க எத்தனம் செய்கிறார். என் தாயாரும் இவரும் இந்தச் சங்கதியில் ஒரு கட்சி. தமிழ்ச் சித்தனைப் பற்றியும் உங்களுக்குச் சொல்லி விட்டால்தான் நலம் பயக்கும். 'கடவுள் எங்கே' என்ற ஒரு கேள்வியில் உழலும் பிரகிருதி அவர்; 'நான் எங்கே?' என்ற வினா எழுப்பி, விடை காணுவதற்குத் தென்பு இல்லாதவர். என் தந்தையார் இவரிடம் கொஞ்சம் சகஜமாகப் பழகியதைச் சலுகையாக வைத்துக் கொண்டு, அந்தச் சலுகைக்குள்ளே என்னையும் என் ஆசாபாசங்களையும் கனவு நனவுகளையும் உட்படுத்தி, பிறகு என்னையே தன்னுள் உட்படுத்திக் கொள்ள முயன்று வரும் தீரர் அவர். தீரரா?...முதுகெலும்பற்ற கோழை!...அவருக்கு மூளையில் உறைக்கும் விதமாகச் சூடுகொடுத்து, சுடு சொற்கள் தூவி அனுப்பிய என் கடிதங்கள் அவருக்குப் புரியவில்லையோ, என்னவோ? பாவம்...!''

மஹேஸ்வரிக்கு மூச்சு வாங்கியது. "ஐயா! கடைசியாக ஒரு வார்த்தை. உங்களை என் தந்தையின் ஸ்தானத்தில் வைத்தேதான் பேசுகிறேனென்று தொடக்கத்திலே சொன்னேன். இப்போது, முடிவாகவும் அதையே நினைவூட்டி, என் முடிவையும் தெரிவித்துவிடுகிறேன். இதோ பாருங்கள், இது அழைப்பு. அதாவது, காளத்திக்கும் எனக்கும் நடைபெற வேண்டிய திருமணத்துக்கு அழைப்பு. தேதி இல்லை. நேரம்

இல்லை! இதோ பாருங்கள்...!" என்று பேச்சைத் துண்டுபடுத்தி, இடுப்பில் முடிந்து வைத்திருந்த ஒரு பொருளைக் காட்டினாள் மஹேஸ்வரி. "இதை மிஸ்டர் காளத்தி இப்போதே, அதுவும் சட்டத்தின் பிரதிநிதி யான உங்கள் திரு முன்னிலையில் என் கழுத்தில் கட்டி மூன்று முடுச்சுக்கள் இட்டுவிட்டாரானால், என் உயிர் பிழைத்துவிடும், ஸார், என் உயிர் பிழைத்துவிடும்!"

சொற்களின் நெஞ்சங்கள் அழுதன. மங்கல நாண் சிரித்தது!

"ஆகட்டும் அம்மா! உன் விருப்பம் நிறைவேற என்னால் ஆனதைச் செய்கிறேன். இடையில் கொஞ்சப் பொழுது எனக்கு கால அவகாசம் தா. காளத்தியையும் தனியே கண்டு தனித்துப் பேசிவிடுகிறேன்,' என்று சொல்லிக் கொண்டிருக்கையில், சாந்தி தாவணியை இழுத்துவிட்டுக் கொண்டு ஓடிவந்தாள். "யாரோ தமிழ்ச்சித்தனும்...அவர் அப்பாவாம்...சாகப் பிழைக்கக் கிடக்கிறாராம்! உங்களை உடனே வரச் சொன்னார்கள். பெரியவர் பெயர் துளசிங்கமாம்!..." என்று பதட்டத் தோடு கூறி நிறுத்தினாள். அவள் தன் தந்தையிடம் கொடுத்த துண்டுச் சீட்டில் வீட்டு விலாசம் இடம் பிடித்துக் கொண்டிருந்தது.

"துளசிங்கம் எனக்கு உற்ற நண்பர். பெரிய தர்மிஷ்டர். அவரைப் பார்த்துவிட்டு இதோ, ஒரு நொடியில் திரும்பிவிடுகிறேன்!" என்றார் தனபால்.

மஹேஸ்வரியின் கவலைபடிந்த முகத்தில் இப்போது கலவரமும் சேர்ந்து படியத் தொடங்கியது!

## 11. சூள் உரைத்தான் நாத்திகன் !

திருவாளர் துளசிங்கம் அவர்கள் முற்றிப் பழுத்த சிவப்பழம். 'அங்கிங்கெனுதபடி எங்கும் பிரகாசமாய், ஆனந்த பூர்த்தியாகி' இருக்கின்ற பித்தனைப் பற்றிய சிந்தனை லயிப்பிலேயே சதா சர்வ காலமும் பித்தாகிக் கிடந்தார். 'அன்பெனும் பிடியுள் அகப்படும் மலை' யினை எட்டிப் பிடித்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்து இறும்பூது எய்தத் துடித்தவராக, நீட்டிய கரங்களை மடக்காமலே, படுக்கையில் தலைமாடு கால்மாடு மாறி, மயங்கிச் சாய்ந்து கிடந்தார். நெற்றித் திட்டில் திரு நீற்றுக் கோடுகள். கலக்கமும் கைப்பும் உருவேற்றிய உவர்க் கோடுகள், சுருக்கம் விழுந்த முகத்தரையில் கிறுக்கிக் கிடந்தன.

நீல வண்ண விளக்குகளுள் ஒளி ரேகைகள் கண் பொத்தி விளையாடின.

காவல் துறை அலுவலாளர் தனபால் 'வந்து காலோடு' சுமார் பதினைந்து நிமிடங்கள் நின்றார். துளசிங்கத்தின் மீதிருந்த இமைகளை எடுக்காமலே நின்றார். அவரைப் பற்றின சிந்தனைகளை 'ராகம்' மாற்றாமல் மனயாழில் மீட்டி மீட்டி, காலத்தை ஓட்டிக் கொண்டே யிருந்தார். 'ஆமாங்க தனபால்! இவன் தான் என் பிள்ளையாண்டான். நான் வைத்த பெயர் கதிரேசன். இவன் வைத்துக் கொண்ட பெயர் தமிழ்ச்சித்தன். காலா காலத்திலே இவனை மாலையும் கழுத்துமாகப் பார்த்துப் பரவசமடைந்து, என்னுடைய சொத்துச் சுகங்களுக்கும் இவனை வாரிசாக்கி விட்டால், அப்புறம் என்பாடு விட்டது!' என தம் இதயதாபத்தை அறிமுகப்படுத்தி, அத்துடன் தம் மைந்தனையும் அறிமுகம் செய்து வைத்த பக்குவத்தை தனபால் எண்ணிப் பார்த்திருக்க வேண்டும்! அவரது சிந்தனைப் பட்டம் நூலறுந்து விழுந்தது.

துளசிங்கம் தம்மை மறந்த நிலையில் அரற்றிய வாறு இருந்தார்: 'ஈசா! என் அருமைப் பிள்ளையை புத்தி தெளியச் செய். கூடா நட்புக் கொண்டு, உன்னை ஏசிப் பேசுவதை நீ பெரிது பண்ணாதே, அப்பனே! நீ எதையும் அறிந்தவன்; எல்லாம் பொறுப் பவன் ஆயிற்றே?...'

தனபாலனின் நினைவில், மஹேஸ்வரி அழுத்தம் திருத்தமாய்ச் சுட்டிய 'தமிழ்ச்சித்தனின் கடவுள் கொள்கை' தூசு தட்டிக் காட்டியது. 'இங்கர்ஸா லுக்குப் பேராண்டி என்று தமுக்குக் கொட்டி, கறுப்புத் துணி பிடித்து, ஊரை ஏய்த்து வரும் நாச காரர்களுக்குப் பலியிடப்பட்டுவிட்ட, ஆத்திகத் தந்தை யின் நாத்திகப் பிள்ளை இவன்!' என்று கேள்விப்பட்ட சுடுசரங்களை இணைத்து, அதில் அவரது மனத்தை

இருத்திஞர். தமிழ்ச்சித்தனைப் பார்க்க வேண்டுமே போலிருந்தது. ஒருகணம், அவருக்குச் சிரிப்பு வந்தது. ‘நான் தமிழ்ச்சித்தனை அறிந்ததாகவே மஹேஸ்வரியிடம் காண்பித்துக் கொள்ளாததுகூட, ஒரு வகையில் நன்மைதான்!’

பெயரிட்டுக் குரலோட்டிஞர், அதிகாரம் கொண்டிருந்தவர். ஏதோ ஒன்றைச் செய்ய வேண்டுமென்று அடிக்கடி அவரது உள்மனம் நினைவூட்டிக் கொண்டிருந்ததையும் அவர் பொருட்படுத்தாமல் இல்லை; மஹேஸ்வரியின் வேண்டுகோள் அவருள் புதிய விழிப்பை உண்டாக்கிவிட்டிருந்ததையும் அவர் உணரத் தவறவில்லை. கண்களைத் திசை திருப்பிப் பார்த்த வண்ணம் சாய்ந்திருந்தார் அவர்.

தமிழ்ச்சித்தன் வந்தான். நெஞ்சு நிமிர்த்தி நடந்து வந்தான்; “வணக்கம், ஐயா!” என்று சுத்தத் தமிழில் மொழி பயின்முன். சரியாகப் புலஞகாத ‘திராவிட நாட்டு’ப் படத்தைக் கரையாக்கி, கறைபோகாத கறுப்புத் துண்டெனத் தோற்றமளித்த அந்தச் சல்லாத் துணியை எடுத்து இடது தோளில் போட்ட வண்ணம், அவனும் அமர்ந்தான். அருந்துவதற்குப் பானம் கொண்டுவரப் பணித்தான். குடித்தார்கள் இருவரும்.

தமிழ்ச்சித்தனிடம் அவனுடைய திருமணம் பற்றிய பேச்சைக் கிளப்பிஞர் தனபால்.

நிலைமையை ஊகிக்கத் தமிழ்ச்சித்தஞ தவறுவான்? இதயத்தில் மின் வெட்டியது. அரைக்கணம் அவன் தன்னை மறந்தான். பின்னணியை மறந்தான். பின்னியிருந்த பேச்சுக் குறியையும் மறந்தான். நெற்றிச் சுருக்கங்கள் வெற்றிப்பண் பாடினவோ? இல்லையென்றல், அவன் அவ்வளவு எடுப்பாகவும் பிடிப்பா

கவும் சிரித்துக் கொள்ளக் கூடுமா? விநாடிகள் விரைந்தன. நாடகாசிரியன் தமிழ்ச்சித்தன், சர்வசாதாரண மான-குறை நிறைந்த ஒரு மனிதப் பிண்டமாக உரு மாறினான்.

"எனக்கும் மஹேஸ்வரிக்கும்தான் மிக அண்மையில் திருமணம் நடைபெறப் போகிறது" என்று அழுத்தம் பதித்துச் சொன்னான் தமிழ்ச்சித்தன்.

"இம் முடிவுக்கு அந்தப் பெண் சம்மதித்ததா?" என்று குறுக்குக் கேள்வி கேட்டார் தனபால். அதற்குரிய பதிலை எதிர்பார்த்திருந்த வேளையில், பயங்கர மான இருமல் ஒலி கேட்கவே, அவர் பதட்டத்தோடு எழுந்து உள்ளே கூடத்தை அடைந்தார்.

துளசிங்கம் நீர்மல்கக் காட்சியளித்தார். "வாருங்கள் தனபால்! சேதி வந்ததா? நல்லது. எனக்குப் பணிக்கப்பட்ட காலக் கெடு தீர்ந்துகொண்டிருக்கிறது. அதற்குள், என் செல்வப் புத்திரனை மாலையும் கழுத்துமாகப் பார்த்துவிடவேண்டும். இதற்கு உங்களைத்தான் நான் நம்பியிருக்கிறேன். தமிழ்ச்சித்தனிடம் சொல்லுங்கள். அவன் விருப்பப்படி மஹேஸ்வரியையே அவனுக்கு மணம் முடித்து வைத்து விடுகிறேன். ஆனால் என் விருப்பப்படி, ஆண்டவன் சந்நிதானத்தில் வந்திருந்து திருப்பூட்டச் சம்மதித்தால், போதும். நீங்கள்தான் இந்த நல்ல காரியத்தை முன் நின்று நடத்திக் கொடுக்கவேண்டும்!" என்று விம்மினார்.

தனபால் நெருங்கி அமர்ந்தார். வழிந்த நீரைத் துடைத்தார். "நீங்கள் ஒன்றுக்கும் கவலைப் படாதீர்கள், மிஸ்டர் துளசிங்கம். என்னால் ஆனதை கடவுள் சாட்சியாகச் செய்து முடித்துவிடுகிறேன். நீங்கள் வீணாக மனசை அலட்டிக் கொள்ளக் கூடாது.

எல்லாம் நல்லபடியாகவே நடக்கும், பாருங்கள்!'' என்று தேறுதல் சொன்னார்.

"எல்லாம் பகவான் கடாட்சம்தான்!'' என்று செருமினார் துளசிங்கம்.

அப்போது, தமிழ்ச்சித்தன் அட்டகாசமாகச் சிரித்துவிட்டு, "நீங்கள் சொல்கிற அந்தக் கடவுளே அவதாரம் எடுத்துவந்து தரிசனம் கொடுத்தால் கூட, என்னுடைய விருப்பத்திற்குத் திருத்தம் கற்பிக்க இயலாது!'' என்று உறுமினான். பிறகு, சாவதான மாகச் சொன்னான்: "இதோ பாருங்கள் அப்பா! திருவாளர் வேதநாயகம் அவர்கள் உயிரோடிருக்கையில், தம் கைப்பட எனக்கு எழுதிக் கொடுத்திருக்கிற இந்தக் கடிதம் ஒன்று போதும், மகேசுவரியை என் காலடியில் விழச் செய்ய...!'' தாம்பாளம் விழுந்தாற் போன்று, அவன் வெறிகொண்டு சிரிக்கலானான்!

## 12. கைகள் பிணைந்த கதை!

செப்பிடு வித்தைகள் மண்டிய விந்தை மிகு மனித மனம், தான் எண்ணுவதை நாலுபேர் மத்தியில் நிலைநாட்டி வெற்றிக் கொடி பிடிக்க வேண்டுமென்ற மமதை நோக்கம், தன் பேச்சுக்கு எதிரில் நிற்பவர்கள் யாரும் எதிர்ப்புப் பேசாமல் இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கும் அசட்டுத்தனம், எதையும் மெல்லியதாக ஏற்று ஒழுகிப்போகும் பழக்கம் பூண்ட பெருந்தன்மை இப்படிப்பட்ட மனத்தத்துவ நூலிழைகளைக் கொண்டு வலை பின்னி விளையாடும் சமுதாயச் சிலந்தி ஒரு சிருஷ்டித் தத்துவம்!

தாம்பாளம் விழுந்தாற்போன்று தமிழ்ச்சித்தன் சிரித்த சிரிப்பை காளத்திநாதனால் தெளிவாகக் கேட்க முடிந்தது. நான்கு படிக்கட்டுக்களை மீதம் வைத்து விட்டுக் கடந்து வந்த அவன் தலையைத் தந்திரமாக மறைத்துக் கொண்டு எட்டிப் பார்த்தான். நீலஒளி

மங்கவில்லை; மறையவில்லை. அவனுக்குத் திகைப்பு வளர்ந்தது. திகைப்புத் தீ மூட்டிய பயம் செறிந்த சிரிப்பையும், சிரிப்பில் உள்ளடங்கிக் கனன்ற சித்தத்தையும், சித்தத்தில் பிரதிபலித்து ஒலித்த சொற்களையும் சொற்களின் தலைமட்டத்திலே ததும்பிய எச்சரிக்கைத் தொனியையும் அவன் கேட்கவும் காணவும் முடிந்தது. ஒளியில் ஒலி கூடும் ரசவாத வித்தையும், ஒலியில் ஒளி தவழும் விஞ்ஞானத் தேற்றமும் அவனுள் அகழி ஒன்றை வெட்டின. அந்த அகழியுள் தான் விழுந்து விடாமல் சுதாரித்துக் கொண்டான். கண்களை நலியாமல், உயர்த்திப் பார்த்தான். தமிழ்ச்சித்தன். உள்ளங்கையில் வைத்துக் காட்டிய லிகிதத்தின் உள் விஷயத்தை உணர முடியாமல் தவித்தான். அதே சமயத்தில், அவனுடைய முகத்தின் விகாரத்தைத் தன் மனத்தில் வாங்கிப் பார்த்தான் காளத்தி. குலைநடுக்கம் எடுத்தது. 'என்பேரில் உயிரையே வைத்திருந்த தமிழ்ச்சித்தனா இவன்?' என்று புத்தம் புதிய ஐயப்பாடு தோன்றியது. 'அவனைப்பற்றி இப்படி என்னாலே எண்ணிப் பார்க்கக் கூட மனம் துணிய மறுக்கிறதே?' என மறுகினான்.

'நான், தமிழ்ச்சித்தன், மற்ற நண்பர்கள் ஆகியோர் நாடக விஷயமாகப் பேசும் போது, தன் பேச்சு எடுபட வேண்டுமென்று, தான்தோன்றித் தனமாகப் பேசி இப்படிச் சிரித்துத்தானே அவன் இதுவரை என்னை ஏமாற்றினான்? உருண்டோடும் அவனுடைய பணத்தைக் கொண்டு என்னையே உருட்டிவிட கங்கணம் கட்டியிருந்திருக்கிறானே கொடுமைக்காரன்?'

சட்டைப் பையிலிருந்த கடிதத்தைப் பதட்டம் ஏந்தி எடுத்தான். அது தமிழ்ச்சித்தனின் கையெழுத்தைத் தாங்கியிருந்தது.

"உயிருக்கும் மேம்பட்ட காளத்தி,

பைந்தமிழ்க் குலம் என்னும் மேடையில் நாம் சந்தித்தோம். என் தமிழறிவு உங்களை ஈர்த்தது. உங்கள் கலையார்வம் என்னை வச மிழக்க வைத்தது. இடைப்பட்ட காலம், நம்மை உயிரும் உள்ளமும் சேர வளர்த்தது. இனி நம்மை யாராலும் பிரிக்க முடியாது. என் உதவி என்றும் உங்களுக்குக் கிடைக் கும். பணம் ஒரு பொருட்டல்ல எனக்கு. பண்பு முக்கியம். அந்தப் பண்புவழி நின்று நான் உங்களைத் திரும்பத் திரும்ப வேண்டுவ தெல்லாம் என்னவென்று தாங்கள் அறிவீர் கள். மஹேஸ்வரியை எனக்குத் தந்துவிடுங் கள். உங்கள் முறைமைப் பெண் ஆண்டாளை வாழச் செய்யுங்கள். மஹி இல்லையேல் நான் இல்லை! என் தலைவர்மீது ஆணை வைத்துச் சொல்கிறேன்.

நான் உங்களுக்குப் புதிராகப் படுகிறேனோ? ஆம்; இருக்கலாம். என்னை உள்ளது உள்ள படி உணர்ந்திட வேண்டுமெனில், அதற்குத் தனித்தகுதி வேண்டும்! ஒருமுறை இதே கருத்தை மஹேஸ்வரிக்கும் குறித்தனுப்பி னேன்!...தியாகம் எனும் புனித சக்திதான் மனித மனங்களைச் சிரஞ்சீவியாக்க வல்லது!

இவ்விதம்,
தமிழ்ச் சித்தன்."

தமிழ்ச்சித்தனுக்கென தன் மனத்திலே ஒதுக்கப் பட்டிருந்த இடத்தைக் காடுமாற்ற விழைந்தவன் போன்று, நெஞ்சுக் குருத்தைப் பற்றி ஆத்திரம் கசிய

அழுத்திஞன். கண் துளிகள் கசிந்தன. "பாவி!"— வாய் திறந்து திட்டிஞன் அவன்.

அப்போது, யாரோ அவனுடைய சட்டையைப் பற்றி இழுப்பது தெரிந்தது. மனத்தின் தவிப்பில், உடம்பு நடுங்கியது. விசையுடன் திரும்பிஞன். கனி இதழ் மருங்கில் சுட்டுவிரல் ஒட்டி, மயல் விழிக்கங்கில் போதை தெளித்து நின்ருள் மஹேஸ்வரி.

"நீயா? மஹியா? நான் இங்கே இருப்பேனென்று யூகித்து இங்கேயும் என்னைத் தொடர்ந்து வந்து விட்டாயே?"

"நிழலை நிழல் துறக்கமுடியுமா, காளத்தி? உங்களை அறிந்தவளாயிற்றே நான்! உங்கள் பொய்யை மாத்திரம் அறியாமல் இருப்பேனுக்கும்!"

இரண்டு படிகளுக்குக் கீழே நின்ருள் அவள். தடுமாற்றத்தில் அகப்பட்டுக் கொண்டவள் போன்று அவள் காணப்பட்டாள். மார்பகச் சேலைத் தொங்கல் விலகிக் கிடந்தது. அழகு வளர் நிலைக்களனில், இளமைத் துடிப்புப் பூண்ட அவனுடைய உள்ளம் கண் வளர்ந்தது. மேனி முழுவதிலும் மயிர்க்கூச்சம் தெரிந்தது. அவனையும் அறியாமல், முறுவல் நகையாகி, உதட்டுத் தொடுவானத்தில் தொங்கியது. "மஹி!" என்று மெய்ம் மறந்து கூப்பிட்டான். அழைத்த வாய் மணம் ஈந்தது. தன் கைகளைக் கொண்டு அவளது பூங்கரங்களை அழுத்திப் பிடித்தான். நூதனம் நிறைந்த உலகத்தில் கால் பாவிப் பறந்தான். 'தீவலம்' என்னும் நாடகம் அரங்கேறுவதற்கு முன்னர், ரதி— மன்மதன் விளையாட்டு விளையாடிய கோலம் ஞாபகத்தில் மோதியது.

"வாருங்கள் காளத்தி, நம் போய் விடலாம்."

"காளத்திக்குப் பூதலம் நினைவு சேர்த்தது."

"மஹி!"

"வாருங்கள், போய் விடுவோம்!"

"ஏன்?"

"நாம் இங்கே ஒண்டி நிற்பது நம் கவுரவத்துக்கு இழுக்குத் தரும்."

"பரவாயில்லை, மஹி! இரண்டில் ஒன்று பார்த்து விடுகிறேன். சீறும் வேங்கையை சாதுவான பசு வென்று நினைத்தேன். மயங்கினேன். இப்போது என் கண்மயக்கம் அகன்றது; தொலைந்தது; என்னையே நான் தொலைத்துக் கொள்ள இருந்தேன். ஐயன் காத்தான்!"

"ஆனந்த மயமான இந்த ஒரு மாற்றத்துக்கு நான் எவ்வளவு யுகங்களாகத் தவம் கிடக்கவேண்டி வந்தது? சரி, நாம் வீட்டுக்குப் போய் சாவதானமாகப் பேசிக் கொள்ளுவோம்!"

"இல்லை; அவன் பயங்காட்டிக் கொண்டிருக்கிற அந்தக் கடிதத்தைப் பார்த்து விட்டுத்தான் வர வேண்டும். நீ முதலில் போ மஹி!"

"ஐயையோ! உங்களைத் தனியாக இங்கே விட்டு விட்டு, நான் எங்குமே நகரமாட்டேன்!" பச்சை நரம்புகள் புடைத்தன.

காளத்திநாதனின் நடுங்கிய கைகள் இப்பொழுது தான் தனிமையை அனுஷ்டிக்க ஒப்பின.

அவ்வேளையில், யாரோ கீழ்த்தளத்துக்கு வந்து கொண்டிருந்தார்கள். காலடிச் சத்தம் நெருங்கியது.

" காளத்தி, நீங்கள் வாருங்கள், தமிழ்ச்சித்தனின் கையில் இருப்பது பொய்க் கடிதம். எல்லாம் வெறும் சவடால்! ஊம், வாருங்கள்!" என்று அழுத்தமாகக் கூறியதோடு நிற்காமல், அவனைப் பரபரவென்று இழுத்துக் கொண்டு அங்கிருந்து இறங்கினாள். அவள் தியாகராய நகரிலிருந்து தங்கசாலைக்குச் செல்லும் போது, மயிலாப்பூர் சென்று, தன் நாடகத் தோழி தெய்வயானையையும் சந்திக்க வேண்டுமென்று கருதினாள். "எங்களுக் கல்யாணம் ஆகிடுச்சு; இது மாதிரி உனக்கும் காளத்திக்கும் கல்யாணம் முடிஞ்சு தானா, எனக்கு எவ்வளவு சந்தோஷம் உண்டாகும் தெரியுமா?" என்று உள்ளன்பு மாறாமல் உரையாடிய வள் அவள்!

கார் பறக்காமலிருக்க முடியாது!

## 13. சொல்லித் தெரிவதில்லை மன்மதக்கலை !

ஐந்தாவது தடவையாக, தொலை பேசிக் கருவி சத்தம் போட்டது.

கல்லூரி வாழ்நாட்களுக்குப் பிறகு, அன்றைக்குத் தான் மஹேஸ்வரி நிம்மதியாகத் தூங்கினாள். வழக்கமாக உடலில் தேங்கி வழியும் அயர்வும் வேதனையும் அன்று விடைபெற்றிருந்தன. இதற்கு முந்தி, துயில் கலைந்து எழுந்து கண்களைக் கசக்குவாள். இமைத் தோல்கள் புண்பட்டாற் போன்று வலி காட்டும். ஊசி மிளகாய்ப் பழங்களென நயனங்கள் சிவந்திருக்கும். நிலைக்கண்ணாடி ஏன் பொய் சொல்லப் போகிறது? இப்போது அவள் தன்னைத்தானே கண்ணாடித் துண்டத்தில் பதித்துப் பரிசோதித்தாள். நீண்ட முறுவல் முடங்குவதற்குச் சில கணங்கள் தேவைப்பட்டன. 'அப்பா சொல்வார்களே, அது போல, இப்போதுதான் நான் பழைய மஹியாகக் காணப்படுகிறேன்!'

அரைக்கணப்பொழுதில் ஆயிரம சிந்தனைகள் கிளைத்து வெடிப்பதில் ஆச்சரியம் ஏதும் இல்லையே ?

ஓசையின் சுருதியைக் கீழே இறக்காமல் இன்னமும் முழங்கிக்கொண்டு இருந்தது அந்த டெலிபோன்.

மஹேஸ்வரி பைய சென்றாள். அவள் அறிவாள், எங்கிருந்து அழைப்பு தொடர்ச்சியாக வந்து கொண்டிருக்கிறதென்று. 'நேற்று இரவு துளசிங்கம் அவர்கள் வீடு செல்ல, தனபால் விடை பெற்றுச் சென்றதும் காளத்தி கீழே போய் வருவதாக என்னிடம் பொய் சொல்லிவிட்டுப் புறப்பட்டார். அவரைக் காணுமல் குழம்பிய நான், என் காளத்தி எங்கு சென்றிருப்பார் என்பதை அனுமானம் செய்து, தமிழ்ச் சித்தனின் வீடு நோக்கிப் போனேன். அப்போது தான் அவர் ஆட்டோவிலிருந்து இறங்கிச் சென்றிருக்க வேண்டும். நாடகத்தின் மறைமுகக் காட்சி அம்பலமாவதற்கான ஒரு சூழலை உண்டாக்கிக் கொண்டிருந்தார் தமிழ்ச்சித்தன். காளத்தி உணர்ச்சிக் குவியல்களைக் கொட்டி ஒரு களம் அமைத்துக் கொண்டு தட்டுத் தடுமாறிய நேரம் பார்த்து, நானும் போய்ச் சேர்ந்தேன். நல்லதாகப் போயிற்று. மூன்றும் நபருக்குத் தெரியாமல் நாங்கள் அங்கேயே நின்றோம். என்னைக் கூப்பிட்டுப் பேச தனபால் அவர்கள் என் வீட்டுக்கு 'போன்' செய்திருக்கிறார். இரவு பதினொரு மணிக்குக்கூட டெலிபோன் மணி அடித்தது. அநேகமாக, திருவாளர் துளசிங்கம் அவர்கள் வீட்டிலிருந்துதான் புறப்பட்டிருக்க வேண்டும் !"

தெளிவு பெற்றதும், செய்தி வாங்கியைக் கையில் பிடித்தவாறு, "ஹல்லோ...ஹல்லோ !" என்றாள். இணைப்புத் துண்டிக்கப் பெற்றது. மறுமூச்சுப் பிரி

வதற்குள், மறுபடி மணி ஒலித்தது. தமிழ்ச்சித்தனின் வீட்டிலிருந்து போலீஸ் அதிகாரி தனபால் பேசினார் :

" மஹி ! இரவு பூராவும் நான் ரொம்பவும் கஷ்டப் பட்டுப் போய் விட்டேன். துளசிங்கத்திற்கு ' ப்ளட் ப்ரஷர் ' வியாதியாம். பாவம், அவதிப்படுகிறார். டாக்டர்கள் நான்கைந்து பேர் வந்தார்கள். ஒன்றும் சரிப்படவில்லை. ஆண்டவனின் திருச்சபையில் மண்டி யிட்டு ஒரு விநாடி பிரார்த்தனை செய்யக்கூட ஒப்ப மாட்டேன் என்கிறான் தமிழ்ச்சித்தன். ' ஒன்றே தெய்வம், ஒருவனே தேவன் ' என்கிற புதிய நல்ல பாடத்தைக்கூட நம்ப மறுக்கிறானே இவன் ? தமிழ்ச் சித்தன் எங்கோ புறப்பட்டுப் போயிருக்கிறான் !... அவரவர்கள் அதிருஷ்டம் அப்படி !...எனக்கென்னவோ, தெய்வம் மனசு வைத்தால் மட்டுமே இம்மாதிரியான வியாதிகள் சொஸ்தமாக முடியும் என்பதாக நம்புகிற வன் நான். என்னுடைய இந்த ஐம்பது வருஷ அனு பவத்திலே, கடவுளை நேரில் தரிசிக்கவில்லையென்றால் கூட, தெய்வத்தின் அனுக்கிரகத்தை எவ்வளவோ தடவை நிதர்சனமாகக் கண்டிருக்கிறேன். மஹி, எனக்கு ஒன்று தோன்றுகிறது. முதலில் துளசிங்கத் தின் உயிரைக் காப்பாற்றியாக வேணும். ஆகவே நீ உடனடியாகப் புறப்பட்டு வந்தால் நல்லது. நீ வந்து தமிழ்ச்சித்தனின் மனசை நல்லபடியாக மாற்ற முனைந் தால், வெற்றி கிடைத்தாலும் கிடைக்க முடியும் !"

பரிவு, பதட்டம், கடமை ஆகிய மூன்று புள்ளி களில் எழுதப்பட்ட முக்கோணத்திற்குள் நின்று கொண்டு அவர் பேசினார்.

நாடக மேடையில் கண்ட துளசிங்கத்தின் பக்தி யுடன் கூடிய உருவத்தை அவள் பலமுறை நினைத்துப்

பார்ப்பது உண்டு. துளசிங்கத்தின் நிதி கொட்டும் வாழ்வில் இட்டு நிரப்ப முடியாத வகையில் விழுந்து விட்ட பள்ளத்தையும் அவளால் சிந்திக்க முடிந்தது. ஆத்திகத் தந்தைக்கு தெய்வம் கொடுத்த நாத்திகப் பிள்ளையின் மன்னிக்க முடியாப் பாவத்தின் எதிர்காலத்தையும் அவள் ஏனோ ஆருடம் கணிக்கலானாள். ஆக, அவளுடைய அடிமனத்தில் ஓர் அபிப்பிராயம் ஏற்பட்டது. 'பார்க்கலாம்-என் கடமை, அல்ல, என் மனிதாபிமானப் பண்பு எவ்வளவு தொலைவுக்கு வெற்றி காட்டுகிறதென்று!'-இம்முடிவு அவள் நினைத்திராத ஒன்று. ஆனாலும், அவளுள் இப்படியொரு திட்டம் உருப்பெற்றது. 'துளசிங்கம் நல்ல பக்தர்!'

கீழ்த்தளத்துக்கு அவள் வந்தாள். அப்போது குறுக்கிட்ட அவள் அன்னையை அவள் ஏறெடுத்தும் பார்க்கவில்லை. இரவு வேலைக்காரி எடுப்புச் சாப்பாடு கொண்டு வந்தாள். இருவரும் சாப்பிட்டார்கள். மஹேஸ்வரியின் வைராக்கிய குணம், பெற்றவளின் கெஞ்சுதலுக்குக்கூட மசிய மறுத்தது. சாப்பிட்டானதும் மஹேஸ்வரியும் காளத்திநாதனும் சிறு பொழுது பேசினார்கள்; சிரித்தார்கள்! அவள் மாடிக்குப் போய் விட்டாள். அவன் கீழே இறங்கி விட்டான். படியிறங்கி வந்ததும், காளத்தியின் அறையை நோக்கினாள். அவன் "ஹாயாக'த் தூங்கினான். துயில் கலைக்கத் துணிவு ஏது அவளுக்கு?

குளிக்கும் அறைக் கதவம் நாதாங்கி இட்டுக் கொண்டது; பிறகு, திறந்து கொண்டது.

மஹேஸ்வரி அழகே உருவமாகத் தோன்றினாள். உடைகளில் பருவம் துடித்தது. பருவத்தில் கனவு துடித்தது; கனவில் காலம் துடித்ததோ? அகம் மகிழ்ந்து, முகம் மலர்ந்து மூரல் சிந்தினாள். 'எனக்குக்

காளத்தி கிடைத்து விட்டார். இனி, எனக்கு என்ன கவலை? எல்லாம் ஈசன் அருள்!' ரவிக்கைக்குள் பதுக்கி, பின் எடுத்து அழகு பார்த்த திருமண அழைப்பை இப்போதும் பார்த்தாள். அவளுடைய ஓரவிழி நோக்கில் அளவுகடந்த துணிச்சல் கண் பதித்திருந்தது.

'லேடி ஷூ' சரசரக்க அவள் நடந்தாள்.

காளத்திநாதன் புதுமை மெருகு திகழக் காட்சி தந்தான். ரேடியோவைத் திருப்பிக் கொண்டிருந்தான். காலியாக்கப்பட்டிருந்த காப்பிக் கோப்பை காணப்பட்டது. நீரோடையில் கழித்த கனவு நாட்களை அவன் அசை போட்டானோ?

"காள..."

அவளுக்கு வெட்கம் வந்து விட்டது, வெட்கம்! வார்த்தைகளை அந்தரத்தில் நிறுத்தி விட்டாள் அவள். ஆகவே, பெயரும் அந்தரத்தில் நிற்கவேண்டி வந்தது. 'புருஷன் பெயரை இனிமேலும் சொல்லிக் கொண்டிருந்தால், நன்றாயிருக்குமா? ஊஹூம், கூடாது! கூடவே கூடாது!'

எழுத்து ஒவ்வொன்றிலும் உள்ளத்தின் ஒவ்வொரு பகுதியைக் கேட்க முடியும். ஆனபடியினால்தான், 'கா' என்னும் முதல் எழுத்து ஒலி வடிவம் பெற்ற போதே, அழைத்த அன்பை அவன் இனம் கண்டு கொண்டு திரும்பிப் பார்த்தான்.

முதல் இரவுக்குத் தயாராக நிற்கும் மதுமலர்ப் பாவையாகத் தோன்றினாள் மஹேஸ்வரி. எடுபிடி கொணர்ந்த காப்பி பலகாரத்தை அவள் கையினால் கொடுத்தாள். அவன் சாப்பிட்டான். அவளும் சாப்பிட்டாள். தனபால் விடுத்த வேண்டுகோளை அவள்

சொல்ல வாயெடுத்தாள். அதற்குள், அவன் வாயெடுத்துப் பாடத் தொடங்கி விட்டான் :

“ தில்லித் துருக்கர் செய்த வழக்கமடீ ! பெண்கள்
திரையிட்டு முகமலர் மறைத்து வைத்தல்,
வல்லி யிடையினையும் ஓங்கிமுன்னிற்கும் – இந்த
மார்பையும் மூடுவது சாத்திரங் கண்டாய் ;
வல்லி யிடையினையும் மார்பிரண்டையும் – துணி
மறைத்த தனாலழகு மறைந்ததில்லை ;
சொல்லித் தெரிவதில்லை மன்மதக்கலை – முகச்
சோதி மறைத்துமொரு காதலிங் குண்டோ ?”

ஹாஸ்டல் விழாக்களில், மகிழ்ச்சி கரை தாண்டும் போது, பாடத் தெரியாதவர்கள்கூட வாயைத் திறந்து பாட்டுப் பாடி விடுவார்கள். அதே கதைதான் இப்போதும் நடந்தது. காளத்திக்கு இவ்வளவு சுருதி சுத்தமாகப் பாட வருமா ?

மஹேஸ்வரிக்கே அதிசயமாகப் போய் விட்டது. இரவு தன் அறையில், உறக்கம் கொள்ளாமல், ஆறுல் உணவு கொண்டு புரண்ட சமயத்தில், பாரதியின் புத்தகத்தை மார்பில் பதியவைத்துப் புரட்டிக் கொண்டிருந்தாள். அப்பொழுது, இதே பாட்டை அவளும்தான் தனக்குள்ளாகப் பாடிப் பார்த்தாள் !

“ மஹி !”

காளத்தி கூப்பிட்டான். அவள் வந்து சேருவதற்குள் அவனுக்கு அவசரம் தாளவில்லை போலிருக்கிறது. அண்டி வந்தான். பாட்டின் ஒவ்வொரு அடியாகப் பாடினான். அவளது சேலைத் தலைப்பைக் கொய்து முக்காடு போட்டுப் பார்த்தான். பாடாமல் பாடி, தொடாமல் தொட்டுக் காட்ட விழைந்த வரிகளுக்கு வாய்ப்புக் கிட்டி விடுவது அவ்வளவு சாமான்யமா, என்ன ?

'சொல்லித் தெரிவதில்லை, மன்மதக்கலை' என்ற வரியில் அழுத்திய மனத்தைத் திருப்பி அவளது செக்கச் சிவந்த போதைக் கன்னத்தில் நுனிவிரல் கொண்டு அழுத்தினுன். முகப்பருக்கள் வெடித்திருந்தன. அவைகூட அவளுக்குக் கவர்ச்சியைக் கொடுத்தன!

"கா..."

"சும்மா பெயரைச் சொல், தவறில்லை!"

"கா...ள...த்...தி, நான் இப்போது தமிழ்ச்சித்தன் வீட்டுக்குப் போகப் போகிறேன்!"

அவன் திகைப்பை மிதித்தான். "ஏன், மஹி?"

அவள் விளக்கினுள்.

அவன் சம்மதமின்றியே சம்மதித்தான்.

புறப்படுமுன், மஹேஸ்வரி தனி அறைக்கு நடந்தாள். காலை இளம் பரிதிச் செல்வனின் சிறு பிள்ளை விளையாட்டு நடைபெற்றது. காளத்தியை ஜாடை காட்டி அழைத்தாள். அவன் சென்றுன். கதவு அடைபட்டது.

ஜோடிச் சிரிப்பு சொல்லிச் சொல்லி வழிந்தது!

மஹேஸ்வரி அந்தப் பெருமனையை மிதித்த போது, புண்ணிய பூமியின் அச்சுறுத்தும் அமைதி நிலவியிருந்தது. அவளைக் கண்டதும், தனபாலின் களை இழந்திருந்த முகம் களை தட்டிக் காணப்பட்டது.

ஒரு மூலையில் தமிழ்ச்சித்தன் வைராக்கிய நிலை மாருமல், அட்டமா சித்தியை வரப்படுத்தும் தவமுனிவனைப் போல, நின்றது நின்ற நிலையில் காணப்பட்டான்.

துளசிங்கம் உடல் அசைவின்றிப் படுக்கையில் கிடந்தார். உரியவளும் மற்றவர்களும் முகம் வீங்கி நின்றார்கள். நாடிக் குழல்களை சட்டைப் பைகளுக்குள் மறைத்தவர்களாகக் காட்சியளித்தார்கள் டாக்டர்கள்.

" தமிழ்ச்சித்தன் !" என்று அன்பொழுக அழைத்தாள் மஹேஸ்வரி.

தமிழ்ச்சித்தன் திரும்பினான். திருப்பப்பட்ட முகத்தில், மஹேஸ்வரி பிரதிபிம்பம் சமைத்திருப்பாளோ? அவன் மெய்ம்மறந்து உவகை சிந்தினான். " மஹி !" என்று சொன்னான்.

" சித்தன், நான் உங்களுக்காகக் காத்திருப்பவள். ஆனால், என் விண்ணப்பம் ஒன்றினை மாத்திரம் நீங்கள் நிறைவேற்ற வேண்டும் !"

" சொல் மஹி, சொல் !"

" உங்கள் தந்தையைப் பிழைத்தெழச் செய்ய வேண்டும் !"

" அது என் கையில் இல்லையே ?"

" பிறகு...?"

" டாக்டர்கள் கையில்...!"

" அவர்கள் தான் கைவிரித்து நிற்கிறார்களே ?"

" அப்படியென்றால்...?"

மணிச்சத்தம் கேட்டது. தமிழ்ச்சித்தனும் மஹேஸ்வரியும் திரும்பினார்கள். தனபால் பூஜை அறையில் நீர் கசிய நின்று மணி அடித்துக் கொண்டிருந்தார்.

" தமிழ்ச்சித்தன், உங்கள் நன்றிக்குப் பரிபூரணமான அளவில் இலக்காக வேண்டிய உங்கள் அருமைத் தந்தையின் உயிர் அதோ, அந்த இறைவன் கையில்

ஊசலாடுகிறது. நீங்கள் பித்தனே வேண்டுங்கள். நீங்கள் பித்தாகி நிற்காமல், பிறைசூடியை வேண்டுங்கள். உங்கள் பித்தம் தெளியும். உங்கள் கொள்கைகளை நான் அறிவேன். உங்களைப் போன்ற செல்வக் குமாரர்கள் கிடைத்து விட்டால், உங்களுக்குத் தடம் காட்டும் தலைவர்களுக்கு வான்கோழிப் பிரியாணி கிடைத்தாற் போலத்தான்! உங்கள் நாத்திகத்தின் வாடை ஆதாரமற்றது; சரித்திரம் இல்லாதது; சுயநலம் கொண்டது. உங்களை ஈன்ற தாயின் கண்ணீரைவிட உங்களுக்கு உங்கள் கட்சிக் கொள்கை முக்கியமாகி விட்டதா? என் உயிர், உடல் அனைத்தையும் உங்கள் காலடியில் சமர்ப்பிக்கிறேன். முதலில் ஆண்டவனிடம் ஓடுங்கள். உங்கள் தந்தையின் உயிரைச் சோதனைப் பொருளாக்கி விடாதீர்கள். ஊம், என்ன சொல்கிறீர்கள்?..."

வீறு கொண்டு கேட்டாள் அவள்.

தமிழ்ச்சித்தன் அவளை விழுங்கி விடுகிற பாவனையில் பார்த்தான். பிணம்போலக் காணப்பட்ட தன் தந்தையைப் பார்த்தான். 'நான் உங்களுக்காகக் காத்திருப்பவள்!' என்ற வாசகத்தின் வக்கணையை எடைபோட்டான். சூன்யத்தில் விழி அழுத்தி ஒரு கணம் ஏதோ யோசனை செய்தான். அப்புறம், பூஜையறைக்கு ஓடினான். சிரம் தாழ்த்திக் கரம் கூப்பினான். கண்ணின் மணிகள் அழுதன.

துளசிங்கம் ஆறுநாள் மயக்கத்துக்குப் பிறகு கண்களைத் திறந்தார்.

"அப்பா!" என்று ஓடினான் தமிழ்ச்சித்தன். பிறகு,

அவன் கண்களைத் துடைத்துக் கொண்டு மஹேஸ்வரியை நெருங்கினான். அவள் நீர் சோர நின்றதைப் பார்த்தான். "மஹி!..." என்றான்.

"மிஸ்டர் சித்தன், என் கனவு பலித்துவிட்டது. உங்கள் மனத்தைத் தயவு செய்து திடமாக்கிக் கொண்டு என்னைப் பாருங்கள்!" என்று நகையோடச் சொல்லியவாறு, தன் கழுத்தில் இழைந்த மங்கல நாணைக் காட்டினாள் மஹேஸ்வரி.

மலை ஏந்திச் சிலையானான் தமிழ்ச்சித்தன்!

## 14. நாத்திகன் யார்? ஆத்திகன் யார்?

அம்பலத்திற்கு வருவதற்கு முன்னர், அறையில் நின்று முகக் குறிப்புக்களைப் பழகிக் கொள்ளுவாள் நடிகை. பழக்கம் சம்மதம் தெரிவித்த கையுடன், அறையை விட்டு அம்பலத்திற்கு வந்ததும், எண்ணம் தொடுத்த அதே கணத்தில், எண்ணித் தொடுத்தாற் போல, எக்காளச் சிரிப்பின் முகபாவனையை முகத்திரையில் நெளிந்தோட விடும்பொழுது, அவளுள் நினைவு கடந்த புளகிதம் நிலைகடந்த அளவில் பூத்துக் குறு நகை தெளிக்கும் அல்லவா? தன்னுடைய நடிப்புத் திறத்தைக் கண்டு கைகொட்டிக் கைதட்டி ஆர்ப்பரிக்க ஒரே ஒரு ரசிகர் கிடைத்து விட்டால்கூட, அந்த நடிகைக்குக் கிடைக்கும் மகிழ்ச்சியின் மதிப்பு பெரும் அளவாகத்தானே இருக்கும்?

மஹேஸ்வரி நடிகையல்லள். நடிக்க வேண்டிய 'தலைஎழுத்தும்' அவளுக்குக் கிட்டவில்லை. என்றாலும், நடிகையின் மனப்பக்குவத்தில் அவள் சில சந்தர்ப்பங்

களிலே இயங்கினாள்; சார்பு நிழல் அவளை அவ்வாறு இயக்கித் தொடர்ந்தது. திட்டமிட்டு, செயல் நிறுவிச் சிரித்த அந்தச் சிரிப்பு இன்னும் ஒலியடங்க வில்லை. கழுத்தில் இழைந்த தாலிச் சரட்டைத் தூக்கிக் காட்டிய போது, பளிச்சிட்டு மின்னிய ஒளியின் பெருமை இன்னமும் அடங்கவில்லை. அவள் நகையுதிர்த்த நேரத்தில், கன்னங்களில் சுழித்த அழகுக் கனவுகளைத் தமிழ்ச் சித்தன் ரசித்தானா?...கடைவாய்ப் பகுதியில் முளைத் திருந்த 'தொற்றும்பல்' இடைவெளியில் விளைந்திட்ட எழிற்கோலம் கண்டு பூரித்தானா?

தமிழ்ச்சித்தன் சிலை நிலையிலிருந்து விடுதலை பெற்றான். நல்ல நினைவு சுயஉருக்கொண்டு எழுந்தது. அடிபட்ட நல்லபாம்பு தன் வெஞ்சினத்தை உள்ளடக் கிக் கொண்டு, அடித்தவனை ஏற இறங்கப் பார்ப்பது உண்டு. அதுபோல, அவன் அவளைப் பார்த்தான். அவனுடைய விழிகள் அச்சம் தரும்வகையில்-அச்சுறுத் தும் விதத்தில் முனைக்கு முனை படர்ந்து திரிந்தன.

மஹேஸ்வரியா, கொக்கா ?–அவள் சிரிப்பைத் தொடர்ச் சித்திரமாக்கினாள்.

"மஹேசுவரி! நீ..."

"நிறுத்துங்கள். நீ என்று என்னை அழைக்க இன்னுமா நீங்கள் சொப்பனம் காண்கிறீர்கள்? நீங்கள் என்று அழைத்துப் பழகுங்கள். சரி, சொல்ல வந்ததைச் சொல்லுங்கள்!"

"நீங்கள் என்னை முழுமையாக ஏமாற்றிவிட்டீர்கள், மகேசுவரி...!"

"ஏமாற்றம் என்ற இந்தச் சொல்லின் கதை விசித் திரமானது. நீங்கள் பிறரை ஏமாற்றப் பார்த்தீர்கள்.

குழி பறித்தவன் அதே குழியில் விழுவது ஒன்றும் நடைமுறைக்கு ஒட்டாத நடப்பல்லவே, மிஸ்டர் தமிழ்ச் சித்தன் ?...''

நீறு போர்த்திய எரிதழலை ஊதும் பொழுது சாம்பல் பறப்பது போலவே, அனல் கங்குகளும் பறந்து விடுவது கிடையாது. ஊதும் காற்று கனல்வெளியில் உட்காரும்போது, தழலின் உக்கிரம் அதிகரிக்கும்.

மறந்த ஒன்றை-மறைந்திருந்த ஒன்றை ஊதிவிட்டாள் மஹேஸ்வரி. 'ஏமாற்றம்' என்ற அந்த ஒன்று சாம்பரானது. 'நீ காளத்தியை வசமாக ஏமாற்றி என்னை நீயே அடைந்து கொள்ளலாமென்று கங்கணம் கட்டிக் கொண்டாயே, அதை மறந்தனையா?' என்று கேட்டது அவளுடைய பேச்சின் அழுத்தம். 'நீ காளத்தியை ஏமாற்றினாய்; நான் உன்னை ஏய்த்தேன். சரிக்குச் சரியாகிவிட்டது!' என்று உட்பொருள் உணர்த்தி நகை பயின்றது உதட்டுக்கரைக் கள்ள நகை.

அப்போதைய நிலையில், தமிழ்ச் சித்தனால் செய்ய முடிந்தது இது ஒன்றுதான். தன்னால் முடிந்த மட்டும், பற்களை 'நறநற' வென்று கடித்துத் தீர்த்தான். கட்டு மீறிய கடுஞ்சினத்தைக் கட்டுப்படுத்த எத்தனம் புரிந்த அவன் அடுத்த நான்காவது நிமிஷத்தில் தலையை உயர்த்தினான். காரணம்: மஹேஸ்வரியின் புதுச் சிரிப்பில் புதுப்பொருள் இருப்பதாக அவன் யூகித்தான். ஆனால், பொருள் இன்னதென்று ஊகிக்கத் தெரியாதவனோ ?

பெண்மைச் சிரிப்பைத் தொடர்ந்து, ஆண்மைச் சிரிப்பொன்று தலைகாட்டியது.

அங்கே, காளத்திநாதன் அமர்க்களமான ஒயிலுடன் நின்று கொண்டிருந்தான். சுயம்வர மண்டபத்தில் இளவரசியின் மாலை கழுத்தில் விழப் பெற்றவனைப் போல அவ்வளவு கம்பீரத்தோடும் காந்தியோடும் களிப்போடும் அவன் தோற்றம் தந்தான்.

நெற்றிக் கண்ணை-நெற்றிக் கண்ணனை நம்பாதவன் தமிச்சித்தன். என்றாலும், நெற்றிக்கண் இருந்தால், அவன் காளத்தியைக் கட்டாயமாய்ச் சுட்டெரித்திருப்பான் போலும்!...

"காளத்தி!..."

"உயிரோடுதான் இருக்கிறான் காளத்தி!"

"அதுதானே என் ஆசை?"

"அல்ல; அது உங்கள் ஆசையாக இருந்திருக்கும் பட்சத்தில், என்னை ஆழக்குழி தோண்டிப் புதைத்துவிட நீங்கள் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கமாட்டீர்கள், சித்தன்!"

"ஐயையோ! நீங்கள் தப்புக் கணக்குப் போட்டு விட்டீர்கள் காளத்தி, தப்புக்கணக்குப் போட்டுவிட்டீர்கள்!..."

"கணக்கு தப்பா, சரியா என்பதைப் பற்றி ஆலோசிக்க இது நேரமில்லை. ஏன் தெரியுமா? ஐந்தொகைத் தாளில் கணக்கு அதிகாரியின் மதிப்பு வாய்ந்த கையொப்பம் ஏறிவிட்டது!"

"என்ன சொல்கிறீர்கள், காளத்தி?"

"உங்களுக்கு எதைச் சொல்ல வேண்டுமோ, அதைத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறேன்!"

"உங்களை நான் புரிந்து கொண்டுவிட்டதாக எண்ணியிருந்தது எவ்வளவு பெரிய தவறு?"

" அன்பு, அன்பு என்று சொல்லி அந்த அன்பின் கண்களிலே மண்ணைத் தூவி, அத்தோடு நிற்காமல், என் கண்களிலேயும் மண்ணைத் தூவிட கனவுகண்டீர் கள் நீங்கள். என் வெள்ளைமனத்தைத் தவருகப் பயன் படுத்த எண்ணினீர்கள்! மனத்தின் பரிபக்குவ நிலை, அல்லது, மரிஞும வளர்ச்சி அவ்வப்போது நடைபெறும் சம்பவங்களின் திடீர் மாறுதல்களின் தூண்டுதல் காரணமாக மாறுபாடு காட்டுவது இயல்பென்று சிக்மண்ட் பிராய்ட் எழுதியதை ஒருமுறை உங்களுக் குப் படித்துக் காட்டினேனே, மறந்து விட்டீர்களா?... என்னவோ, உங்களுடைய வெள்ளைமனத்தில் கறுப்பு விழுந்தாலும் விழுந்தது, உங்கள் போக்கே தடம் புரண்டு விட்டது!..."

எந்தத் தாக்குதலையும் தாங்கும் இதயம் கொண்ட வனைப் போன்று, பகுத்தறிவுப் பார்வை பார்த்தவாறு, குறுக்கே கட்டப்பட்ட கைகளுடன் நின்ருன் தமிழ்ச் சித்தன். மறு கணத்தில், அவனுடைய கண்கள் கலங்கிக்கொண்டு வரத் தொடங்கின. செயல் முறைத் திட்டம் வகை தவறிப் போய்விட்டதை நினைந்து வருந்துபவன் மாதிரி அவன் துயர் அடைந்தான்.

" வாருங்கள், காளத்தி; நாம் புறப்படலாம். நம் கடன் பணி செய்து கிடப்பதுதானே?" என்று அடித் தொண்டையில் பேசிஞள் மஹேஸ்வரி. அவள் குரலில் கேலிப் பண்பு மிகுந்திருந்தது.

" போய் வருகிறேன், சித்தன்!" என்ருன் காளத்தி நாதன்.

கனவு கண்டு விழிப்பவன் என தடுமாறிஞன் தமிழ்ச் சித்தன். பின்புறம் திரும்பிஞன். அவன் தந்தை துளசிங்கம் மெத்தையின் திண்டில் சாய்ந்தபடி

புனர்ஜன்மம் எடுத்த பெருமையுடன் காணப்பட்டார். அதே நோக்கில், திசைக்கோணம் சாய்ந்தது. தொழுகை அறை திறந்து கிடந்தது. சினம் புரள, சித்தம் நிலைக்க நின்றான் அவன். 'கொள்கை இழந்தவனா நான்?' என்று உள்ளுக்குள்ளாகவே ஒரு தீனக் குரல் கேட்டதை அப்போது அவன் சட்டை செய்யவில்லை. அதைப் போலவே, முரண்டு பிடித்த சட்டையை உதறிவிட்ட வாறு திரும்பிப் பார்த்தான்.

காளத்திநாதனும் மஹேஸ்வரியும் ஒருவரையொரு வர் கள்ள விழி தொடுத்து, உள்ள வழி உணர்ந்து; உணர்வு விழி சொடுக்கி நோக்கிக் கொண்டார்கள். 'ஆமாம், நாம் உடனடியாகப் புறப்படுவதுதான் நல்லது' என்ற குறிப்புப் புரண்டது. காளத்திநாதன் அவளைப் பார்வைக்குள் அழுத்தினான். ஆகவே, அவள் கைகளையும் அவன் அழுத்த வேண்டியவன் ஆனான்! அவன் மனத்தில் ஒரு நிகழ்ச்சி தோன்றி மறைந்தது. உயிரும் உயிர்ப்புமான நிகழ்ச்சி ஆயிற்றே அது?

அந்தச் சம்பவம் :

இங்கு புறப்பட்டு வருவதற்கு முன் அவனும் அவளும் தனியறையில் அடிவைத்து, தாழடைத்துப் பதுங்கிச் சிரித்தார்கள். அன்பின் மனத்தாழ் அடை படாமல் நின்று அவர்களது துல்லியமான நேசத்தின் பாசத்துக்குச் சாட்சி சொன்னது; பக்தி பூர்வமான காதலின் மணத்திற்கு அது துளசி மாடம் ஆனது; அன்பின் இறுக்கத்திற்கு ஒட்டுறவு கற்பிக்கவல்ல கலங்கரை தீபம் ஆனது.

மஹேஸ்வரியை நோக்கும் தருணமெலாம், காளத்தி நாதனுக்கு மல்கோவா மாம்பழத்தின் ஞாபகம் வந்தது; ஆப்பிளின் நினைவு எழுந்தது. அப்படியே அவளைக்

கடித்துச் சுவைத்துத் தின்றுவிட வேண்டு மென்று துடித்தான். அந்தத் துடிப்பில் 'வெறியுணர்வு' இருந்ததுதான் உண்மை நிலை! 'முன்பெல்லாம், மஹறியைப் பார்ப்பேன். முகையவிழ்ந்த பூவென்ருலும், பூமணத்தை நுகர்ந்திட மறப்பதில்லைதான். என்ருலும், இப்போது தோன்றியுள்ள இப்புது மாற்றத்தைப் போல ஒருநாள் கூட ஏற்பட்டதில்லையே ?...அல்லும் பகலும் அனவரதமும் மஹறியின் நினைவு முகம்தானே எனக்குக் கனவாய், களிப்பாய்-காமமாய் நிழலாடுகிறது !...நட்புக்கு ஓர் இலக்கணம் சமைக்க வேண்டுமென்றுதான் திட்டமிட்டிருந்தேன். தமிழ்ச்சித்தனின் நல்ல மனத்துக்காக எந்தத் தியாகத்தையும் செய்துவிட வேண்டுமென்றுதான் பண்புவழியில் உறுதியைக் கைக்கொண்டிருந்தேன். ஒருநாள் எனக்குக் காய்ச்சல் அளவுகடந்த நிலையில், நினைவு தப்பிக் கிடந்த என்னைக் கண்டு கண்ணீரும் கம்பலையுமாக இரவுபகல் உறக்கமின்றித் தவித்த அவனை நான் மறந்துவிடலாகாது என்பதாகத் தான் சங்கற்பம் செய்திருந்தேன் ஆனல், இன்று எல்லாவற்றையும் மண்மூடிப்போகச் செய்து விட்டானே தமிழ்ச்சித்தன் ?...பாவம், மஹறி தனக்குக் கிட்டுவாள் என்று களித்திருப்பான் !... இப்போது சகலமும் நாசம் !...என் வறுமையைப் பயன்படுத்திக் கொள்ள நினைத்த அவனு என் நண்பன் ? ஊஹும், ஒருபோதும் இல்லை !...'

தாலியை நீட்டிஞள் அவள். தாலியைப் பூட்டிஞன் அவன் ! சிரிப்புக்குச் சிரிக்கத்தான் தெரியாதா ?

இருவரும் புறப்பட்டாகள். சூடேற்றப் பெற்ற கதிர்கள் மாடித்தளத்தில் மிதிபட்டன.

" நில்லுங்கள், காளத்தி !"

“ஏன்?”

“கடைசியில் உங்கள் முடிவு இதுதானா?”

“ஆமாம்; தாலிகட்டியபின், முடிவு மாற்றப்பட முடியுமா?”

“முடியும்!”

“உங்கள் கொள்கைகளே விசித்திரமானவை தானே?”

“உங்களுக்கு உரிய ஆண்டாளுக்குத் துரோகம் செய்கிறீர்கள்!”

“அது என் சொந்தப் பிரச்னை!”

“அப்படியென்றால், என்னைச் சாகடிக்க திட்ட மிட்டு விட்டீர்களா, காளத்தி?”

“மஹறி இல்லாமல் ஒரு பொட்டுப் பொழுது இருந் தால்கூட, நான் செத்து மடிந்து போவேன்! எனக்கு நான்தான் முக்கியம். அதாவது, என் உயிர்தான் எனக்கு வெல்லம்!...வர வர, அன்பு, தியாகம் எல்லாம் கூட வெளிவேஷம் போலாகி விட்டன!...நான் வருகி றேன்.”

“ஓஹோ! அப்படியா?”

“ஊம்!”

“என்னை சரிவரப் புரிந்து கொள்ளும் காலம் ஒரு நாள் வரும்; இதை நீங்கள் இருவரும் மறந்துவிட வேண்டாம்!...”

“ஆல் ரைட்!”

“அப்படியென்றால், நீங்கள் என்பால் பட்டிருக்கும் கடனை முதலில் வீசி எறிந்து விட்டுச் செல்லுங்கள்!”

அப்பொழுது மஹேஸ்வரி ' கட கட ' வென நகைக்கிறாள். அதே வேளையில் அவளுடைய அலங்காரப் பை நூறு ரூபாய்த் தாள்கள் சிலவற்றைக் கக்கின. " மிஸ்டர் தமிழ்ச்சித்தன், உங்கள் மூளையை விட என் மூளை ஆண்மை மிகுந்தது. அனைத்தையும் ஆலோசித்தேதான் நான் செயற்படுகிறேன். உங்களுக்குச் சேர வேண்டிய தொகையை எடுத்துக் கொண்டு மிஞ்சுவதை என்னிடம் தாருங்கள் !"

மீளவும் தமிழ்ச்சித்தனின் மூளை மீள முடியாத அளவுக்குக் கதிகலங்கியது. அவனுக்குச் சொந்தமான கண்கள் நீர் பொழிந்தன.

மிகுதிப்பட்ட பணத் தாள்களோடு மஹேஸ்வரியும் காளத்திநாதனும் புறப்பட்டார்கள். தமிழ்ச்சித்தன் வேதனை பொறுக்க முடியாமல் அப்படியே சோபாவில் விழுந்தான். அவன் கையிலிருந்த இங்கர்சாலின் சிந்தனை நூல் மண்ணில் விழுந்தது.

' மனச்சாட்சியை மூடி மறைத்திடும் ஆத்திகனைக் காட்டிலும், மனச் சாட்சியை மதித்து நடக்கும் நாத்திகனே சிறந்தவன் ஆகிறான் !'

பளிச்சென்று தென்பட்ட இவ்வரிகளையே இமை மூடாமல் பார்த்துக் கொண்டிருந்தான் தமிழ்ச்சித்தன். கண்ணீர் மாலைமாலையாக வழிந்து கொண்டிருந்தது. அவனது உதடுகள், ' மஹி !...மஹி !' என்று ' ஜபம் ' செய்துகொண்டேயிருந்தன !

## 15. முதல் இரவு

சுவரட்சணை தளும்பிடும் குழந்தையின் ஆரோக்கியம் மிகுந்த அழகு கொழிக்கும் வதனம் போல, ஆதித்த பகவானின் இளம்பொலிவுச் சுடர் மணிகள் மாணிக்கக் கற்களாய் உருமாறி மின்னின.

மாடி அறை.

தளிர்க் காற்றின் தளிர்க் கரங்கள் அசைந்து அசைந்து ஆடின.

மஹேஸ்வரியும் காளத்திநாதனும் எதிரும்புதிருமாக அமர்ந்தார்கள். பூப்போட்ட பட்டு மெத்தைகள் இதமாக இருந்தன. 'சாப்பிடுங்கள்' என்று சன்னக் குரலெடுத்துப்பாடி, பின்னலை எடுத்து விட்டபடி, காப்பிக் கோப்பையைச் சமர்ப்பித்தாள். 'உத்தரவு தேவி' என்று எதிர்ப்பாட்டுப்பாடி, 'டை' சுருக்கத்தைத் தடவி விட்டவனாக காப்பியைச் சுவைத்தான். காப்பியைச்

சுவைத்த இதழ்க் கடையில், கோமளவல்லியாளின் கொள்ளை அழகையும் கொள்ளை கொண்டு அனுபவித்த அன்புத் திரட்சியின் இனிப்புச் சக்தி ஒதுங்கியது.

தன்னை விழுங்கி விட முனைந்தவனைக் கண்டதும், வேல் விழிப்பாவை விழி மறுகி, விழி சொடுக்கி, விழி நெளித்துக் கள்ள முறுவல் சிந்தினாள். 'கள்ளவிழ் கமலம்' ஆனாள். காற்றில் பறந்த நைலான் பட்டைப் பற்றிய கவனம் இன்றி, ஒரு சில விநாடிகள் இருந்து விட்டாள் அவள். அதுவே அவனது ரசனைக்கு வாய்த்த பெரும் வாய்ப்பாக அமைந்தது. அழகு அனுபவப் பொருளானது; அழகு காட்சிப் பொருளானது; அதே அழகு கனவுப் பொருளாகவும் ஆனது. மேஜை இழுப்பினுள்ளே கண் மலர்த்திக் கிடந்த உலக அழகிகளின் கவர்ச்சிப் படங்களைப் பார்த்த கண்களால், மஹேஸ்வரியையும் பார்த்தான் அவன். உடலுறுப்புக்களில் சலனம் அலை பாய்ந்தது. முகம் ரத்தம் கட்டித் திகழ்ந்தது. விழி வெளிகள் சிவந்தன.

"அத்தான்!"

கைந் நொடிப் பொழுதுக்கு, காளத்தி சென்னை மாநகரில் இல்லை. பாதிரிப் புலியூர் சென்றிந்தான். 'அத்தான்' என்று சத்து மொழி உதிர்த்துத் தன்னைப் பித்தாக்கிவிட்ட அத்தை மகள் ஆண்டாளின் கோல மிகு முகம் தோன்றியது. இனம் புரியமாட்டாத நடுக்கம் அவனை ஆட்டிப் படைத்தது. தீங்கு இழைத்தவனின் மனச்சான்றுக்கு ஒப்ப அவன் தடுமாற்றம் அடைந்தான். அடைந்த தடுமாற்றம், மாற்றம் கண்ட போது, ஆண்டாளின் முகம் தெரிந்த இடத்தில் மஹேஸ்வரியின் முகம் தெரிந்தது. அவன் மனமும் தெளிந்தது. 'அத்தான்!'—தனக்குத்தானே தோன்றும் அமைதிக்குக் கிடைக்கும் மதிப்பு அலாதிதானே?

" அத்தான் !'' என்ற அழைப்பின் குரல் இரண்டாம் முறையாக ஓடி வந்தது.

" மஹ்றி !"

" அழைப்புக்களிலே விரைவாக முகவரிகளை எழுதி னுல்தானே நல்லது ? இன்று ஜி. பி. ஓ. வுக்கு ஆள் அனுப்பி எல்லாவற்றையும் அனுப்பியாக வேண்டும். உங்கள் அத்தை பெண் ஆண்டாளுக்கும் மறந்து விடாமல் அனுப்புங்கள். ஆண்டாள் என்னைத்தான் தவருக எண்ணப் போகிருள். நான் அவளுக்குத் தனிப்பட ஒரு கடிதமும் எழுதி வைத்திருக்கிறேன்," என்ருள் அவள்.

அவன் பதில் எதுவும் சொல்லாமல் இருந்தான் முன்பெல்லாம் சதா அவனுக்கு ஆண்டாள்தான் நினைவில் ஓடி வருவாள். இப்போதோ, மஹ்றியின் நினைவுதான் அவனை ஓட்டி வருகிறது !

" ஆண்டாளை மறக்க முடியுமா, மஹ்றி ? கட்டாயம் அனுப்பத்தான் வேண்டும். அவள் வந்து நம் திருமணத்தை நடத்தி வைப்பதைத்தான் நான் விரும்பு கிறேன். அப்போதுதான் என் உள்ளமும் ஆறுதல் காட்டும்."

" உண்மைதான் !"

" நீ ஆண்டாளுக்கு என்ன எழுதி யிருக்கிருய் ? அறியலாமா ?"

" உங்கள் பரிசீலனை இல்லாமல் அனுப்பிவிடு வேனு ?" என்று சொல்லி, கடிதத்தைக் காளத்தியிடம் கொடுத்தாள் அவள். கரம் தொட்டுக் கொடுத்தாள்' ' உடலுறுப்புக்கள் ஆண் - பெண் தரப்பிலிருந்து ஒன்ருேடொன்று உராயும்போது, உள்ளக் கிளர்ச்சிக்

கான எண்ணங்கள் எழுச்சி பெறுகின்றன' என்று காலையில் படித்த 'பால் கவர்ச்சிப் புத்தக'த்தின் வரிகள் நெஞ்சில் ஓட்டம் காட்டின!

" உயிர்த் தோழி ஆண்டாளுக்கு.

நலம். நாடுவதும் அஃதே.

என் அழைப்பில் நூறு சதவிகித அன்பு தெளிக்கப் பட்டுள்ள தென்பதை முதலில் நீ அறிவாயாக! ஆண்கள்தாம் ஆண் மனத்தைப் புரிந்து கொண்டும் புரிந்து கொள்ளாதவர்களாக-புரிந்து கொள்ளாதவர்கள் போல நடப்பவர்கள்-நடிப்பவர்கள். நீயும் பெண். நானும் பெண். ஆகவே, பெண்மைச் சக்திக்கு நடிக்கவோ, நடித்துக்காட்டவோ தேவை கிடையாது. ஆண்டவனின் வாழ்வான நடிப்பு விளையாட்டுக்கு நீயும் நானும் சோதனைப் பொருள்கள்.

இத்துடன் இணைந்திருக்கும் கல்யாணப் பத்திரிகையைக் கண்டால், உனக்கு அதிசயமாக இருக்காது. ஏனென்றால், இது பற்றி உனக்கு முன்னதாகவே திருவாளர் காளத்தி அவர்கள் விளக்கிக் கடிதம் வரைந்திருக்கிறார்கள்.

உன் அத்தான் தங்கமானவர். உன் தவத்துக்கு வெற்றி தரவேண்டுமென்றுதான் அவர் தவம் இருந்தார்.

இடையில் நான் முளைத்தேன்!

'பாவி' என்று என்னை ஏசாதே!

பிறர் நோக நான் சகியேன்!

ஆனாலும், விதி எப்படியோ இப்படியொரு விதியை எழுதிவிட்டது.

காளத்தி அவர்கள் என்றைக்கு என்னுடைய கண்களில் தோன்றினாரோ, அன்றே அவரது கண்கள் என் நெஞ்சின் நினைவாயின; உயிர் நிலையின் தத்துவம் ஆயின. உள்ளங்கள் ஒன்றிட, நாங்களும் ஒன்றினோம்.

சகோதரி! உன் அத்தானை என் அத்தானுக்கு! உன் தியாகப் பண்பு என்னை மண மேடையேறச் செய்யுமா?

காளத்தி இல்லையெனில், நான் இல்லை!

உடன் வந்து, எங்கள் மணவினைக்கு நல்வழி காட்டி அருள்!

நாளெல்லாம் என் உயிர் உன் தியாக நலத்துக்குக் கடன்பட்டது.

இப்படிக்கு,
மஹேஸ்வரி."

அவனுடைய மணிக்கட்டில் கண்ணீர் மணிகள் சில சிந்தின. "உன் கடிதம் ஆண்டாளின் மனத்தைக் கட்டாயம் தொட்டுவிடும்!" என்று தெரிவித்தான்.

"உங்கள் கண்களைத் தொட்டபோதே நான் முடிவு கட்டிவிட்டேன், அத்தான்!" என்று உணர்ச்சிப் பெருக்குக்கு ஊடாக, செய்தியை முன்னே வைத்தாள் அவள்.

"தமிழ்ச்சித்தனுக்கு இதோ அழைப்பை எழுதி விடுகிறேன். நானே நேரில் போய்க் கொடுத்துவிட்டு வருகிறேன். அப்படியே அவனுடைய தகப்பனுருக்கும் கொடுத்துவிட வேண்டும்," என்றான் காளத்தி.

"உங்களுடன் நானும் வருகிறேன்!"

"வாயேன். நீயும் வந்தால் இன்னும் நிறக்காக இருக்கும்!"

பேனுவை மூடி வைத்துவிட்டு, மூடிக்கிடந்த 'ஸெக்ஸாலஜி' ஏடொன்றை எடுத்தான் காளத்தி. 'திருமணத்துக்கு - தாம்பத்யத்துக்கு லாயக்கில்லாத பெண்கள்' என்னும் மகுடமிட்ட ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்று படங்களுடன் வெளியாகியிருந்தது. ஒன்றிரண்டைப் படித்துக் கொண்டே வந்தான். தலை சுற்றிற்று. 'பாவம்' என்று அநுதாபக் குறியொலியுடன் நிறுத்தி, அதன் தொடர்ச்சியைப் படிப்பதையும் நிறுத்தினுன்.

அங்கயற்கண் அம்மாள் சாப்பாட்டு மணியை உலுக்கினுள். "வாங்க மாப்பிள்ளே!... இன்னிக்கு ஸ்பெஷல் குருமா!...மஹி சொன்னதின் பேரில் முந்திரிப் பருப்பு நிரம்பப் போட்டிருக்கேன்!" என்று வியாக்கியானம் செய்தாள். வாய் பூராவும் பல்!

அள்ளி அள்ளிப் போட்டாள் மஹேஸ்வரி.

அள்ளி அள்ளிச் சாப்பிட்டான் காளத்தி. அவன் சாப்பிட்டபொழுது, பெரிதாக ஒரு முந்திரிப்பருப்புக் கிடைத்தது. அதை எடுத்து மஹேஸ்வரியின் உதட்டில் திணித்தான். அவளும் மறுபேச்சாடாமல் அதை வாங்கிச் சுவைத்தாள்.

"தாம்பத்தியம் என்பதே எச்சிலின் கதைதானுக்கும்!" என்று சிரித்தான் அவன்.

அவளுக்கு என்னவெல்லாமோ ஞாபகத்தில் குதித்திருக்க வேண்டும். ஆகையால்தான் அவள் சிரித்தாள்.

சுபயோக சுபதினத்தில் மஹேஸ்வரியின் தங்கக் கழுத்தில் தங்கத் தாலி பூட்டினுன் காளத்திநாதன்.

தெய்வயானைதான் மஹேஸ்வரிக்கு மணப்பெண் தோழி!

காளத்தியின் அருகில் அமர்ந்திட வேண்டிய ஆண்டாள் திருமண வைபவத்தின்போது மஹேஸ்வரி யின் அருகில் அமர்ந்தாள். தியாகச்சுடர் அவளது விழிகளில் தெறித்தது.

திருமண நாளிலே ஓர் அதிசயம் நடந்தது.

தமிழ்ச்சித்தன் விழாவுக்கு வருகை தந்தான்! வெள்ளிப்பேழை ஒன்றைப் பரிசளித்தான்!

முதல் இரவுச் சடங்குக்கு நாள் குறிக்கப்பட்டது. 'நல்லநேரம்' நெருங்கிக் கொண்டிருக்கையில், "தமிழ்ச் சித்தன் சாகப்பிழைக்கக் கிடக்கிறாராம்!...உங்களை கையோடு அழைச்சுக்கிட்டு வரச்சொல்றாங்க!" என்று 'வேண்டியவன்' ஒருவன் வந்து சொன்னான்.

'எவன் எக்கேடு கெட்டுப்போனால் எனக்கென்ன?' என்று எண்ணமிட்டான் காளத்திநாதன்.

"ஊம், நீங்கள் டிரஸ்செய்து கொள்ளுங்கள்!" என்றாள் ஆண்டாள்.

காளத்தி 'டீக்காக' உடுத்துக்கொண்டான். வளர் பிறையை வீட்டில் எதிர்பார்த்துத் தவம் இருந்தான். அது வானத்தில் தோன்றியது! 'மஹிக்கு வெட்கம் போலிருக்கிறது!...ம்...வரட்டும், வரட்டும்!...' நகக் கண்ணில் குறுஞ்சிரிப்பு ஒட்டியது. 'ஈவினிங் இன் பாரீஸ்' மணத்தது!

கனவு, கற்பனை, களிப்பு, காதல், உள்ள எழுச்சி போன்ற உணர்வுகளுக்கு மத்தியில் திணறிக் கொண் டிருந்த காளத்தியை அந்தத் தனியறை 'வாருங்கள்!' என்று கூவி அழைத்தது!

# 16. அந்தி நிலா

உதய சூரியன் பூதலத்தாயின் . பூப்பாதங்களைத் தொட்டு வணங்கிய பின்னர் தன்னுடைய நித்தியப் பணிகளை இயற்றத் தொடங்கினுன். ஆதித்தனின் அழகு மிளிர் மூரல், உயிரொடுக்கும் இருளரக்கனின் அகம்பாவம் சேர் இருட்டைத் தொட்டு விரட்டி விட்டது. ஒளி சிந்தி, ஒளி சிதறிச் சிரிக்கும் பாருங்கள் நித்திலம், அதைப் போன்று, பால சூரியன் நகை இழை பின்னினுன். புவனத்தின் கொண்டாட்டத்திற்குக் கேட்க வேண்டுமா, என்ன ?

பிரமை தட்டிப் போயிருந்த காளத்திநாதன், பிரமையின் பிரேமைப் பிடியை விட்டு கையை உதறிக் கொண்டு, நிமிர்ந்து அமர்ந்தான். பஞ்சணை மெத்தை முள்ளாக உறுத்தியது. கண்கள் இரண்டினையும் கசக்கி விட்டுக் கொண்டு, விழி உயர்த்தி, விழிப்

பார்வை செலுத்தினுன் அவன். கசக்கி விடப்பட்ட கண்கள் வலித்ததைப் போலவே, முன்னேடிப் பாய்ந்த இதயமும் வலித்தது. சுற்றிச் சூழ நோக்கினுன். பற்றித் படர்ந்திருந்தது இளங் கதிரொளி. உடலின் இனம்புரியாத தவிப்பு, உள்ளத்தின் இனம் கண்ட கலக்கம், தூண்டிவிடப்பட்டிருந்த வெறியுணர்வின் தன்னுணர்வுப் போக்கு, நிறைவு பெருத உடலுறவுத் துடிப்பின் அட்டகாசமான சலனம், விழி இணையின் வெந்த நிலை - ஆகிய இத்தகைய சூழல்களிலே சுழல் வீச, வீசிய அந்தச் சுழலின் வேகம் தணியாத நிலையிலே, அவனுடைய முகத்தில் வந்து அணைந்தது, 'ஈவினிங் இன் பாரீஸ்' வாசனைத் திரவியத்தின் சுகந்த வாடை. இதம் பூத்த இதயம் அடுத்த இமைப்பில் அதிர்ந்தது ; அலறியது. "ஐயையோ!" என்று வாய் விட்டுக் கூவினுன் ; வாய் திறந்து அலறினுன்.

மறுகணம், அவனுடைய அழுகைக்குப் போட்டியாக பெண் குரலின் விசும்பல் ஓசை படர்ந்து வந்தது. பதறியவனுக - பதைப்புண்டவனுக, உடல் குலுங்கிய போக்குடனே தலையைத் திருப்பிப் பார்த்தான் அவன். சூன்யமே சூத்திரதாரியாகிச் சிரித்தது. அதுவேதான், ஒருகால், சிருஷ்டித் தத்துவமோ ? இல்லை, அந்த வெறுமையேதான் படைப்பின் பரம ரகசியமாக இருக்குமோ? அல்ல, அல்ல ! ஒரு சமயம், அது சிருஷ்டிப் புதிராகவும் இருக்கலாமோ ?...

வெளியில் வளி நிரப்பிக் கிடந்த சூன்யத்திலே பீறிட்டுக் கிளறிப் படர்ந்தொலித்த விம்மல் நாதம், அவனுள் கொதித்த எரிமலைக் குழம்பைக் கொட்டி ஊற்றும் விழிகளோடு அவனது இதயமும் சுழன்றது.

"மஹி!..."

தென்பு மறைந்த தெம்மாங்குப் பாவையென மஹேஸ்வரி நடந்து வந்தாள்.

பருவப்பொலிவின் உள்ளடக்கமாக விளைந்து நெளிந்து துடித்த கவர்ச்சி அவ்விரு கயல் விழிகளைத் துறந்து எங்கே மறைந்தோடியது ?

போதம் பூத்த உதட்டுக் கரையில் காற்று வாங்கித் தவழ்ந்த அந்தப் போதைப் புன்புறுவல் எங்கே ஓடி ஒளிந்தது ?

இளமைச் செழிப்பத்துக்குக் கடவுள் வணக்கமாக உரு அமைத்துக் கொண்ட அவளது முகத் தெளிவு எங்கே வனவாசம் போயிற்று ?

ஆடினாளே ?

பாடினாளே ?

சதங்கை மணி கயிற்றைவிட்டுத் தரையில் சிந்தி விழுந்தோடுவதற்கு நேராக, கணம் விட்டுக் கணம் நகை பயின்றாளே ? நடனம் பயின்றாளே ?

கோல முகம் குனிய, குமிழ்ச் சிரிப்பு நெளிய, கள்ள விழிப் பார்வை பனி பெய்ய திருமணப் பந்தலிலே காட்சி யளித்தபோது, அவளிடை மிளிர்ந்த அந்தக் கருவம் - பெருமிதம் - பூரிப்பு - புளகிதம் எங்கே ?

“ மஹி !...” கூப்பிட்டான் காளத்திநாதன்.

“ அத்தான் !” நாடி வந்தாள் மஹேஸ்வரி. பூங்கரம் பலகாரத் தட்டைச் சுமந்து வந்தது. “டிபன் சாப்பிடுங்கள் !” என்றாள். குரல் தழுதழுத்தது. முகம் வீங்கிப் போயிருந்தது. வதங்கிய மாம்பழக் கன்னங்களாக விளங்கின கன்னங்கள் இரண்டும். மார்பகம் உடனுக்குடன் நெடுமூச்சை நெட்டிப் பிடித்துத் தள்ளியவாறு இருந்தது.

" அழாதே மஹி!" என்று தேறுதல் சொன்னான். சொல்லிக் கொண்டிருக்கும்போதே அவனுக்கு நெஞ்சை அடைத்தது. நீர் சுழித்தது.

" நீங்கள் அழும்போது, நான் எப்படி அழாமல் இருக்க முடியும், அத்தான் ?"

" நான் அழுகிறேனா ?...இல்லையே ?"

" ஊஹும், பொய்!"

" இல்லை, இங்கே பாரேன்...!"

சொன்ன சொல்லை நிரூபிக்க வேண்டி, கண்ணீருக்கு 'சூ, மந்திரக்காளி' போட்டு அதை மறைத்து விட்டபடி, அவளை நெருங்கி, அவளுடைய தளிர்மணிக் கைகள் இரண்டையும் சேர்த்துப் பிடித்தான். அப்படிப் பிடிப்பதற்குள், அவளது விரல் நுனி ஸ்பரிசித்த 'மூளைப் பாசம்' அவனைக் கிறங்க வைத்தது!

மஹேஸ்வரியின் கைகள் மட்டுமல்ல, உடலும் சேர்ந்து நடு நடுங்கியது!

" சாப்பிடுங்கள் !"

அவள் கண்ணீர் அவன் முகத்தில் பட்டுத் தெறித்து, அவளது பட்டுமுகம் கறுத்தது. துடைத்தாள்.

அவனுக்குச் சிலிர்ப்பு - மெய்ச் சிலிர்ப்பு கிளர்ந்தெழுந்தது. "ஆண்டவனாலேகூட துடைத்துவிட முடியாத அவலக் கண்ணீரை நீ துடைத்து விடுவாயே, மஹி...?" என்று நெஞ்சு நெகிழ்ந்து, நெஞ்சுருகும் வண்ணமாய்ச் சொன்னான்.

அவள், "ஐயோ, தெய்வமே!" என்று ஓலம் பறித்தாள்.

இரு பக்கத்து நெற்றிப் பொட்டையும் அழுந்தப் பிடித்துக்கொண்டு அண்ணாந்து நோக்கிய வேளையில், அவன் பார்வையில் புதுக் கட்டிலும், புதிய பட்டு மெத்தை - தலையணைகளும் ஊர்ந்தன. அனைத்தும் புதுப்பிக்கப்பட்ட மூவர்ணச் சித்திரங்களென ஆடின. அவனை ஆடவைத்தன. மஹேஸ்வரியின் அடங்காத துன்பத்தின் ஒலிச் சிற்றலைகளை அடக்கிவிட எண்ண மிட்டான் அவன். அண்டினான். அவளுடைய கண்ணீரைத் துடைத்தான். அதுசமயம், சுவர்ப்பக்கம் அவன் திருஷ்டியை ஓட்டினான். மஹேஸ்வரியின் பெற்றோர்கள் படத்தில் அடங்கிக் காணப்பட்டார்கள். அடுத்த தாக, இன்னொரு படம். அது மிகவும் அந்தமாகயிருந்தது. மூன்றுகால் சைக்கிளில் அமர்ந்தபடி மஹேஸ்வரி காட்சி கொடுத்தாள்-பத்து வயசுச் சிறுமி மஹேஸ்வரி!

"மஹறி!..."

"நான் அழிந்து விட்டேன், அத்தான்!"

"அப்படியெல்லாம் சொல்லாதே, மஹறி...!" மனித மனத்தின் பலஹீன உணர்ச்சிகளைத் துச்சமென எண்ணி, அவற்றைச் சொடுக்கி ஓட்ட விழைந்தவன் போன்று அவன் பேசினான். சித்தம் என்பது கைப்பிள்ளை விளையாட்டுப் போலும்! அது ஒன்றை நினைத்து, பிறிதொன்றைச் சித்திரித்தது. மலர்க்கணை வீசி விளையாடிய ரதி—மன்மதன் விளையாட்டு ஏடு விரிந்தது. 'நீயும் நானும் ஒரு சில நிமிஷங்கள்தான் ரதி—மன்மதன் வேஷம் போட்டுக் கொண்டோம். எல்லாம் பொய் வேஷங்கள்!...இதோ பார், ஓவியனின் தூரிகையில் வாழுகிறார்கள் மாரன் தம்பதி! வாழும் காதலுக்கு வடிவு கொடுத்து விளங்கும் இவர்களை உனக்குப் பிடிக்கவில்லையா? சொல், மஹேஸ்வரி!...'

என்று அவன் கேட்க,:அவள் 'உங்களுக்கு ஏன் இந்தச் சந்தேகம்?...மேள தாளத்தோடு எனக்குப் பிடிக்குமே!...' என்று பதிலிறுத்த வாசகம் எதிரொலி பரப்பிற்று.

" சாப்பிடுங்கள் !"

" நீ...!"

" எனக்குப் பசியில்லை !"

" என் பசியும் அடங்கி விட்டது ;"

" இரவு பூராவும் நீங்கள் உறங்கவில்லையே ?"

" நீயும் தானே ?..."

" சரி. நான் இந்தக் காப்பியைக் குடிக்கிறேன். நீங்கள் பலகாரம் சாப்பிடுங்கள் !"

அவன் இட்டலி ஒன்றைக் கிள்ளினான். வாயில் போட்டான். விக்கல் எடுத்தது. நீர் வேண்டினான். அருகிருந்த குவளையை எடுத்தான். அவள் ஏந்தியிருந்த காப்பிக் குவளையை அருகிலிருந்த மேஜைமீது ஏறித் தட்டிவிட்டு ஓடியது நாய்க்குட்டி. வடிந்த காப்பியை நக்கியது. மறுகணம், அது சுருண்டு விழுந்தது !

காளத்திநாதன் உயிர்வதைப் பட்டான். "என்ன காரியம் செய்யத் துணிந்தாய், மஹி?...இந்தக் காப்பியையா நீ குடிக்கத் துணிந்தாய்?..." என்று அழுதான்.

மஹேஸ்வரி வாயடைத்து நின்றாள்.

ஒருக்களித்து நின்ற கதவிடுக்கின் வழியே தோன்றினாள் அங்கயற்கண் அம்மாள். ஏதும் விளங்காமல், புதிர்க் குவியல்களுக்கு ஊடே அவளது தாய்

உள்ளம் தவியாய்த் தவித்து, தண்ணீராய் உருகிக் கொண்டிருந்தது.

" மஹ்றி!...மஹ்றி!..." என்று தேம்பியபடி அவளது முகத்தைத் தடவினுன் அவன். முகம் தெரிவித்துச் சின்னபின்னமாய்க் கிடந்த அழகுக் கவர்ச்சிப் படங்களை ஆராய்ச்சி செய்ய இப்போது அவனுக்கு மனம் இல்லை என்பதை உணர்த்துபவனுக, அவற்றைக் காலால் எட்டி உதைத்தான். அவன் அமர்ந்தான். அவளையும் தன் உடலுக்கு ஆதரவாக உட்கார வைத்துக் கொண்டு, இட்டிலியைக் கிள்ளிக் கொடுத்து, அவனும் சாப்பிட்டான். புதிதாகக் கொணர்ந்த காப்பியைச் சோதிக்க, முதலில் தானே குடித்து, பிறகுதான், எஞ்சியதை அவளிடம் கொடுத்தான். " எங்கே, சிரி!... நேற்றிரவு தொடக்க நேரத்திலே சிரித்தாயே, அப்படி இம்முறையும் சிரி, மஹ்றி!" என்று குழைந்தான். மனித நெஞ்சத்தின் இனக் கவர்ச்சி உணர்வுகள் அவனுடன் கண்பொத்தி விளையாடின. அவனுடைய விரல்கள் எப்படி யெல்லாமோ—எங்கெல்லாமோ விளையாடின. தன் ஞாபகம், விழிப்புப் பெற்றபோது, வாசற் கதவுகள் மூடிக்கிடப்பதைக் கண்டு நல்ல மூச்சை அனுப்பினுன்.

ஜோடிச் சிரிப்பு வழிந்தது!

அழிந்த கனவுகளின் மயானபூமியில் நகை காட்டும் எழிலார் வெண்ணிலவை ஒப்ப, அந்த அழகுக் கூடத்தில் இளம் பொற் கிரணங்கள் தடம் காட்டிக் கொண்டிருந்தன!

அழகே வடிவமாய்க் காணப்பட்ட ஆண்டாள் வந்து நின்று கதவைத் தட்டவே, காளத்திநாதன் திறந்தான். ஆண்டாளைக் கண்டவுன்டன், "வா" என்று வரவேற்றுன். 'ஆண்டாள் தங்கமான பெண்.

தனக்குரிய சொத்து கைமாறிப் போனதைப் பற்றிய கவலையை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல், எவ்வளவு அமைதியோடும் நாகரீகமாகவும், நாசூக்காகவும் நாணயமாகவும் வந்து இருந்து எங்கள் கல்யாணத்தை நடத்தி வைத்தாள்! ஆனால்...?'

தியாகம் என்ற பண்பு நலம் சொல்லிக்கொண்டு வருவதில்லை. மனம் தவம் இருந்து பக்குவப்பட வேண்டும். அல்லவா?

காளத்திநாதனுக்குத் தன் முறைமைப் பெண்ணைப் பார்க்கப் பார்க்க அதிசயமாகப்பட்டது. அவளே அதிசயப் பொருளாகவும் மாறித் தோன்றினாள். பெண்மையின் உள்ளத் திண்மையை ஓர் அன்பு உலகமாக—இணையற்றதோர் அற்புதச் சக்தியாக—வாழ்வுக்கு வழி காட்ட முனைந்து நிற்கும் முன்னோடிக் குறிக்கோளாக அவன் மதித்தான். "அத்தான், நீங்க இல்லாட்டி, நான் இல்லை! இதை எப்பவும் மறந்திடாதீங்க!" என்று 'பருவம்' பூத்த போழ்தில் சொன்ன அதே ஆண்டாள், இப்போது எப்படி இவ்வளவு தென்பு பெற்றுவிட்டாள்?

"அத்தான்!..."

கைப்பிடிப்பில் இருந்த புத்தகத்தை எடுத்து, குறிப்பிட்ட ஓரிடத்தில் அடையாள ரிப்பனை வரிகட்டி வைத்தான். திருமணத்துக்கும் வாழ்க்கைக்கும் லாயக்கற்ற பெண்களைப்பற்றிய நூல் அது. நூலின் உள்ளுறை உண்டாக்கிவிட்ட கறுமை நிழல் அவனது முகத்திரையிலும் வடிந்திருந்தது!

"ஆண்டாள்!..."

"அத்தான், இந்த லெட்டரை உங்களிடம் மஹிகொடுக்கச் சொன்னார்கள்!"

" மஹறியா ?... மஹறிக்கு உடம்புக்கு ஒன்றுமில் லையே ?..." என்று பதட்டத்துடன் வினவினான் அவன்.

" ஏதுமில்லை. அறையில் புத்தகம் படித்துக் கொண்டிருக்கிறார்கள் !" என்று பதில் விவரித்தாள் ஆண்டாள்.

அந்தி வெயிலின் மயக்கம் மண்டிய ஒளியும் காற் றும் அவனைக் கிறங்கச் செய்தன. இனம் மட்டுப்பட மாட்டாத ஓர் ஏக்கமும், பகுத்துணர வாய்க்காத ஒரு வகை வேதனையும் அவனது உள்மனத்தில் நிறைந்து விட்டிருப்பதை அவனால் நினைக்காமல் இருக்க முடியுமா ?

ஆண்டாள் நீட்டிய கடிதம் :

" மதிப்புக்குரிய அன்பான அத்தான் அவர்களுக்கு,

நேரில் சொல்லத் தெரியவில்லை எனக்கு. என் உடன் பிறவாச் சகோதரியைத் தூது விடுத்திருக் கிறேன்.

என்னை நான் புரிந்துகொண்டேன் !

நான் உங்கள் உயிர் என்பீர்கள் அடிக்கடி. முதல் இரவிலும் இவ்வுண்மையை வலியுறுத்திச் சொன்னீர்கள்.

நீங்களே என்னுடைய உயிர்த் தத்துவம் !

உங்கள் முகதரிசனம் கிட்டிய நாளிலிருந்து நீங்களே என் தெய்வம் ஆனீர்கள் : காதற் கடவுள் ஆனீர்கள். 'சொல்லித் தெரிவதில்லை மன்மதக் கலை' என்ற பாடல் வரிகளைப் பாடி என்னை ரசித்து மகிழ்ந்த காட்சியில்தான் என் வாழ்வும் வளமும், கனவும் காதலும் களி நடமிடுகின்றன.

நீங்கள் என் தெய்வம்.

உங்கள் அடியாள்—பக்தை ஒரு வரம் கேட்கிருள்.

ஆண்டாளை நீங்கள் ஆட்கொள்ள வேண்டும்.

உங்களது புதுமணத் தாம்பத்தியத்தில்தான் நான் மன அமைதி காண முடியும்.

" இல்லையேல், என் உயிர் உடலில் தங்க ஒப்பாது!

உங்கள் உயிர்த்துணை.
மஹேஸ்வரி."

கடிதத்தைப் படித்து முடித்ததும், ஆண்டாளை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்தான் காளத்திநாதன்.

" என்ன அத்தான், அப்படிப் பார்க்கிறீர்கள்?..."

" உன்னிடம் மஹி ஏதும் சொல்லவில்லையா?"

"இல்லையே!..." பரிவு, பதட்டம், பச்சாத்தாபம் போன்ற பொறி யுணர்வுத் துடிப்புக்கள் அத்தனையையும் நேத்திர வட்டங்களுக்குள் கொணர்ந்தவாறு விடை யளித்தாள் ஆண்டாள்.

" ஊம்!...சரி...சரி!..."

அப்போது, அங்கயற்கண் அம்மாள் விரைவு பாய்ச்சி வந்து, "தமிழ்ச் சித்தன் நிலை படுமோசமாகி விட்டதாம். அவர் தகப்பனுர் போன் செய்தார்" என்ருள்.

" அவன் எக்கேடு கெட்டுப் போகட்டும்!...யாருக்கென்ன?..." என்று சத்தம் போட்டான் காளத்திநாதன். வேர்வை வெள்ளத்தில் முகம் நீந்தியது.

பிறந்த மேனியாக முன் இரவில் தரிசனம் தந்த மஹேஸ்வரியின் உருவப் பொலிவைத் துணைகொண்டு, மாடிக்கு ஓடினுன் காளத்திநாதன். “மஹி!... மஹி!” என்று கூப்பாடு போட்டான்.

மஹேஸ்வரி படுத்துக் கிடந்தவள் எழுந்து நின்ருள். தலைமுடி அவிழ்ந்து முடியப் பெற்றிருந்தது. எளிமை மிக்க உடைகள் மேனியைத் தழுவியிருந்தன. அணிகலன்களைத் துறந்துவிட்டிருந்தாள் அவள் நெற்றிப் பொட்டு தூய்மைக்குப் பிரதிநிதித்வம் பேசியது; அவளது மாங்கல்ய பாக்கியத்தின் பெருமையில் பங்கேற்றது. சிவப்புத் தோலில் அழகு பேசியது.

மஹேஸ்வரியையே தொடுத்த கண் விலக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான் அவன். அவனது உள்ளோலம் புது உருவம் கொண்டது; உணர்வின் வெறிக்கோலம் அழிந்தது. பலஹீனமாக இன்ப நுகர்ச்சிக் குறிப்புகளுள் தவித்த உள்ளம் படிப்படியாகச் சமன் நிலைபெற முடிந்தது. தலைமுடி பம்பையாகப் பறக்க, முகப்பொலிவில் வேர்வை முத்துக்கள் உடைந்து புரள, உள்ளம் இழந்த நிலையைச் சிறுக சிறுக மீட்டுக்கொண்ட பாவனையில், அவனுடைய மேனியின் நடுக்கமும் குறைந்து வந்து, உடலாட்டம் நின்றது. சட்டையைத் தூக்கிவிட்டு, வெளிக்காற்றை உடலில்பட விட்டான் அவன்; கண்ணீரைத் துடைத்துக் கொண்டான். மீண்டும் மஹேஸ்வரியைப் பார்வையிட்டான். கோயிலின் கருவறையில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் அம்பிகையின் நினைவை அவளது உருவம் எடுத்துச் சொன்னது அந்த அமைதி தனி; அந்தக் கம்பீரம் தனி; அந்த வீரம் தனி; அந்த அழகு தனி; அந்தக் கனிவே தனி; அந்தக் கனவே தனி; அந்தக் கதையே தனி!

அவன் கண்களை மூடி மூடித் திறந்தான். கை தொடுத்துக் கும்பிட வேண்டுமென்ற அரிப்பு ஊறியது.

நோன்பு இயற்றியவன், நோன்பு வெற்றியுடன் முடிந்ததைக் கண்டு மகிழ்ந்து துடிப்பது மாதிரியாக அவன் துடித்தான்.

மஹேஸ்வரி ஆழ்ந்த அமைதி கூட்டிச் சிரித்தாள். மனப்பலம் கொண்டு மனத்தவம் இயற்றி நோன்பிருக்கத் திட்டமிட்டிருக்கும் நெறிமுறையின் முத்திரை அவள் முகத்திரையில் பதிந்திருந்ததோ?...

"என் வரம் பலித்து விட்டதா, அத்தான்?

"மஹி, இப்போது நான் அல்லவா உன்னை வரம் கேட்க வந்திருக்கிறேன்!"

"நான் தெய்வம் அல்லவே, அத்தான்...?"

"நீ தெய்வம் தான். விடிப் பொழுதுக்கு முன்பு வரை உன்னை சாதாரணமான மானுடப் பெண்ணென்றுதான் நினைத்திருந்தேன். இப்போது நீ தெய்வமாகக் காட்சி தருகிறாய். உன் தூய எழில் என்னையே புதுப்பிறவி எடுக்கச் செய்துவிட்டது. நேற்று நிகழ்ந்த முதலிரவு என் வாழ்வின் பாடமாக வாய்த்தது. இதை நான் இப்போதுதான் உணர்ந்தேன். இரவு பூராவும் நான் நொந்து வடித்த கண்ணீர் வெள்ளத்திலால்தான் என் மனம் தூய்மை பெற்றிருக்க வேண்டும். நான் பாக்கியவான்! தெய்வமே அழகாக—அன்பாக—அறமாக—தூய்மையாக வடிவு கொண்டு என்னை ஆட்கொள்ள அவதாரம் எடுத்திருக்கிறது. ஆஹா! என்னைப்போல அதிருஷ்டசாலி வேறு யார் இப்பூவுலகிலே இருக்கக்கூடும்?...உன் தரிசனம் ஒன்றுதான் இனிமேல் எனக்குக் கனவு, வாழ்வு எல்லாம்! உன்னை

இல்லறப் பிணைப்புக்குச் செம்மைப்படுத்த, டாக்டர்கள் பலரின் ஏகோபித்த கருத்துப் பிரகாரம், அயல்நாட்டுக்கு உன்னை அழைத்துச் செல்ல வேண்டுமென்று தான் சற்று முன்வரை திட்டமிட்டிருந்தேன். இப்போது, அந்த நினைப்பைத் திரும்பவும் மனத்தில் கொண்டு வந்து பார்க்கவே அஞ்சுகிறேன். ஏனெனில், நீ என் தெய்வம்!...மஹி!...உன் உயிர்தான் என் உயிரை வாழவைக்கும். என் உயிர்தான் உன்னையும் வாழச் செய்யும். தெய்வம் வேறு யாருக்கும் அமைத்துக் கொடுக்காத ஒரு புது முறை வாழ்வு நம்முடையது. இந்த ஆன்மீக வாழ்வில் நம் உயிர், உலகம் எல்லாம் உள்ளடங்கிக் கிடக்கின்றன. தெய்வத்தைப்போல, நான் புதிரல்ல; ஆனல் நீ என் தெய்வம். அதற்காக, நீ புதிர்வட்டமாகி விடாதே! நம் இருவர் உயிரும் உள்ளமும் ஒன்றிலிருந்து இன்னொன்ருக கூடுவிட்டுக் கூடு பாய்ந்திருக்கின்றன. அல்லவா? ஆம்; இதுவே நம் இருவர் சம்பந்தப்பட்ட சிருஷ்டித் தத்துவமாகும். மறந்து விடாதே மஹி, மறந்து விடாதே!...''

உணர்ச்சிச் சுழிப்பில் தத்தளித்தான் காளத்தி. ஆனந்தக் கண்ணீர் வழிந்தோடியது.

மஹேஸ்வரி சிலை உருவம் புனைந்தாள்.

அப்போது, ஆண்டாள் மீண்டும் ஒரு கடிதத்துடன் அங்கு வந்தாள்.

காளத்திநாதன் படிக்கலானுன்:

"என் உயிர்த்துடிப்புக்கு உறுதுணையான காளத்தி!

ஓர் உண்மையைச் சொல்லவே இக்கடிதம் தொடர்கிறது. ஓர் உண்மையை மறைத்து, ஒரு பொய்யை உண்டாக்கவே, நான் கடந்த சில மாதங்களாக ஒரு நாடகம் ஆடினேன். நீங்களும்

மஹேஸ்வரியும் என்னை ஏசினீர்கள்; சபித்தீர்கள்!...மஹ்றி மூன்று கால் சைக்கிள் வண்டியை ஓட்டி விளையாடுகையில் ஏற்பட்ட விபத்தின் காரணமாக, அவளுக்கு ஒரு துரதிர்ஷ்டம் வாய்த்தது. வாழ்க்கையில் அவள் அனுபவப் பொருளாக ஆக வாய்ப்பிருக்காது என்று டாக்டர்கள் கூறினார்களாம். இதை மஹ்றியின் தந்தை என்னிடம் கூறினார். உங்களை விரும்பிய மஹ்றியை உங்களிடமிருந்து பிரிக்க நான் நடித்தேன்; ஆமாம், நடித்தேன். ஏன் தெரியுமா?—நீங்கள் வாழ்வில் ஏமாந்து விடலாகாதே யென்று!...என் வரை, அன்றும் இன்றும் மஹ்றி ஓர் அழகின் ஆதரிசத் தத்துவமாகவே காட்சி தருகிறார்கள்! மேற்படி உண்மைச் சொல்லத்தான் சந்தர்ப்பத்திற்காகத் தவம் கிடந்தேன். ஆனால், சொன்னால்தான் நீங்கள் எப்படி நம்பியிருக்கப் போகிறீர்கள்? நான் பாவி! ஒருவேளை, கடவுளை நிந்தித்த பலனால்தான் என்னுடைய இந்தக் கனவு கைகூடாமல் போயிற்றா? நட்பின் இலக்கணமாக அமைந்து, என் தியாகச் செய்கையின் மூலமாக உங்கள் வாழ்வில் ஒளித் தீபம் ஏற்ற முயன்ற நான் என் முயற்சியில் தோற்றுப் போனேனே? ஐயையோ!.. நான் கொடுத்து வைக்காதவன்!...ஈசனே!...

உங்கள் உயிர்த்தோழன்,

தமிழ்ச்சித்தன்.''

அடித்துப் புரண்டு வரும் ஆடி வெள்ளமாக வழிந்தது விழிப்புனல். காளத்திநாதன் கண் இமைப் பொழுதுக்கு இமைப்பினை மறந்தான். மேனி குலுங்கியது. கைகளை நெறித்துக் கொண்டான், 'தமிழ்ச்சித்தன்!...

தமிழ்ச்சித்தன் !' என்று முனகினான். பிறகு, எதிரே நடந்தான். ஆண்டாளை அண்டிப் போனான். தேம்பியவாறு, "ஆண்டாள், உன்னைத் தமிழ்ச் சித்தனிடம் ஒப்படைக்கப் போகிறேன். ஒப்புவாயல்லவா ?..." என்று கெஞ்சினான்.

"அத்தான், என் பெயரை மறந்துவிட்டீர்களா ?..." என்று எதிர்க் கேள்வி தொடுத்துக்கொண்டே அங்கிருந்து நகர்ந்த நேரத்தில், மஹேஸ்வரியின் கடிதம் அவளது கால் விரல்களில் சிக்குண்டது.

காளத்தியின் உலகம் தட்டாமாலை சுற்றிற்று !

"மாப்பிள்ளை, தமிழ்ச்சித்தனின் வாழ்வு முடிந்துவிட்டதாம் !" என்று துயர்ப்பெருக்குடன் அறிவித்தாள் அங்கயற்கண் அம்மாள். கூட மஹேஸ்வரியின் தோழி தெய்வயானை நின்றாள்.

"ஐயோ, தெய்வம் என்னைச் சோதித்துவிட்டதே !" என்று கூக்குரலிட்டான் காளத்திநாதன்.

"அத்தான் !..."

மெய் விதிர்க்க, குரல் நடுங்கக் கூப்பிட்டுக்கொண்டே காளத்தியை நெருங்கி வந்தாள் மஹேஸ்வரி.

"அத்தான் !..."

காளத்திநாதன் ஏறிட்டு விழித்தான். வெள்ளம் வடிந்து விடுமா ?...

"அத்தான் !...

அவளது மூச்சு தன் மேனியில் படாத அளவுக்குச் சற்றே விலகி நின்றான் காளத்தி.

மஹேஸ்வரியின் அழுகை விண்ணை முட்டிச் சென்றது.

அந்தி நிலா வானத்தில் இருந்தது !

**அவ்வளவுதான் !**

Newspapers and Books Are Purchased ROAD, MADRAS-6